# திருக்குறளில் வேளாண்மை

இல. செ. கந்தசாமி, எம். ஏ.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர் (மொழித் துறை),
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.

வெளியீடு :

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர்.

1973

# அணிந்துரை

திருக்குறள் தமிழ்மொழியின் மிகப்பழமையான நூல். இந்நூல் உலக மக்கள் போற்றும் உயர்ந்த நூலாகவும் விளங்குகின்றது. எக்காலத்திற்கும் பொருந்தும் பொதுக் கருத்துக்களைக் கொண்டு விளங்குவதால் உலக நூல் என்று போற்றப்பட்டு வருகின்றது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளின் ஆசிரியர் திருவள்ளுவர் ஓர் உழவர் என்று கூறினாலும் பொருந்தும். ஏனெனில் உழவு என்ற ஒரு அதிகாரத்தை வகுத்து அதில் உழவு பற்றிய அடிப்படையான கருத்துக்களை எல்லாம் விளக்கி உள்ளார். அவர் வழி நின்று திருக்குறளில் வெளிப்படையாகவும், குறிப்பாகவும், உவமை வாயிலாகவும் கூறியுள்ள கருத்துக்களை ஆராய்ந்து எழுதப்பட்டதே 'திருக்குறளில் வேளாண்மை' என்னும் நூல்.

இந்நூலில், வேளாண்மை என்னும் சொல்லுக்குரிய பொருள் விளக்கம், நிலத்தை வகுத்துக்கொண்ட முறை, நீர்நிலைகளை அமைத்துக் கொண்ட விதம், உழவியல் முறைகள், விளைவிக்கப்பட்ட பயிர்கள், கால்நடைகளைப் போற்றிய விதம் முதலியன தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் மீன்வளம், வனச் செல்வம் முதலியவைகள் பற்றியும், சிற்றூர் முன்னேற்றம், மனையியல் பற்றிய கருத்துக்களும் புதிய கண்ணோட்டத்தோடு ஆராயப்பட்டுள்ளன.

தற்பொழுது வேளாண்மைப் பல்கலைக்கழகங்களில் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த போதித்தல், ஆராய்ச்சி, விரிவாக்கம், மற்றும் வேளாண்மையைச் சேர்ந்த கால்நடை, மீன்வளம், வன இயல், மனையியல் ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்படவேண்டிய அவசியத்தை வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமக்கு உணர்த்தி உள்ளார் என்பதை நோக்கும் போது இந்நூலின் சிறப்பு நன்கு விளங்கும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் நடந்து வந்த வேளாண்மையைப் பற்றி அறிந்து கொள்ளத் 'திருக்குறளில் வேளாண்மை'யை ஒரு வரலாற்று நூலாகக் கருதலாம். இந்நூல் அறிவியலையும், இலக்கியத்தையும் இணைக்கும் பாலமாக அமைந்து உள்ளது. தமிழின் பெருமையையும், தமிழினத்தின் அறிவாற்றலையும் நிலைநாட்ட இத்தகைய நூல்கள் வெளிவர வேண்டுவது அவசியமாகும்.

'திருக்குறளில் வேளாண்மை' என்ற இந்நூலைத் தமிழ் இலக்கியத்தில் முதல் முழுநூலாக வெளியிடுவதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பெருமை கொள்கிறது. இந்நூலை எழுதிய தமிழ்த்துணைப் பேராசிரியர் திரு. இல. செ. கந்தசாமி அவர்களுக்கு என் பாராட்டுக்கள். இந்நூலை வேளாண் பெருங்குடி மக்களும், மாணவர்களும், அறிஞர்களும், மற்றும் ஏனையோரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்பது எனது அவா.

கோயமுத்தூர்,
12-8-1973.

**கோ. அரங்கசாமி,**
துணை வேந்தர்,
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.**

# ஆய்வுரை

கோவை தமிழ்ப்பேராசிரியர் திரு. இல. [redacted], எம். ஏ., அவர்களால் எழுதப்பெற்ற திருக்குறளில் வேளாண்மை என்ற ஆராய்ச்சி நூல் என் பார்வைக்கு வந்தது; படித்து மகிழ்ந்தேன்.

இதுவரை தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்ப்பேராசிரியர்கள் திருக்குறளை அணுகி ஆராய்ந்த முறைகளில் இது ஒரு புதிய முறை. ஆசிரியரின் இப்புது முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கது.

இதுவரை திருக்குறளைக் கற்றவர்களும் கண்டறியாத காட்டின் உறுப்பு, ஆற்றின் சிறப்பு, நிலத்தின் இயல்பு, நீரின் வளம், மண்ணின் தரம், பயிரின் செழிப்பு, எருவின் தகுதி, ஏரின் உயர்வு, உழைப்பின் பலன், உழவனின் பெருமை ஆகியவைகளை இந்நூலாசிரியர் நுணுகி, ஆராய்ந்து, கண்டு, எடுத்து, விளக்கமாக இந்நூலில் குறிப்பிட்டு இருப்பது போற்றக் கூடியதாகும்.

இக்கால அறிவியல் அறிஞர்கள் பலர் துருவி ஆராய்ந்து கண்டுபிடித்துக் காட்டுகின்ற விலங்கினங்கள், பறவையினங்கள், சிறு உயிரினங்கள், பயிரினங்கள், பயிர்த்தொழில் முறைகள் ஆகியவற்றின் தன்மைகளை 2,000 ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் ஆராய்ந்து கூறி இருப்பதும், அவற்றை இந்நூலாசிரியர் நுணுகி அறிந்து இந்நூலில் குறிப்பிட்டிருப்பதும், நம்மை வியப்படையச் செய்கின்றன.

இப்படி ஒரு நூலை வெளியிட வேண்டுமென்று எண்ணி ஊக்குவித்த தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் திரு. கோ. அரங்கசாமி அவர்களையும், இந்நூலை வெளியிட்டுத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு வழங்கியுள்ள வேளாண்மைப் பல்கலைக் கழகத்தையும் தமிழக மக்கள் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றனர்.

ஆசிரியர் திரு. இல. செ. கந்தசாமி, எம். ஏ., அவர்கள் இது போன்று இன்னும் சில நூல்களை எழுதித் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் எனவும் தமிழக மக்கள் இதனைப் பயன்படுத்திப் பலனடைய வேண்டுமெனவும் முழுமனதுடன் வேண்டுகிறேன்.

திருச்சி-8,
31-7-73.

**கி. ஆ. பெ. விசுவநாதம்**

# முன்னுரை...

திருக்குறள் உலகப் பொதுமறை; எக்காலத்திற்கும் பொருந்தும் பொதுமைக் கருத்துக்களைக் கூறும் அறநூல். இத்தகைய சிறப்பு வாய்ந்த நூலைப்பற்றிச் சென்னை, அண்ணாமலை, மதுரை ஆகிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தமிழக அரசு, திருக்குறள் ஆராய்ச்சிக்கென மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் ஒன்பது லட்சம் ரூபாய் முதலீடாக அறக்கட்டளை நிறுவியுள்ளது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் தமிழகத்தில் தோன்றிய நான்காவது பல்கலைக்கழகமாகும். இது ஒரு தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகமாயினும் தமிழ்மொழி மீதும் தமிழ் இலக்கியங்கள் மீதும் பெரிதும் ஈடுபாடு உடைய பல்கலைக் கழகமாகும். அவ்வீடுபாட்டின் அகச்சான்றே "திருக்குறளில் வேளாண்மை" என்னும் இந்நூலாகும். இப்பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் கோ. அரங்கசாமி அவர்கள் "பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள வேளாண்மைச் செய்திகளை ஆராயவேண்டும்" என்று வெளியிட்ட எண்ணமே இந்நூல் உருப்பெறுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. பத்துப்பாட்டையும் எட்டுத்தொகை நூல்களையும் ஆராய்வதற்கு முன்னோடியாக இந்நூல் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெறுகின்றது.

திருவள்ளுவர் அறக்கருத்துக்களைக் கூற வந்த அறவோர். அவரது நூலில் அறக்கருத்துக்களே மிக்கு விளங்கும். அதுவே எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்புடையதாகும். அறக்கருத்துக்களை விளக்கப் பயிர்களையும் பிற உயிர்களையும் எடுத்துக் காட்டாகக் கூறியுள்ளாரே அன்றி அவரது நூல் பயிர் நூலோ உயிர்நூலோ அல்ல. ஆதலின், திருக்குறளில் பயிரின் பாகங்கள் குறிக்கப்படவில்லை என்றோ விலங்கின் உடல் கூறுகள் விளக்கப்படவில்லை என்றோ எண்ணுவது பொருந்தாத எண்ணமாகும். அவர் பயன்படுத்திய வேளாண்மைச் சொற்களைக் கொண்டும், அச்சொற்கள் பயன்படுத்தப்பட்ட இடச் சூழலைக் கொண்டும் அன்று வேளாண்மைத் துறையில் மேற்கொண்ட முறைகள், இடப்பட்ட பயிர்கள், பயன்பட்ட கால்நடைகள், கருவிகள் முதலியன ஆராயப்பட்டுள்ளன.

இன்று வேளாண்மைத் துறையில் மாபெரும் முன்னேற்றம் காணப்படுகின்றது. புதுமைக் கண்டுபிடிப்புகள், புதுமைக் கருவிகள், புதுமுறைக் காப்புகள், பல்துறை ஆராய்ச்சிகள் முதலியன இன்றைய சாதனைகளில் சில. என்றாலும், அடிப்படையான மனிதத் தன்மைகள் உலகெங்கிலும் ஒன்றாக விளங்குவது போல அடிப்படையான உழவியல் ஒற்றுமைகள் அன்றும் இன்றும் ஒன்றாக விளங்கக் காண்கின்றோம். ஆதலால் மேல்நாட்டு வேளாண்மை முறைகளில் ஆராய்ச்சி செய்வது போல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழினம் மேற்கொண்டிருந்த வேளாண்மை முறைகளில் ஆராய்ச்சி செய்து பயன்விளைக்கத் தூண்டுவதே இந்நூலின் நோக்கமாகும். அன்றியும், அனிச்சம் போன்ற அரிய மலர்களை ஆய்ந்து பண்டைப் பெருமையை நிலைநாட்டுவதோடு, வள்ளுவர் கூறும் "விதையில்லாப் பழம்" முதலாய புதிய கண்டுபிடிப்புகளைச் செய்து உலக அரங்கில் வெற்றிக் கொடி காட்டிட வேண்டும். வள்ளுவர், குறளை உலகினுக்குத் தந்து பெரும்புகழ் கொண்டது போல அவர் வகுத்த வேளாண்மை நெறிமுறைகளை உலகுக்கு அளித்து உலகம் செழிக்க உழுது, உழைத்து, உயர்வோமாக!

இந்நூலுக்கு அணிந்துரை நல்கிப் பெருமைப்படுத்திய துணைவேந்தர் அவர்களுக்கும், பல்வேறு பணிகளுக்கிடையே நூல் முழுதும் பார்வையிட்டுச் செப்பம் செய்து ஆய்வுரை வழங்கிச் சிறப்பித்த முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கும், இந்நூல் உருவாக்கத்திற்கு உதவிய மொழித் துறைத்தலைவர் திரு. ஆர். சுதர்சனம் அவர்களுக்கும், இந்நூல் வளர்ச்சிக்குப் பல்லாற்றானும் துணை நின்ற தமிழ் விரிவுரையாளர் திரு. சு. செயராசு கத்தாணியல் அவர்களுக்கும், இந்நூலைப் பல்கலைக்கழக வெளியீடாக்கிய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினருக்கும் எனது உளங்கனிந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கோயமுத்தூர்,
12—7—1973.

இல. செ. கந்தசாமி

# பொருளடக்கம்

## திருக்குறளில் வேளாண்மை


| | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருக்குறள் ... | 1 |
| 2 | வேளாண்மை - சொற்பொருள் விளக்கம்... | 5 |
| 3 | நிலப்பாகுபாடு ... | 14 |
| 4 | நீர்நிலைகள் ... | 24 |
| 5 | உழவியல் ... | 31 |
| 6 | பயிரியல் ... | 39 |
| 7 | மரம் செடி கொடிகள் ... | 45 |
| 8 | மலர் காய் கனிகள் ... | 51 |
| 9 | கால்நடைகள் ... | 58 |
| 10 | விலங்கினங்கள் ... | 64 |
| 11 | நீர்வாழ்வன ஊர்வன பறப்பன ... | 72 |
| 12 | வேளாண்மைப் பொறியியல் ... | 81 |
| 13 | சிற்றூர் முன்னேற்றம் ... | 89 |
| 14 | வேளாண்மைத் துணைத்தொழில்கள் ... | 98 |
| 15 | கூட்டுறவு ... | 106 |
| 16 | மனையியல் ... | 115 |

# 1. திருக்குறள்

இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பிரிவுகளைக் கொண்டது. நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களில் ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களைக் கூறுவது. இந்நூலின் கருத்துக்கள் எக்காலத்திற்கும் எல்லா மக்களுக்கும் பொருந்துமாறு அமைந்துள்ளமையின் இதனைப் பல்வேறு மொழியினரும், பல்வேறு மதத்தினரும், பல்வேறு நாட்டினரும் தத்தம் நூலாகப் போற்றுகின்றனர். இந்நூலுக்குப் பல மொழிகளிலும் மொழிபெயர்ப்புகள் வெளிவந்துள்ளன. "உலகில் வேறு எந்த இலக்கியத்திற்கும் இவ்வளவு மொழிபெயர்ப்புகள் இல்லை" என்பதே இந்நூலின் சிறப்புக்கோர் எடுத்துக்காட்டாகும்.

அறத்துப்பால் தனிமனித ஒழுக்கத்தைக் கூறுகின்றது. மழையின் சிறப்பு, இல்லறத்தின் மாண்பு, துறவறத்தின் பெருமை, ஊழின் வலிமை ஆகியவை விரிவாக விளக்கப்பட்டுள்ளன. "மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்" என்பது அறத்துப்பாலின் சாரமாக அமைந்துள்ளது.

பொருட்பால் சமுதாய நெறிமுறைகளை விளக்குகின்றது. மன்னனின் கடமைகள், நாட்டின் உறுப்புக்களாகிய படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய துறைகள், உழவு, வாணிகம் முதலாய தொழில் முறைகள் முதலியன இப்பகுதியில் விளக்கப்படுகின்றன. நன்னெறியில் வந்த பொருளானது அறமும் இன்பமும் நல்கும் ஆதலின் "செய்க பொருளை" என்று கூறுவது இப்பாலின் இன்றியமையாத அறிவுரையாகும்.

இன்பத்துப்பால் எனப்படும் காமத்துப்பால் காதல் ஒழுக்கத்தை விரித்துரைக்கின்றது. திருமணத்திற்கு முன்னும் பின்னும் உள்ள களவு, கற்பு என்ற இரு நிலைகளில் காதலரின் பழங்கால ஒழுகலாறுகளை விளக்கி, ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டினை எடுத்தியம்பு கின்றது. உடம்பும் உயிரும் போலக் காதலர்கள் ஒன்றிய கருத்துடையவர்களாக விளங்கவேண்டும் என்பது இப்பகுதியில் வற்புறுத்தப் பெறுகின்றது.

(முப்பால் மணம் வீசும் திருக்குறளைத் துளசிச் செடிக்கு ஒப்பிடலாம். துளசிச்செடி வேர் முதல் நுனி வரை ஒவ்வொரு பகுதியும் மணம் உடையது. திருக்குறளும் அத்தகையதே) துளசி தோற்றத்தால் மிகவும் எளிமையானது. குறள் வடிவாலும், ஓசையாலும், யாப்பாலும் எளிமையானது. துளசிச்செடி பிணி தீர்க்கும் நன்மருந்தாகும். அதுபோலத் திருக்குறளும் அறியாமைப் பிணியைப் போக்கும் அருமருந்தாக விளங்குகின்றது. துளசி வழிபடற்குரியது. வள்ளுவம் வழிநடத்தற்கு உரியது. இவ்வகையில் திருக்குறள் துளசியாக மணக்கின்றது. திருக்குறளைச் 'சுரங்கம்' என்றும் 'மருமாலை' என்றும் 'தங்கக்கனி' என்றும் உருவகம் செய்து மகிழ்வர் அறிஞர்.)

வாழ்க்கையின் விளக்கமாக விளங்கும் திருக்குறளைப் பொதுமக்கள் அறநூல் என்று கற்பர்; அறிஞர்கள் வாழ்க்கைத் தத்துவம் என்று ஆழ்ந்து உணர்வர்; சமயக்கணக்கர் சிறந்த சமயநூல் என்று போற்றுவர்; அரசியல் அறிஞர்கள் சிறந்த அரசியல் நூல் என்று பாராட்டுவர்; பொருளாதார வல்லுநர் அதில் கூறியுள்ள பொருளாதாரக் கோட்பாடுகளைக் கண்டு மகிழ்வர். யார் யார் எந்தெந்த நோக்கோடு அணுகுகின்றார்களோ, அவரவர்கட்கு அந்தந்தக் கருத்துக்களை வழங்கும் 'அமுதசுரபி' யாக விளங்குகின்றது திருக்குறள்.

எக்காலத்திற்கும் பொருந்தும் உயர்ந்த கருத்துக்களைக்கொண்டதாய் அமைவதே சிறந்தஇலக்கியம் என்று போற்றப்படும். திருக்குறள் இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஆராய்ந்து அறிவார்க்குப் புதுபுதுக் கருத்துக்களைத் தந்து கொண்டிருக்கின்றது. திருக்குறள் கூறும் ஒவ்வொரு சொல்லும் இன்று ஒவ்வொரு துறையாக விளங்குகின்றது. ஒவ்வொரு குறளும் ஒவ்வொரு அமைப்பாக வளர்ந்துள்ளது.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு. (1038)

என்னும் குறள் இன்று வேளாண்மைப் பல்கலைக் கழகமாக விரிந்துள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளை எழுதியவர் திருவள்ளுவர். இவரைப் பற்றித் தோன்றியுள்ள கதைகள் பலப்பல. அவற்றுள் ஒன்றேனும் உண்மையானது என்று துணிந்து கொள்வதற்குரிய சான்றுகள் கிடைக்கவில்லை. ஆதலின் அவரைப் பற்றித் தோன்றியுள்ள வரலாறுகள் அனைத்தும் புனைந்துரைகளாகவே கருதப்படுகின்றன. எனினும் திருக்குறள் வழியாகத் திருவள்ளுவரைப் பற்றிய சில பொதுத் தன்மைகளை அறியலாம்.

திருவள்ளுவர் தமிழர் என்பதும் அவர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்பதும் அவரது நூலை ஆய்ந்த அறிஞர்கள் அனைவராலும் ஒப்ப முடிந்த உண்மையாகும். அவர் தமிழராக இருந்தும் தமிழ் மொழியைப் பற்றியோ, தமிழ் இனத்தைப் பற்றியோ, தமிழ் நாட்டைப் பற்றியோ, ஏன் தமிழ் என்னும் சொல்லைக் கூட ஓரிடத்தும் குறிப்பிட்டாரில்லை. அவர், நாடு, மொழி, இனம் ஆகியவற்றை எல்லாம் கடந்த பேராளர். உலகமே அவர்கண்ட நாடு, உலக மக்களே அவர்கண்ட மக்கள், அம்மக்கள் வாழ்வுக்குரிய உயர் கருத்துக்களே அவரது கருத்துக்கள்.

அறவழியில் வாழ்வு நடாத்தலும், பொருள் சேர்த்தலும், இன்பம் அடைதலுமே அவரது கொள்கைகள். உடையார் இல்லார், கற்றூர் கல்லார், ஈவோர், இரப்போர் என்று உள்ள ஏற்றத் தாழ்வுகளை அகற்றி எல்லாரும் உடையார், எல்லாரும் கற்றூர், எல்லாரும் ஈவோர், என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோள். அக்குறிக்கோளை அடைய அவர் கருவிகளாகக் கொள்வன உழைப்பும் ஊக்கமுமே. இக்கருத்துக்கள்,

தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும். (619)

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை. (594)

என்ற இவ்விரு குறட்பாக்களாலும் விளக்கப்படுகின்றன.

(திருவள்ளுவர் பல்துறையிலும் தெளிந்த அறிவோடு அனுபவமும் பெற்றவர்.) நல்ல கருத்துக்களை வலியுறுத்துவதிலும் வேண்டாதவை

களைக் கடிந்து நீக்கிவிடச் செய்வதிலும் வல்லவர். புலால், வரைவின் மகளிர் உறவு ஆகியவை சமுதாயத்திற்குக் கேடுவிளைப்பன ஆதலின் அவை அகற்றப்பட வேண்டியவை என்று வற்புறுத்துகிறார். அக்கருத்துக்களே இன்று திருக்குறளின் காலத்தை ஒருவாறு முறைப்படுத்தத் துணை செய்கின்றன.

தமிழுக்குக் கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் பழமையானது தொல்காப்பியம். அதற்குப் பின்னர் தோன்றியவைகளே பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்பனவாகிய சங்க இலக்கியங்கள். அந்நூல்களின் வழி ஆய்ந்தால் அக்காலத்தில் கள்ளும், புலாலும், வரைவின் மகளிரும் கடியப்படவில்லை என்பதும், மாறாக, அவை வழக்கத்திலிருந்து வந்தன என்பதும் தெரியவரும். ஆனால் திருவள்ளுவர் அவைகளைக் கடிவதனால் திருக்குறள் சங்க இலக்கியங்கட்குப் பிற்பட்டது என்று கூறலாம்.

திருக்குறளின் கருத்துக்களைச் சிலம்பும் மேகலையும் போற்றுகின்றன. அவற்றுள் ஊனும் கள்ளும் பரத்தையர் பிரிவும் கடியப்பட்டுள்ளன. மணிமேகலை ஆசிரியர்,

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்"

எனக் குறளையே எடுத்தாண்டுள்ளார். ஆதலின் மணிமேகலைக்கும் முந்தியது திருக்குறள் என்பது தெளிவு. மணிமேகலையும் சிலம்பும் ஒரே காலத்தில் தோன்றிய இரட்டைக் காப்பியங்கள். இவ்விரட்டைக் காப்பியங்கட்கு முன்னரும் சங்க இலக்கியங்கட்குப் பின்னரும் திருக்குறள் தோன்றி இருக்கக்கூடும் என்பதும், அக்காலம் ஏற்றேறக்குறைய இற்றைக்கு 2000 ஆண்டுகட்கு முற்பட்டது என்பதும் அறிஞர்கள் கருத்தாகும். மறைமலையடிகள் தமது திருக்குறள் காலவாராய்ச்சியில் திருவள்ளுவர் கிறித்துவுக்கும் 31 ஆண்டுகட்கு முற்பட்டவர் என்று கூறியுள்ளார். அவ்வாண்டே இன்று திருவள்ளுவர் ஆண்டாகப் போற்றப்படுகிறது.

('எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்னும் மதுரைத் தமிழ் நாகனாரின் பொன்னுரைக்கேற்ப இற்றைக்கு 2004 ஆண்டுகட்கு முன்னர் தோன்றிய திருக்குறளில் காணப்படும் வேளாண்மை பற்றிய அரிய கருத்துக்களை இந்நூலில் தொடர்ந்து காணலாம்.)

# 2. வேளாண்மை - சொற்பொருள் விளக்கம்

திருக்குறளில் கூறப்பட்டுள்ள வேளாண்மைச் செய்திகளாகிய நிலப்பாகுபாடு, நீர்நிலைகள், உழவியல் முறைகள், பயிர்கள் ஆகியவை பற்றியும், மரஞ்செடி கொடிகள், மலர் காய் கனிகள் முதலியவை பற்றியும், பறவைகள், விலங்குகள், ஊர்வன, நீர்வாழ்வன முதலாய உயிரினங்கள் பற்றியும் ஆராயப் புகுமுன் தொல்காப்பியர் காலம் முதல் இன்றுவரை வேளாண்மை என்னும் சொல், சொல்லாலும் பொருளாலும் எவ்வாறு வளர்ந்து வந்துள்ளது என்பது இப்பகுதியில் விரிவாக ஆராயப்படுகிறது.

வேளாண்மை என்னும் சொல் மிகவும் தொன்மை வாய்ந்த செந்தமிழ்ச் சொல்லாகும். இன்றுள்ள நூல்களில், காலத்தால் பழமையானது ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியமாகும். தொல்காப்பியர் வேளாண்மை என்னும் சொல்லை உதவி என்னும் பொருளில் கையாளுகின்றார்.

## பொருளாராய்ச்சி

### தொல்காப்பியம்

தொல்காப்பியர் மூன்று இடங்களில் "வேளாண்" என்ற சொல்லை ஆளுகின்றார். தலைவனும் தலைவியும் களவுக் காலத்தில் தனித்துக்கூடுகின்றனர். அப்பொழுது தலைவன் உரையாடுகின்றான்; தோழியும் உரையாடுகின்றாள். இவ்விருவர் உரையாடல்களிலும் 'வேளாண்' என்ற சொல்லாட்சி வருகின்றது. அதற்குப் பொருள் உதவி என்பதாகும். மேலும்,

> வேளாண் மாந்தர்க்கு உழுதூண் அல்லது
> இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி.
>
> - தொல். பொருள். மரபு - 81

என்னும் நூற்பாவிலும் வேளாண் எனும் சொல் கையாளப்படுகின்றது. தொல்காப்பிய முதல் உரையாசிரியராகிய இளம்பூரணர் வேளாண் என்ற சொல்லுக்கு வேளாண் மாந்தர் என்று உரை கூறுகின்றார். இதற்கு அடுத்து உரை எழுதிய பேராசிரியரும் "வேளாண் மாந்தர் பலவகைப்பட்ட தொழிலரேனும் உழும் தொழிலே பெரும்பான்மை ஆகலான், அதனையே சிறப்பித்துக் கூறுதல் மரபு" எனக் குறித்துள்ளார். வேளாண் என்ற சொல்லுக்கு உழவர் என்றோ, வேளாளர் என்றோ பொருள் குறிப்பிடாமல் இருவரும் வேளாண் மாந்தர் என்றே குறிப்பிடுகின்றனர். ஆதலின் வேளாண்மை செய்யும் மனமுடையோர் பிறர்க்காகவும் தமக்காகவும் உழுது விளைப்பர் என்பதே அந்நூற்பாவின் பொருளாக அமைகின்றது. ஆதலின் தொல்காப்பியர் காலத்தில் வேளாண்மை எனும் சொல்லுக்கு உதவி என்ற பொருள் பெரு வழக்காக இருந்து வந்துள்ளது என்பது புலனாகின்றது.

**சங்க இலக்கியங்கள்**

தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றிய சங்க நூல்களிலும் வேளாண்மை என்னும் சொல் ஆங்காங்கே காணக் கிடைக்கிறது. உலகில் மக்கள் அனைவரும் இன்பத்தையே விரும்புகிறார்கள். அதுவே இயற்கையுமாகும். துன்பம் வரவேண்டும் என்று யாரும் விரும்புவதில்லை. அவ்வாறு விரும்பினும் அஃது இயற்கை அன்று; செயற்கையே. அதனால்தான் தொல்காப்பியர்,

> எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
> தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும்.
>
> - தொல். பொருள். பொருள்-27

என்று கூறி உள்ளார். புலவர் முடத்தாமக்கண்ணியார் கரிகால் வளவன்பால் பரிசில் பெறச் சென்றார். அப்பெருமன்னன் புலவரிடம் மிகவும் அன்பாகப் பேசினான். அவனது அன்பு, புலவரின் உள்ளத்தை நெகிழச் செய்தது. அவனது அன்பைத் தொடர்ந்து பெற வேண்டும் என்று அவர் உள்ளம் பெரிதும் விரும்பியது. இயற்கைக்கு மாறாகத் துன்பம் தரும் தொழிலாகிய பரிசில் பெறுவதையே அவர் மேற்கொள்ள நினைந்தார். அவன் உதவி செய்வதையும், தான் பரிசில் பெறுவதையுமே தொழிலாகக் கொள்ளலாம் என்னும் பொருள்பட "வேளாண் வாயில் வேட்பக்கூறி" எனப் பாடியுள்ளார். இங்கும் உதவி என்னும் பொருளிலேயே இச்சொல் கையாளப்படுகிறது.

கலித்தொகையில் பயிலும் "அவன் கண்டு வேளாண்மை செய்தன கண்கள்" என்ற தொடரிலும் உதவி என்ற பொருளையே காண்கின்றோம். தலைவி தலைவனை காணப் பல நாள் முயன்றாள். ஆனால் அவ்வாறு காணமுடியவில்லை. வள்ளுவர் கூறுவது போல், அவள் கண்கள் ஒளியிழந்து போயின. அவர் வரவைச் சுவரில் எழுதி எழுதி விரலும் தேய்ந்து போயிற்று.

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல். (1261)

ஒருநாள் ஏறுதழுவும் விழாவில் அவள் கண்கள் அவனைக் கண்டு அவளுக்கு உணர்த்தின. உயிரற்ற பொருளையும் உயிருள்ள பொருளாகக் கருதி அவற்றை வினை முதலாகக் கொள்வது தமிழ் மரபாதலின், கண்கள் எனக்கு உதவி செய்தன எனத் தோழியிடம் கூறுகிறாள். இங்கேயும் உதவி என்ற பொருளையே காண்கின்றோம்.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் இவ்வாராய்ச்சிக்குத் துணை செய்கின்றன. திருவள்ளுவர் வேளாண்மை என்னும் சொல்லைத் திருக்குறளில் நான்கு இடங்களில் கையாளுகின்றார். "இல்லறத்தில் இருந்து கொண்டு பொருளை ஈட்டுவது, விருந்தினர்க்கும் நல்லவர்க்கும் உதவி செய்வதற்கேயாகும். உதவி செய்தல் என்னும் பெருநிலை, முயற்சி என்னும் பண்பின்கண் அமைந்து கிடக்கின்றது. முயற்சி இல்லாதவன் உதவி செய்ய முற்படுவது கோழையின் கையில் உள்ள வாள் போல் பயனற்றதாகும்" என்பன போன்ற கருத்துக்களை,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (81)

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (212)

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னும் செருக்கு. (613)

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும். (614)

எனும் நான்கு குறட்பாக்கள் வழியாகக் கூறுகின்றார். இந்நான்கு இடங்களிலும் உள்ள வேளாண்மை எனும் சொல் உதவி என்ற பொருளைத் தருகின்றது.

திருக்குறளை அடுத்துப் பழமொழி, இன்னா நாற்பது போன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் "வேளாண்மை செய்து விருந்தோம்பி", "பொருள் இல்லான் வேளாண்மை காமுறுதல் இன்னா" என்பனவாகிய பாடல் வரிகளைக் காண்கின்றோம். விருந்தினைப் பேணி உதவி செய்ய வேண்டும் என்பதும், பொருள் இல்லாதவன் உதவி செய்ய விரும்புதல் துன்பமாக முடியும் என்பதும் அவற்றின் பொருளாகும். இங்கேயும் வேளாண்மை என்னும் சொல் உதவி என்ற பொருளைத் தருவதாக உள்ளது.

**பரிபாடல்**

எட்டுத்தொகை நூல்களுள் காலத்தால் பிந்தியதாகவும், புராணச் செய்திகள் மிகுதியும் பயின்று வந்துள்ளதுமாகக் கருதப்படுவது பரிபாடல் என்னும் நூலாகும். அந்நூலிலும் வேளாண்மை என்னும் சொல் கையாளப்படுகிறது.

"எருது தொழில் செய்யாது ஓடவிடும்கடன்
வேளாளர்க்கு இன்று" -பரிபாடல் 20-63

தமது எருதைக் கொண்டு தாமே தொழில் செய்யாது, பிறர்பால் விடுத்துத் தொழிலைச் செய்வது வேளாளர் கடமை அன்று என்ற பொருளை அப்பாடலின் வரிகள் உணர்த்துகின்றன. இங்கே வேளாளர் என்போர் எருதைக் கொண்டு தொழில் செய்வோர் என்ற பொருள் தெளிவாக்கப்படுகின்றது. திரிகடுகம் என்னும் நூலில்வரும் "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்ற தொடரிலும் வேளாளன் என்னும் சொல் உழவுத் தொழில் செய்பவன் என்ற பொருளைப் பயக்கின்றது.

அடுத்து இனியவை நாற்பது எனும் நூலில், "ஏருடையாளன் வேளாண்மை தான் இனிது" என்ற தொடர் காணப்படுகின்றது. அதற்கு உரை வகுத்த பெரியார், "உழவு மாடுகளை உடையவனின் பயிர்த்தொழில் இனியதாகும்" என்று பொருள் விளக்கம் தருகின்றார். இங்கேதான் வேளாண்மை எனும் சொல்லுக்குப் பயிர்த்தொழில் என்ற நேரடிப் பொருள் கூறப்படுகின்றது.

மேலே எடுத்துக் காட்டப் பெற்ற மேற்கோள்கள் அனைத்தும் தொல்காப்பியர் காலம் தொடங்கிச் சங்க காலம் ஈருக வேளாண்மை என்னும் சொல் உதவி என்ற பொருளையும் உழவுத் தொழில் என்ற பொருளையும் உணர்த்தக் காண்கிறோம்.

## மறைமலையடிகள் ஆராய்ச்சி

மறைமலை அடிகள், "வேளாளர் நாகரிகம்" என்னும் தமது அரிய ஆராய்ச்சி நூலில் வேளாண்மை என்னும் சொல்லுக்கு அரியதொரு பொருள் விளக்கம் தருகிறார். 'ஈகைக்குப் பெயரான வேளாண்மை என்னும் சொல், அவ்வீகைக்குக் கருவியான பயிர்த் தொழிலுக்குப் பெயராயிற்று. பின்னர் அவ்விரண்டு தொழில்களையும் ஆள்பவரான வேளாளர்க்குப் பெயராயிற்று' என்று குறிப்பிட்டுள்ளார். வேளாண்மை எனும் சொல் ஈகை என்ற பொருளை உடையது ஆயினும், ஈகை செய்வதற்குரிய பொருள்களைத் தரும் பயிர்த் தொழிலையும் குறிக்கும் என்பது அவரால் விளக்கப்படும் கருத்தாகும்.

அன்றியும் பிறர்க்கு உணவுப் பொருள்களைக் கொடுத்தவர்களே உண்மையான கொடையாளர்களாகப் போற்றப்பட்டனர். சங்க காலத்தில் உணவுப் பொருள்களாகிய நெல் போன்ற தானிய மணிகளைச் செல்வமாகக் கருதினர். "நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே" என்பது, மன்னனே மக்களின் உயிர் போன்றவன் மற்றயவை அடுத்த நிலையில் வைக்கப்பட வேண்டியவையே என்ற கருத்தைக் கொண்டு பாடப்பட்டதாயினும, மன்னனை அடுத்து இன்றியமையாத உயிர்ப்பொருளாகக் கருதப்பட்டது நெல் என்பதே ஈண்டுக் கொள்ள வேண்டிய கருத்தாகும். அதனால்தான் சங்கப்புலவர்கள், உணவு கொடுத்தவர்களை உயிர் கொடுத்தவர்கள் என்றும், உணவினை அடிப்படையாகக் கொண்டதே உடல் என்றும் இரப்பவர்கள் சுற்றமும் மன்னர்கள் கொற்றமும் உழவர்கள் கையில் அடங்கியுள்ளன என்றும், அவர்களே உலகு என்னும் தேருக்கு அச்சாணி போன்றவர்கள் என்றும் பாடி உள்ளார்கள் என்பது ஈண்டுநினைவு கூரத்தக்கவையாகும். ஆதலின், வேளாண்மைப் பண்பு உடையவரே (பிறர்க்கு உதவி செய்பவரே) வேளாளர் எல்பதும், அவர் செய்யும் தொழிலே (ஈகைக்குப் பெயரான) வேளாண்மை என்பதும் மறைமலை அடிகள் ஆராய்ச்சியிலிருந்தும் அறிய முடிகின்றது. தெளியக் கூறின், பண்பிலிருந்துதான் இனத்தின் பெயர் தோன்றியது என்பதும், பின்னர் அப்பண்பே அவர்தம் தொழிலுக்கும் பெயராக அமைந்து விட்டது என்பதும் கருத்தாகிறது.

### நிகண்டுகள்

எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டுகளும் வேளாண்மை என்ற சொல்லுக்குப் பொருள் விளக்கம் தருகின்றன. நிகண்டுகள் தோன்றிய காலத்தில் வேளாண்மை எனும் சொல் இன்னும் சிலபுதிய பொருள்களை

ஏற்று, இலக்கிய வழக்கில் சிறப்பிடம் பெற்றுவிட்டது. மொழி வளரும் தன்மை உடையது ஆதலின் ஒரு சொல்லுக்குப் பல பொருள் தோன்றுவது இயல்பு. உதவி, உழவு என்ற பொருள்களோடு மெய் என்ற பொருளும் சிறுசிறு வேறுபாடு உடைய கொடை ஈகை என்ற பொருள்களும் தோன்றலாயின.

"மெய்யும் கொடையும் வேளாண்மை யாகும்" - பிங்கலம்
"வேளாண்மை உபகாரம் ஈகையும் செய்யும்" - திவாகரம்

மேலும் வேளாண் மக்கட்கு, மண்மகள் புதல்வர், வளமையர், களமர் ஆற்றலுடையவர். உழவர், மேழியர், வேளாளர், ஏரின் வாழ்நர், காராளர், வினைஞர், பின்னவர் என்ற பதினொரு பெயர்கள் தோன்றலாயின. இப்பெயர்களைச் சூடாமணி நிகண்டு தொகுத்துக்கூறுகின்றது.

"மண்மகள் புதல்வர், வாய்ந்த வளமையர், களமர் என்றும்
உண்மைசால் சதுர்த்தர், மாறு உழவர், மேழியர், வேளாளர்
திண்மை கொள் ஏரின் வாழ்நர், காராளர், வினைஞர், செம்மை
நண்ணு பின்னவர்" - சூடாமணி

"சதுர்த்தரும் கொடை வள்ளலும் வேளாளர்" - பிங்கலம்

இங்குச் சதுர்த்தர் என்பதும் திறமையுடையவரைக் குறிப்பதாகும். ஆதலின் வேளாண்மை என்ற சொல்லுக்கு உதவி, உழவு, கொடை, ஈகை, மெய் என்ற பொருள்களும், வேளாளர் என்னும் சொல்லுக்குப் புதிய பத்துப் பெயர்களும் கால வெள்ளத்தில் தோன்றலாயின.

## சொல்லாராய்ச்சி

### வேளாண்மை என்னும் சொல்லின்பகுதி

இனி, வேளாண்மை என்னும் சொல்லுக்குப் பொருள் கண்டதே அன்றி அச்சொல் தோன்றிவளர்ந்த வரலாற்றைக் காணவேண்டிய இன்றியமையாமை உள்ளது. உரையாசிரியர்களில் மிகுதியும் போற்றப்படும் உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் வேளாண் என்னும் சொல்லைப் பெயர்ச் சொல்லாகக் கருதுகின்றார்.

"கிளைப் பெயரெல்லாம் கிளைப் பெயரியல" - தொல். எழுத்து. 339.

என்னும் தொல்காப்பிய நூற்பா உரையில் 'ல'கர ஈற்றுப் பெயருக்கு உள்ள விதிகள் 'ண'கர ஈற்றுப் பெயருக்கு உள்ளதைப் போன்றதாகும் எனக் குறிப்பிட்டு, எடுத்துக்காட்டாக "வேளாண் குமரி, வேளாண் வாகை, வேளாண் வாழ்க்கை என்பனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வேளாண் என்னும் பெயர்ச்சொல் திரியாத, இயல்பான பெயராகும் என்பதை உணர்த்த இவை "திரியாது முடிவன" என்றும் குறித்துள்ளார். இதனல் நமக்கு விளங்குவது ஒன்று உண்டு. 'பெண்மை என்னும் பண்புச்சொல் மை விகுதிகெட்டு பெண் என்ருகி ஓர் இனத்தைக் குறித்தது போல, ஆண்மை என்னும் சொல் மை விகுதி கெட்டு ஆண் என்னும் ஓர் இனத்தைக் குறித்தது'. அதுபோல, வேளாண்மை என்னும் பண்புச் சொல் மை விகுதி கெட்டு வேளாண் என நின்று ஓர் இனத்தைக் குறித்தது எனக் கொள்ள இடமுண்டாகின்றது.

ஆதலின் வேளாண்மை என்னும் பண்புச் சொல் 'மை' என்னும் பண்புப் பெயர் விகுதி கெட்டு, வேளாண் என நின்று அப்பண்புடைய ஓர் இனத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல் ஆயிற்று என்பதே பொருத்தமான கருத்தாக அமைகின்றது. பொதுப் பெயர்களில் விகுதிகள் சேர்ப்பதால் ஒருமைப் பன்மை எண்ணும், ஆண், பெண், பலர் பாலும் பிரித்து அறியப்படுகின்றது.

வேளாண் (ள்) - அர் = வேளாளர் - பன்மை
வேளாண் (ள்) - அன் = வேளாளன் - ஒருமை
வேளாண் - மை = வேளாண்மை - பண்பு
வேளாண் -- பொதுமை

என, அர் விகுதியால் பன்மையும், அன் விகுதியால் ஒருமையும், மை விகுதியால் பண்பும், விகுதி இன்மையால் பொதுமை இனமும் சுட்டப் படுகிறது எனக்கொள்ளலாம்.

## வேளாண்மை என்னும் சொல்லின் வேர்ச்சொல்

வேளாண்மை என்னும் சொல்லின் பகுதியாகிய வேளாண் என்னும் பெயர்ச் சொல்லை நுணுகி ஆராயின், அதன் வேர்ச்சொல் யாது என்பது நன்கு விளங்கும். வேளாண் என்னும் சொல்லை வேள் - ஆள் எனப் பிரிப்பர் இலக்கண நூலார். வேளாண் என்னும் சொல்லில் வேள் என்பது பகுதி. ஆள் என்பது விகுதி. வேள் என்பதே வேர்ச் சொல்லாகும். அச்சொல்லுக்கு மண் என்பது பொருள். ஆள்தல் என்னும் தொழில் பெயரில் விகுதி குறைந்து ஆள் என முதல்நிலைத் தொழில் பெயராய் நின்று, வேள் - ஆள் - வேளாண் என ஒரு சொல் தன்மை பெற்றிருத்தல் வேண்டும். இது மண்ணை ஆளுதல் என்ற பொருளைத் தருகிறது.

சொற்பிறப்பு ஆராய்சியில் இரண்டு விதமான கருத்துக்கள் உள்ளன. சொற்கள் ஓரசையிலிருந்துதான் பல அசைகளாக வளர்ந்து இருக்கவேண்டும் என்பது ஒருசாரார் கருத்து. பல அசைகளிலிருந்து ஓரசையாகக் குறுகியது என்பது மற்றொருசாரார் கருத்து. இவ்விரு வேறு கருத்துக்களில் முன்னதே பெரும்பான்மையான அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். ஒரு சொல்லின் வேர்ச்சொல்லைக் காணவேண்டின், முழுமையான சொல்லில் இருந்துதான் பகுதி விகுதிகளைப் பிரித்தாய்ந்து காணவேண்டும். அவ்வகையில் வேளாண்மை என்னும் சொல்லையும் பகுதி விகுதிகளாகப் பிரித்து அறியப்பட்டது. அன்றியும், ''தமிழ்ச் சொற்கள் எல்லாம் பண்டு ஓரசை உடையனவே'' என்னும் மொழியியல் அறிஞர் கால்டுவெல் அவர்களின் கருத்தும் இவ்வாராய்ச்சிக்குத் துணை புரிவதாக அமைகின்றது. ஆதலின் வேளாண்மை என்னும் சொல்லின் வேர்ச்சொல் 'வேள்' என்பதாகும். அச்சொல் வேள் - வேளாண் - வேளாண்மை என வளர்ந்துள்ளது என்பதே ஈண்டைய கருத்தாகும்.

## தமிழ்ச் சொற்கலை அகராதி

சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தமிழ்ச்சொற்கலை அகராதி, வேளாண்மை என்னும் சொல்லின் அடிச் சொல்லாகிய வேள் என்னும் சொல்லுக்குப் பத்துப் பொருள்களைக் குறிக்கின்றது. திருமணம், விருப்பம் மன்மதன், முருகக் கடவுள், வேளிர் குலத்தன், சளுக்கு வேந்தன், சிற்றரசன், ஒரு சிறப்புரிமைப் பெயர், சிறந்த ஆண்மகன், மண் என்பன அப்பொருள்கள். இப்பத்துப் பொருள்களில் மிகவும் பொருத்தமாக அமைவது மண் என்னும் பொருளே. வேளினை ஆள்பவன் வேளாண் ஆவான். மண்ணைப் பண்படுத்தி ஆள்பவனே வேளாண். அவன் குடி வேளாண் குடி, அவன் மகள் வேளாண் குமரி, அம்மாந்தர் வேளாண் மாந்தர் என்பதே மிகவும் சரியான பொருளாக அமைகின்றது. இக் கருத்தைச் சந்திரசேகரப் புலவர் என்பார் தொகுத்து 1842-ஆம் ஆண்டு வெளியிட்ட ''யாழ்ப்பாணத்து மாணிப்பாயகராதி'' என்ற அகராதி நூலும், 1937-இல் வெளியிடப்பட்ட மதுரைத் தமிழ்ப் பேரகராதியும் வற்புறுத்தியுள்ளன. ஆதலின் வேள் - வேளாண் - வேளாண்மை எனக் கொள்வதே பொருத்தமானதாகும்.

## இன்றைய பொருள்

சொற்கள் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம் மாறுபட்டுப் புதுப் பொருள்களையும் தரும் தன்மை உடையன. அங்கில ஒரு மொழி

யின் வளர்ச்சியைக் காட்டுவதாகும். இவ்வடிப்படையில் ஒரு சொல் லுக்குப் பல பொருள் தோன்றுவது இயல்பே. எண்ணெய் என்பது எள் நெய்யை (இன்று நல்லெண்ணெய்) மட்டும் நெடுங்காலமாக உணர்த் தியது. ஆனால் இன்று எல்லா வகை எண்ணெயினையும் உள்ளடக்கிய ஒரு பொதுச் சொல்லாகி விட்டது. அதுபோல முன்னாளில் மண்ணையும், அதனை ஆளும் தொழிலையும், அவர்தம் பண்பினையும் உணர்த்திய வேளாண்மை என்னும் சொல் இன்று பல பொருள்களையும் உள்ளடக்கிய ஒரு பொதுச் சொல்லாக மலர்ந்துள்ளது. உலக நாடுகள் அனைத்தி லும் வேளாண்மை என்னும் சொல் பல பொருள்களைக்கொண்ட ஒரு பொதுச் சொல்லாக விளங்குகின்றது.

இன்று (இச்சொல் உழவுத் தொடர்பான நிலம், நீர், பயிர், களை, காப்பு முதலியனவற்றையும், உழவுக்குத் தேவையானகருவி, கால்நடை காடு போன்றவைகளையும், உணவுக்குப் பயன்படும் காய்கனி, முட்டை, மீன் முதலியவற்றையும், உழவால் கிடைக்கும் பொருள்களைத் தொகுத்தல், வகுத்தல் முதலியவற்றையும், உழவின் பண்பான மனை வாழ்வு, மக்கள் நல்வாழ்வு) முதலியவற்றையும் உள்ளடங்கிய ஒரு பெருஞ் சொல்லாக ஏற்றுக்கொள்ளப் பெற்றிருக்கின்றது. இவ்வடிப் படையில், இந்நூல் திருக்குறளை முன்வைத்து ஆய்வு செய்கின்றது.

## 3. நிலப் பாகுபாடு

*நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.* (959)

வேளாண்மை செய்தற்கு அடிப்படையானது நிலம். அந் நிலத்தை நான்காக வகைப்படுத்திப் பயிரிட்டு வாழ்ந்தனர் தமிழர் என்பதைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் எடுத்து இயம்புகின்றன. திருவள்ளுவர் காலத்திலும் இந்நானிலப் பாகுபாடே இருந்து வந்தது என்பதை அவர் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் உணர்த்தியுள்ளார். நிலப் பாகுபாடும், பாகுபடுத்திய நிலத்தின் தன்மைக்கேற்ப இன்னின்ன பயிர்களை விளைவிக்க வேண்டும் என்று கொண்ட முறையும், வள்ளுவர் காலத் தமிழ் மக்களின் வேளாண்மை அறிவை நமக்குப் புலப்படுத்துகின்றன. இன்றுபோல் எதனையும் கண்ணாடிக்குவளையிலிட்டு ஆய்ந்து காணும் முறை அன்று இல்லை என்பது உண்மையே ஆயினும், வேளாண்மை செய்தற்குரிய அடிப்படை அறிவும் ஆராய்ச்சியும் அன்றும் உயர்ந்த நிலையில் இருந்து வந்துள்ளது என்பதை மறுத்தற்கு இயலாது. அன்றியும் அகவாழ்வையும், இயற்கைச் சூழலையும், மண்ணின் தன்மையையும் கருத்துள் கொண்டே இப்பாகுபாடு செய்யப்பட்டுள்ளது என்பது நுணுகி ஆராய்வார்க்குப் புலனாகும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன நானிலங்களின் பெயர்களாகும். மனித இனம் தோன்றி வளர்ந்து நாகரிகம் பெற்ற வரலாறும் இந்நிலப் பாகுபாட்டிலே அடங்கி உள்ளது என்பது இப்பாகுபாட்டிற்குள்ள ஒரு தனிச்சிறப்பு. "உலகில் முதன் முதல் மனித இனம் தோன்றியது மலைமுகடுகளில்தான்" என்பது ஆராய்ச்சியாளர்களின் துணிபு. மலையில் தோன்றிய மனிதன், மலைபடு பொருள்களாகிய

காய், கனி, கிழங்கு ஆகியவைகளை உண்டு வாழ்ந்து வந்தான். மலையும் மலை சார்ந்தபகுதியுமே அவன் வாழ்ந்த முதல் நிலப்பகுதி.

நெடுங்காலம் மலையிலே வாழ்ந்த மனிதர் மலையினின்றும் கீழே இறங்கத் தொடங்கி, சமவெளியான காடு சார்ந்த பகுதியில் சில காலம் வாழ்ந்து வந்தனர். அப்பொழுது ஆடு மாடுகளை மேய்த்தும், அவைகளைப் பழக்கித் தங்களுடைய வாழ்வுக்கு உதவியாகவும் செய்துகொண்டனர். காடுசார்ந்த பகுதியில் தினை, வரகு, சாமை போன்ற புன்செய்ப் பயிர்களைப் பயிரிட்டு வாழ்ந்தனர்.

நாகரிகம் வளர வளர, மண்ணைப் பண்படுத்திப் பயன்கொள்ளும் மருதநில வாழ்வு அடுத்து அமைந்தது. மருத நிலம் என்பது இன்றைய நன்செய் நிலப் பகுதியைக் குறிக்கும். இது நெல்லும், கரும்பும், வாழையும் பயிரிட ஏற்றதாக அமைந்துள்ளது. தமிழர்களின் நாகரிக வாழ்வு இந்நிலத்தில்தான் மலர்ந்து மணம் வீசத் தொடங்கியது.

குறிஞ்சியில் காய்கனி கிழங்குகளை உண்டு, முல்லையில் தினை விளைத்து, மருதத்தில் நெல் விளைத்து, நிலத்தின் தன்மையையும் அவை தரும் பயன்களையும் நன்கு உணர்ந்த தமிழ் மக்கள் கடலும், கடல் சார்ந்த பகுதியிலும் சென்று குடியேறத் தொடங்கி அங்கேயும் பயிர் விளைக்கலாயினர். மணற்பாங்கான பகுதியில் தென்னை முதலான மரங்களை நட்டுப் பயிராக்கியும் மீன் பிடித்தும் வாழ்ந்தனர். இவ்வாறு நிலங்களை நான்காகப் பகுத்துக் கொண்டனர் என்பதை,

> "மாயோன் மேய காடுறை உலகமும்
> சேயோன் மேய மைவரை உலகமும்
> வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
> வருணன் மேய பெருமணல் உலகமும்
> முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
> சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"
>
> - தொல். பொருள். அகம்-3

எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். திருமால் விரும்பும் காடும், முருகன் விரும்பும் மலையும், இந்திரன் விரும்பும் கழனியும், மழைக் கடவுள் விரும்பும் நெய்தலும் என நிலம் நால்வகைப்படும் என்பது அந்நூற்பாவின் பொருளாகும்.

பாலை என்ற ஒரு நிலம் தமிழகத்தில் தனியாக இல்லை. எந்த நிலம் வளங்குன்றி வறுமையடைகின்றதோ அதனையே பாலை எனக் கொண்டனர். பெரும்பாலும் முல்லையும் குறிஞ்சியும் வறட்சியால் தாக்குண்டு பாலை எனப் பெயர் பெறுவது உண்டு.

> "முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து
> நல்லியல்பு இழந்து நடுங்கு துயர்உறுத்துப்
> பாலை என்பதோர் படிவம் கொள்ளும்"

என்னும் சிலப்பதிகார அடிகள் பாலை என்பது தனி நிலம் அல்ல என்பதைத் தெளிவாக விளக்குகின்றது. ஆதலின் நானிலப் பாகுபாடே தமிழர் கொண்ட நிலப்பாகுப்பாட்டு முறை என்பது தெளிவான கருத்தாகும். பாலை என்பது நிலையான நிலம் அல்ல. அது காலப்போக்கில் பிற நிலங்களின் வறட்சிக் காலத்தில் ஏற்படுகின்ற பெயர் என்பதும், வறட்சி நீங்க, அப்பெயரும் நீங்கிவிடும் என்பதும் அறியவேண்டிய செய்தியாகும்.

## முப்பொருள்

நிலம் நான்காகப் பகுக்கப்பட்டது போல ஒவ்வொரு நிலத்திற்குரிய காலம், பொருள்கள், மக்கள் வாழ்வியல் ஒழுக்கம் ஆகியவைகளையும் வகைப்படுத்திக் கூறியுள்ளார் தொல்காப்பியர். முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பன அப்பாகுபாடுகள். வள்ளுவர், திருக்குறளை இப்பாகுபாட்டின் அடிப்படையிலேயே வகுத்துள்ளார் என்பது ஆராய்ந்து அறிவார்க்கு விளங்குவதாகும்.

## முதற்பொருள்

ஒவ்வொரு நிலத்திற்குமுரிய இடமும் பொழுதும் முதற்பொருளாகும்.

> "முதலெனப் படுவது நிலம்பொழுது இரண்டின்
> இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

தொல். பொருள். அகம்-4

மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி. காடும் காடுசார்ந்த இடமும் முல்லை. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம். கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல். மணலும் மணல்சார்ந்த இடமும் பாலை. இந்நிலப் பிரிவுகளே அன்றி ஓர் ஆண்டை ஆறாகப் பகுத்து இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி என ஆறு பருவங்களாகவும், ஒரு நாளை ஆறாகப் பகுத்து நண்பகல், மாலை, எற்பாடு, யாமம்,

வைகறை, விடியல் எனச் சிறு பொழுது ஆறாகவும் கொண்டுள்ளனர். இப்பகுப்பு முறை பயிரிடுவதற்கும் அறுவடை செய்வதற்கும் பயனுடையதாக விளங்கியுள்ளது.

**கருப்பொருள்**

நிலத்திற்குரிய தெய்வம், நிலத்தில் வாழும் மக்கள், அவர்களின் உணவு, ஊர், நீர், அந்நிலத்தில் வாழும் விலங்குகள், பறவைகள், வளரும் மரங்கள், செடிகொடிகள், மலர்கள், மக்களின் தொழில் முறைகள், அவர்களின் இசைக்கருவிகள், இன்னபிற புறவாழ்வுக்குரிய பொருள்களை எடுத்து விளக்குவது கருப்பொருள் என்னும் பிரிவாகும்.

''தெய்வம் உணாவே மாமரம் புள்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப''
- தொல். பொருள். அகம்-18

**உரிப்பொருள்**

உரிப்பொருள் என்பது அகவாழ்வை விளக்கும் பகுதியாகும். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் ஆகியவைகளையும் அவை தொடர்பான நிகழ்ச்சிகள் ஆகிய பகுதிகளையும் உரைப்பது உரிப்பொருள்.

''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேரும் காலைத் திணைக்குரிப் பொருளே''
- தொல். பொருள். அகம்-14

இனித் திருவள்ளுவர் வழி நின்று நானிலப் பாகுபாட்டினை அறியலாம்.

**குறிஞ்சி**

(''மணி நீரும் மண்ணும் மலையும்'', ''குன்றேறி யானைப் போர் கண்டற்றால்'' என்ற குறட்பா வரிகள், குறிஞ்சி நிலமாகிய குன்றையும் மலையையும் குறிக்கின்றன.) இந்நிலம் சமமான நிலப்பகுதியைவிட உயர்ந்ததான மலைச் சரிவில் உள்ள பகுதியாகும். இடையிடையே குண்டுக் கற்களும் நல்ல வளமான செம்மண்ணும் கலந்த பகுதியாகும். குறிஞ்சியில் எவ்வகைக் கிழங்கும் நன்றாக விளையும். தமிழகத்து மலைகள் குறிஞ்சி நிலத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அம்மலை

களில் மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும், தேனும் இயற்கையில் விளைந்தன என்பதை அறிகின்றோம். வள்ளுவர் வள்ளிக் கொடியையும் தேனையும் குறிப்பிடுவதன் மூலம் குறிஞ்சியில் விளையும் பொருள்களைக் குறிப்பால் உணர்த்தி உள்ளார் என்று கருதலாம்.

குறிஞ்சிநில மக்கள் தினை விளைத்துப் பயிர் செய்வார்கள். வள்ளுவர் தினையைப் பற்றிக் கூறிக் குறிஞ்சியில் தினை விளைந்தமையைப் புலப் படுத்துகின்றார். அவர் குறிப்பிடும் யானையும் புலியும், மலையும் மலை சார்ந்த பகுதிகளில் திரிந்து வாழும் விலங்குகளாகும். மயில் குறிஞ்சி நிலப்பறவை. இவைகளைக் கொண்டு குறிஞ்சி நிலம் பற்றிய விளக்கம் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது என்று தெளியலாம்.

**முல்லை**

அழல்போலும் மாலைக்குத் தூதாகி ஆயன்
குழல்போலும் கொல்லும் படை. (*1228*)

என்னும் குறள் முல்லையின் முதற் பொருளாகிய மாலை நேரத்தையும், முல்லை நில ஆண் மக்கட்குரிய பெயராகிய ஆயன் என்பதையும் குறிப் பிடுகின்றது. முல்லைநிலம் என்பது இன்றைய புன்செய் நிலப்பகுதியைக் குறிக்கும். இந்நிலத்து மண் செம்மை நிறமுடையது. அதனைச் 'செம்புலம்' என்றுங் கூறுவர். குறிஞ்சி நிலத்தைக்காட்டிலும் இந்நிலம் நீர்வளம் சற்றுக் குறைந்த காரணத்தால் புன்செய்நிலப் பயிர்களாகிய வரகு, சாமை போன்ற பயிர்களும், எள் போன்ற எண்ணெய் வித்துக்களும் விளைவிக்கப்பட்டன. இந்நிலத்தில் விதைத்துவிட்டு மழையை நோக்க வேண்டிய நிலை இருந்தது. திருவள்ளுவர், "வான்நோக்கி வாழும் உல கெல்லாம்" என்று கூறியுள்ளது, இத்தகைய நீர்வளம் இல்லாத நிலத் துப்பயிர்களைக் குறிப்பதாக உள்ளது. இன்று இதனை மானாவாரிப்பயிர் என்று கூறுவர். முல்லைநிலப் பயிர்களில் பெரும்பாலானவை மானா வாரிப் பயிர்களே.

முல்லை நில மக்களின் கால்நடைகளாகிய ஆடுமாடுகள் பற்றியும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். மான் முல்லை நிலத்துக்குரிய சிறப்பான விலங்கு. முல்லைக்குரிய குழல் இசையும் வள்ளுவத்தில் நினைவூட்டப் படுகின்றது. இவ்வாறு வெவ்வேறு இடங்களில் முல்லையின் பல்வேறு பொருள்களைக் கூறி முல்லை நிலத்தின் தன்மையை விளக்குகின்றார் வள்ளுவர்.

**மருதம்**

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். (1039)

நிலத்துக்கு உரிமை உடையவன் நாள்தோறும் சென்று நிலத்தைப் பாராமல் இருப்பானாயின் அந்நிலமானது அவனால் அன்பு செலுத்தப்படாத மனைவியைப்போல் பயன் தராமல் போய் விடும். நிலம் என்று பொதுப்படையாகக் கூறினாராயினும் ஊடுதல் என்ற உரிப்பொருள் சொல்லால், மருத நிலத்தையே குறித்துள்ளார் என்பது குறிப்பாகும். மருத நிலத்தில் நன்செய்ப் பயிர்களாகிய நெல்லும் கரும்பும் வாழையும் பயிரிடப்பட்டன. இப் பயிர்களை 'அலகுடை நீழலவர்' 'கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ்' என்ற தொடர்களால் குறிப்பிடுகின்றார். உழுதொழிலே இந்நிலத்து மக்களின் இன்றியமையாத தொழிலாகும். உழவர்கள் என்ற சிறப்புப் பெயரும் இந்நிலத்து மக்களுக்கே உரியது. மருதநிலம் நிலவளமும் நீர்வளமும் சான்று இருந்ததால் "பயன்திகழ் வைப்பு" என்று போற்றப்பட்டது.

குறிஞ்சியிலும் முல்லையிலும் இல்லாத வளத்தை மருதநிலத்தில் காணலாம். இட்டது விளையும் நிலமாக இந்நிலப்பகுதி விளங்கியது. சோழநாட்டில் மருதநிலம் மிகுந்திருந்ததால் சோழநாடு "சோறுடைத்து" என்ற பெயர் பெறலாயிற்று. மருதநிலம் முப்போகமும் விளைவைத் தந்து கொண்டே இருந்தது என்பதை "விளைவு அரு வியன் கழனி" என்ற வாக்கால் அறியலாம். மருத நிலத்திற்குரிய தாமரைப்பூ, கொக்கு அன்னப்பறவை முதலியவைகளையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். ஆதலின் மருத நிலத்தின் முதல், கரு, உரிப்பொருள்களைத் தெளிவு படுத்தியமை விளங்கக் காணலாம்.

**நெய்தல்**

நெடும்புனல் என்றும் கடல் என்றும் கூறி, நெய்தல் நிலப்பிரிவைச் சுட்டுகின்றார் வள்ளுவர். துறைவன், தண்ணந்துறைவன், என நெய்தல் நிலத்தலைமக்கள் பெயரும் சுட்டப்படுகிறது. நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த பகுதியாகும். கடற்கரையோரப் பகுதிகள் அனைத்தும் நெய்தல் நிலச் சார்புடையனவே. அங்கு மணற்பாங்கில் விளையும் தென்னை, முதலிய பயிர்களைப் பயிரிட்டு வாழ்ந்தனர். மீன் பிடிப்பதும். உப்பு விளைப்பதும் அங்குள்ள மக்களின் தொழிலாகும், வள்ளுவர்

"தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று" (931)
"உப்பமைந் தற்றால் புலவி" (1302)

என அவ்விரு தொழில்களையும் குறிப்பாக உணர்த்தியுள்ளார், அந்நிலத்து மக்கள் மணற் கேணிகளைப் பயன் படுத்துவர். அதனை வள்ளுவர் "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி" என்று அக்கேணியின் தன்மையை விளக்குகின்றார்.

குறிஞ்சியும் முல்லையும் மண்வளத்தில் சிறுசிறு வேறுபாடுகளை உடையனபோல, மருதமும் நெய்தலும் மண் தன்மையில் சிறுசிறு வேறு பாடுகள் கொண்டவை. ஆதலின் அவைகள் வேறுவேறு நிலமாகக் கருதப்பட்டன. முன்னிரண்டையும் "வன்புலம்" என்றும், பின்னிரண் டையும் "மென்புலம்" என்றும் கூறுவர். வள்ளுவர் இவ்விரண்டையும் உள்ளடக்கிப் "புலம்" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். (85)

### பாலை

வள்ளுவர் பாலை நிலத்தைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவர் கூறும் பாலை, முல்லையும் குறிஞ்சியும் திரிந்த நீரில்லாப் பாலையே அன்றிச் சகாராப் பாலைவனம் போல மணல் வெளியல்ல. வள்ளுவர் கூறும்,

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று (78)

என்ற குறளில் வரும் 'வன்பால்' என்னும் சொல்லுக்குப் பரிமேலழகர், மணக்குடவர், காளிங்கர் முதலாய உரைப் பேராசிரியர்கள் அனைவரும் வன்மையான நீர்வளமற்ற நிலம் என்றே பொருள் கூறியுள்ளனர். பாலையின் கொடுமையைக் கூறும் போதெல்லாம், மரம் உலரிப்போய் விட்டது என்றும் அங்குள்ள மக்கள் குடிக்க நீரின்மையால், கண்ணீ ரால் தங்கள் வறண்ட நாவினை நனைத்துக் கொண்டார்கள் என்றும் புலவர்கள் கூறுவதுண்டு. ஆதலின் நீர்வளமில்லாத பகுதியே பாலை என்பது கருத்தாகும்.

### வள்ளுவரின் மண்ணியல் ஆராய்ச்சி

வள்ளுவர் நிலப்பாகுபாடுகளை வகைப்படுத்திக் கூறியது போல மண்ணின் தன்மைகளையும் ஆராய்ந்துள்ளார் என்பதைஅவரது குறட்பாக் களால் அறியமுடிகின்றது. "நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்" என்று

கூறி மண்ணியல் ஆராய்ச்சிக்கு வித்திடுகின்றார் வள்ளுவர். நல்ல தன்மை உடைய மண்ணின் முளை நன்றாக வரும். மண்ணுக்குரிய தன்மைகள் நன்றாக இல்லை எனில் முளையும் நன்றாக வராது என்பது அதன் தெளிபொருளாகும். இம்மண்ணியல் கருத்தையே உவமையாக்கி மக்களின் தன்மையையும் அளந்து விடுகின்றார். மண்ணின் தன்மையை அதில் முளைக்கும் முளை காட்டுவது போல, ஒருவனது ஒழுக்கத்தை அவன் பேசுகின்ற சொற்கள் காட்டிவிடும் என மக்களை இனங்கண்டு வாழும் வழியையும் கூறுகின்றார். ஆதலின் இன்னின்ன தன்மைகள் உடைய மண்ணில் இன்னின்ன விதைகள் முளைக்கும், சிலவகை மண்ணில் விதைகள் சிறப்பாக முளைக்காது என்பதைப் பொதுப்படையாகக் குறிப்பிட்டுள்ளார் என அறியலாம்.

"நிலத்து இயல்பால் நீர்திரிந்து அற்றாகும்" என்பது மண்ணியல் ஆராய்ச்சியைக் காட்டுகின்ற மற்றுமொரு குறளாகும். இது மண்ணின் நிறத்தன்மைகளை ஆராய்வதாக உள்ளது. நீருக்கு நிறமில்லை. கருமை நிற மண்ணில் விழுந்த நீர் கருமை நிறமாகவும், செம்மை நிற மண்ணில் விழுந்த நீர் செம்மை நிறமாகவும் மாறும் என்பதை அறிகிறோம். ஆதலின் மண்ணின் சத்துக்களையும் நிறத் தன்மைகளையும் ஆராய்ந்து உள்ளனர் என்பதை வள்ளுவம் தெரிவிக்கின்றது.

வள்ளுவர் சேறுகள் நிறைந்த நிலத்தைப் பற்றி ஆராய்ந்துள்ள குறிப்பும் காணப்படுகிறது. அதனை, 'இழுக்கல்' நிலம் என்று கூறுகின்றார். சேறு நிறைந்த பகுதி விரைவில் நீரை ஈர்க்காது. நெல், கரும்பு போன்ற நன்செய்ப் பயிரை அங்குப் பயிரிடுவர். சேறு குறைந்த பகுதியில் கிழங்குகள், பயறுகள் முதலியவற்றைப் பயிரிடுவர். சேறுகளில், வழுக்கி விழச் செய்யும் பசைத் தன்மையுடையதும், பசைத் தன்மையற்றதுமாக இருவகை உண்டு என்பதைக் குறிப்பால் உணர்த்தவும், வழுக்குகின்ற சேற்று நிலத்தில் நடக்கும் பொழுது ஊன்று கோல் வேண்டும் என்று கூறுகின்றார்.

சத்துள்ள நிலங்களை ஆராய்ந்து தேர்ந்து கொண்டு பயனற்ற நிலங்களை ஒதுக்கி உள்ளனர் என்பதையும் திருக்குறள் கூறுகிறது. அதனைக் களர் நிலம் என்று கூறுவர். கல்லாத மக்களைப் போல இக்களர் நிலம் பயன்தராது என வள்ளுவர் கூறுகின்றார்.

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்<br>
களர்அனையர் கல்லா தவர். (406)

"இக்களர் நிலம் விளைவுக்குப் பொருந்தாத நிலமாகும். விதைத்த விதையையும் முளைக்கவொட்டாமல் செய்யும் தன்மையுடையது. இதனைச் சவட்டு நிலம் என்றும் கூறுவர்." இக்களர் நிலத்தையே "உவர் நிலம்" என்று கூறுவரும் உளர். இந்நிலம் பொதுவாக நானிலங்களிலும் காணப்படினும் சிறப்பாக நெய்தல் நிலப்பகுதியில் மிகுதியும் காணப்படுவதாகும். இவை திருக்குறள் வழியாக நாம் அறிந்து கொள்ளும் மண்ணியல், அறிவியல் அடிப்படையில் நிலப்பாகுபாடுகள் பற்றிய கருத்துக்களாகும்.

மண்ணியல் அறிஞர்கள் தமிழகத்திலுள்ள மண் தன்மைகளை ஆராய்ந்து ஆறு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர். செம்மண், கருமண், வண்டல்மண், செம்புறைமண், மணல்கால்மண், களர்மண் என்பன அவற்றின் பெயர்களாகும். இவ்வகைப் பிரிவுகள் தமிழக மண்வகைகளுக்கே அன்றிப் பொதுவாக எல்லா இடங்களுக்கும் பொருந்துவனவாகும்.

**செம்மண்**

செம்மை நிறமண்ணுடைய இந்நிலத்தில் புன்செய்ப் பயிர்கள் விளைவிக்கப் படுகின்றன. நீரை விரைவில் ஈர்க்கக் கூடிய தன்மையுள்ள இந்நிலத்தை முல்லை நிலத்தோடு ஒப்பிடலாம். முல்லையிலும் இத்தகைய புன்செய்ப் பயிர்களே பயிரிடப்பட்டன,

**கருமண்**

கருமை நிறம் பொருந்திய இந்நிலத்தைக் கரிசல் நிலம் என்று வழங்குவர். நீர்வளம் இல்லாத கருமண் நிலத்தில் தினைப்பயிர்களும் பருத்தி வகைகளும் பயிரிடப் படுகின்றன. நீர் வளமில்லாக் கருமண் நிலத்தை முல்லை நிலத்தோடும் நீர்வளமுள்ள கருமண் நிலத்தை மருத நிலத்தோடும் ஒப்பிடுவது பொருத்தமாகும்.

**வண்டல் மண்**

ஆற்று நீரால் அடித்துவரப்படும் வண்டல் மண் மிகுந்த பகுதியில் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை முதலியன பயிரிடப்படுகின்றன. நீர் வளமுள்ள பகுதியாக கருநிறச் சார்புடைய மண்ணுகைவும் இருத்தலின் இந்நிலத்தை மருத நிலத்தோடு ஒப்பிடலாம். காவிரிபாயும் பகுதிகள் வண்டல் படிந்த நிலமாதலின் அப்பகுதிகள் அனைத்தும் மருத

நிலமாகும். ஆற்று நீர்ப்பகுதியே அன்றி நல்ல நீர்வளஞ்சான்ற மண்வளம் பொருந்திய பகுதியும் மருதநிலப் பிரிவையே சாரும்.

**செம்புறை மண்**

செம்புறை மண் மிகுந்துள்ள இடம் மலையும் மலைசார்ந்த மலையோரப் பகுதியாகும். கிழங்கு வகைகள், சிறுதானியங்கள் (தினை வகைகள்) மிளகு முதலியவை இங்கே பயிராகின்றன. இப்பயிர் வகைகளை நோக்க இந்நிலம் குறிஞ்சி நிலத்தோடு ஒப்பிடும் தன்மை வாய்ந்தது ஆகும்.

**மணல்கால் நிலம்**

மணல் பாங்கான இந்நிலத்தில் தண்ணீர் மிகுதியும் மேல்மட்டத்திலேயே காணப்படும். தென்னை, சவுக்கு முதலியன பயிர் செய்வதற்கு இப்பகுதியே ஏற்றதாகும். இந்நிலத்தைக் கடலும் கடல் சார்ந்த மணல்கால் பகுதியாகிய நெய்தல் நிலத்தோடு ஒப்பிடலாம்.

**களர் அல்லது உவர் நிலம்**

இவ்வகையான நிலம் எல்லா வகையான நிலங்களோடும் கலந்து காணப்படுவதொன்றாகும். பெரும்பான்மையும் இந்நிலங்கள் நெய்தல் சார்பு உடையவை. இதனைப் பயன்படாத நிலம் என்று வள்ளுவர் ஒதுக்கியுள்ளார்.

(மேற்கூறிய கருத்துக்களிலிருந்து வள்ளுவர்) தொல்காப்பியர் வகுத்த நானிலப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டு நிலப்பாகுபாடுகளை வகுத்துள்ளார் என்பதும், முதல் கரு உரி ஆகிய முப்பொருள்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார் என்பதும், மண்ணியல் ஆய்வில் ஈடுபாடுகொண்டு மண்ணின் தரம் நிறம் ஆகியவைகளை ஆய்ந்துள்ளார் என்பதும் அறியக்கிடக்கின்றது. திருக்குறளின் இக்கருத்துக்கள் கொண்டு அக்கால மக்களின் மண்ணியல் அறிவினை ஒருவாறு உணரலாம்.)

# 4. நீர்நிலைகள்

"நீரின்று அமையாது உலகம்" என்பது வள்ளுவர் வாக்கு. நீர் இல்லாமல் உலக இயக்கம் நடைபெறாது என்பது அதன் பொருள். உலக இயக்கத்திற்கு நீர் இன்றியமையாதது என்பதை வள்ளுவர் பத்துக்குறள்களில் விளக்கிக் கூறியுள்ளார். உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் மனித வாழ்விற்கு இன்றியமையாதன. அம் மூன்றனுள் முதன்மையானது உணவு. அவ்வுணவுப் பொருள்களை உண்டாக்குவதோடன்றி மக்களுக்கு ஓர் உணவாகவும் அமைவது நீரே. இக்கருத்தினை,

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை. (12)

என வள்ளுவர் கூறுகின்றார். ஆதலால் உயிரையும் உடம்பையும் வளர்க்கும் நீரினை "அமிழ்தம்" என்று உணர்ந்து அதனைத் தக்கவாறு பயன்படுத்தவேண்டும் என்பது அவரது கருத்தாகும்.

மழை பெய்யாவிடின் பசுமையான புற்களும் நிலத்தில் முளைக்காது என்பது உலகறிந்த செய்தி. மழை இன்றேல் உழவர்கள் உழு தொழிலைச் சிறப்பாகச் செய்தல் இயலாது; மக்கள் உணவின்றிப் பசியால் துன்புற நேரிடும்; தானம், தவம் போன்ற உலக அறங்கள் நடைபெறாது. நீரின்றேல் விளைவு இன்றி வறுமை ஏற்பட்டுத் தனிமனித ஒழுக்க நெறிகளில் குறைபாடுகள் தோன்றும். அதனால் சமூகநல அமைப்பிலும் சீர்கேடுகள் தோன்றி நாடு நலிவுறும். ஆதலின் மக்களை வாழ வைக்கும் மழையைத் தெய்வமாகக் கருதினார்கள். கைமாறு கருதாமல் பொழிந்து மக்களைக் காக்கின்றமையினால் மழையை, "மாமழை போற்

றுதும், மாமழை போற்றுதும்'' என இளங்கோவடிகள் தம் காவியத்தில் போற்றி வணங்கியுள்ளார்.

**நாட்டிற்கு உறுப்பு**

உலகம் ஐந்து பொருள்களால் ஆன ஒரு கூட்டுப் பொருளாகும். மண் திரள் நிறைந்த நிலம், நிலத்தின்மீது உயர்ந்த வான், வானில் வீசும் காற்று, காற்றில் தோன்றும் நெருப்பு, நெருப்புக்கு எதிரான நீர் ஆகிய ஐந்து இயற்கைப் பொருள்களுமே உலகின் உறுப்புக்களாகும். இவைகளை ஐம்பெரும் பூதங்கள் என்று இலக்கியம் கூறும். இவ்வைந்து பொருள்களும் உலகுக்கு உறுப்பாவதுபோல நாட்டிற்கும் உறுப்புகள் உண்டு. நாட்டிற்கு உறுப்பாவன நான்கு. அவை மழை நீர், நிலநீர் ஆகிய நீர்நிலைகள், வளஞ்சான்ற மலை, வற்றாத ஆறுகள், வலிய அரண் என்பன. இதனை,

> இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
> வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. (737)

என்னும் குறளால் அறியலாம்.

இவ்வாறு உலக அமைப்புகளில் ஒன்றாகவும் நாட்டின் உறுப்புக்களில் இன்றியமையாததாகவும் உள்ள நீரைத் தமிழர் பயன்படுத்திய விதம், நீர் வற்றிய காலத்தில் ஆற்றையும் ஏரியையும் குளத்தையும் கிணற்றையும் அமைத்துக்கொண்ட நிலை, அவர்கள் மேற்கொண்ட நீர்ப்பாசன முறைகள் ஆகியவற்றை இப்பகுதி தெளிவாக்குகின்றது.

**மழைநீர்**

கடல்நீர் ஆவியாக மாறிக் குளிர்ந்த நிலையில் மழையாகப் பொழிகின்றது என்று கூறுவது அறிவியல். மேகம் கடல் நீரை முகந்துசென்று மழையாகப் பொழிகின்றது. அவ்வாறு செய்யாவிடின் கடல் தன் பெருமையை இழந்துவிடும் என்று கூறுவது இலக்கியம். இதனை அறிவியல் அடிப்படையில் அழகுபடக் கூறுகின்றார் வள்ளுவர்.

> நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்துஎழிலி
> தான்நல்காது ஆகி விடின். (17)

ஆதலின் மழையின் தோற்றத்தை உணர்த்துவதோடு மழை பெய்யாமைக்குரிய காரணத்தையும் விளக்குகின்றார். அரசன் செம்மையாக ஆட்சி செய்யின் மழை தவறாது பெய்யும் என்று மக்கள் அறத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்தனர். கொடுங்கோல் ஆட்சி நடக்குமாயின் மழை பெய்யாது என வள்ளுவர் கூறுகின்றார்.

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல். (559)

நாட்டில் மழை பெய்யாது வறட்சி ஏற்படுமாயின் தங்கள் ஆட்சியில் குறை நேர்ந்திருக்குமோ என அரசர்களும் அஞ்சியிருக்கிறார்கள். சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னன், "அரசனாக இருந்து ஆட்சி செய்வதில் உள்ள துன்பங்களில் முதன்மையானது மழை வளம் குன்றுதலே" என்று கூறியுள்ளான்.

அறத்திற்கும் மழைக்கும் உள்ள தொடர்பை உணர்த்திய வள்ளுவர் மழையின் ஆற்றலைத் தெளிவுபடக் கூறியுள்ளார். மழை வேண்டும் போது பெய்தும். வேண்டாதபோது பெய்யாதும் இருத்தல் வேண்டும். பருவத்தில் பெய்யும் மழையே வேளாண்மைக்குப் பயன்படுவதாகும். அத்தகைய மழையைத் 'தொழில் மழை' என்று கூறுவர். தொழிலுக்கு உதவியாகப் பெய்யாத மழை பயனற்றதாகும். அன்றியும் மழை அளவுக்கு மிகுதியாகப் பெய்தாலும் மழைநீர் உரிய பயனைத் தாராது போதலே அன்றி 'மிகுபெயல்' பயிரையும் அழிக்கும். மழைபெய்யாது போனாலும், மழையை எதிர்பார்த்துச் செய்த பயிர்கள் அழிந்து படும். ஆதலால் பயிரைச் செழிக்கச் செய்து வாழ்விப்பதும் பயிரை அழித்துத் தாழ்விப்பதும் ஆகிய இரண்டையும் செய்யும் ஆற்றல் மழைக்கு உண்டு என்பதைக் கூறியுள்ளார்.

கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. (15)

மேலும் மக்கள் வேளாண்மைக்கு மழையைப் பெரிதும் நம்பி இருந்தார்கள் என்பதை "வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால்", "வானோக்கி வாழும் உலகெல்லாம்" என்ற தொடர்களிலும் விளக்கியுள்ளார்.

## ஆறுகள்

பருவமழை தவறாது பெய்ததால் நாட்டில் வற்றாத ஆறுகள் ஓடலாயின. தமிழகம் சேர சோழ பாண்டிய நாடுகள் என முப்பெரும் பகுதிகளாக விளங்கியது. நாடு செழிப்படைய மழையைப் போல் ஆறுகளும் இன்றியமையாதன. சேர நாட்டில் ஆன்பொருநையும், சோழ நாட்டில் காவிரியும், பாண்டிய நாட்டில் வையையும், பிற சிறு ஆறுகளும் பாய்ந்து தமிழகத்தைச் செழிப்புறச் செய்ததை,

"காவிரி தென்பெண்ணை பாலாறு - தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி - என
மேவிய ஆறு பலவோட - திரு
மேனி செழித்த தமிழ்நாடு"

எனப் புதுமைக் கவிஞர் பாரதியார் பாடி மகிழ்ந்துள்ளார். இவ்வாறுகள் "வான் பொய்ப்பினும் தான் பொய்யா" வளம் நிறைந்து, நீர் வற்றிய காலத்தும் ஊற்று நீரால் உலகை ஊட்டி வளர்த்தன என்பதை அறிகின்றோம். இத்தகைய ஆறுகளை வள்ளுவர், "வருபுனல்" என்று குறிப்பிடுகின்றார். மழைக்காலத்தில் ஏற்றுக்கொண்ட நீரைக் கோடை காலத்தில் வெளிப்படுத்தும் தன்மை உடையது மலை. அம்மலையிலிருந்து உற்பத்தியாகும் நீர் கோடை முழுவதும் வேளாண்மைக்குப் பயன்படும். கார் காலத்தில் மீண்டும் மழை பொழிவதால் ஆண்டு முழுமையும் ஆற்றில் நீர் வற்றாமல் ஓடிக்கொண்டே இருக்கும். இவ் 'வருபுனல்' பாய்ந்த பகுதிகளில் நெல்லும் கரும்பும் வாழையும் இஞ்சியும் மஞ்சளும் விளைந்தன. ஆற்றுநீர் பல கால்வாய்களாகப் பிரிக்கப்பட்டு வாய்க்கால் வழியோடி வயலிலுள்ள பயிர்களைச் செழிக்கச் செய்தது.

**ஏரிகள்**

ஏரிகளைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடவில்லையென்றாலும் ஆறுகளை அடுத்து ஏரிகள் நீர்ப்பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன என்பதை வள்ளுவர் காலத்திற்குச் சற்று முன்னும் பின்னும் உள்ள இலக்கியங்கள் கூறுகின்றன. ஏரிகள் இயற்கையாக அமைந்த நீர் நிலைகளாகும்; செயற்கையாக அமைக்கப்படுதலும் உண்டு. காவிரிப் பூம்பட்டினத்தில் இரண்டு ஏரிகள் இருந்தன எனப் பட்டினப்பாலை கூறுகின்றது. பொருநர் ஆற்றுப்படை என்னும் நூலின் இறுதியில் உள்ள வெண்பா, தமிழகத்தில் ஆங்காங்கே ஏரிகள் இருந்தன என்பதையும் அவ்வேரிகள் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன என்பதையும் விளக்குகின்றது. சோழநாட்டில் காவிரி பாய்ந்து வளஞ் செய்ததால் அந்நாட்டில் விளைவு மிகுந்திருந்தது. வயல்களில் நெல் அறுக்கும்பொழுது சிந்தும் நெல் அளவுதான் பிறர் நாட்டு ஏரிப்பாசனம் ஏற்றப் பாசனம் ஆகியவற்றால் விளைந்த நெல்லின் அளவு இருக்கும் என்று அப்பாடல் கூறுகின்றது. இக்கருத்தினை நோக்கும் பொழுது சேர, பாண்டிய நாடுகளில் ஏரிகள் மிகுந்து இருக்கக்கூடும் என்பதை அறியலாம்.

ஏரியும் ஏற்றத்தி னும்பிறர் நாட்டு
வாரிசுரக் கும்வளன் எல்லாம் - தேரின்
அரிகாலின் கீழ்உகுக்கும் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு. (பொருநர்-வெண்பா)

வள்ளுவர் காலத்தில் ஏரியும் குளமும் மயங்கி வழங்கப்பட்டுள்ளது என்பதைத் திருக்குறளுக்கு உரை வகுத்த பேராசிரியர்கள் விளக்கி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**குளங்கள்**

வள்ளுவர் குளத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குளங்கள் சிறு குளம் என்றும் பெருங்குளம் என்றும் அளவால் பெயர் பெற்றிருந்தன. சிறு குளங்களுக்கு எட்டாம்நாள் பிறைச் சந்திரனைப்போல வளைவான கரைகளை அமைத்திருந்தனர் என்றும் அக்குளத்தில் உள்ள நீர் தெளிந்து இருக்கும் என்றும் அறிகின்றோம். பெருங்குளம் என்பது ஏரியைப் போன்று மிகப்பெரிய அளவை உடையதாகும். இதனைச் செயற்கை ஏரி என்று கூறினும் பொருந்தும். இப்பெருங் குளங்கள் ஆற்று நீராலும் மழைநீராலும் நிரம்பி வழியும். சிற்சில சமயங்களில், மழை மிகுதியாகப் பெய்யுமானால் குளம் நிறைந்து கரை உடைந்து விடுவதும் உண்டு. அக்குளத்தினை ஆள் வைத்துக் காவல் செய்தார்கள் என்பதையும் அறிகின்றோம்.

பண்டைத் தமிழ் மன்னர்கள் தங்கள் நாட்டை வளமுள்ளதாக்கக் காடுகளில் உள்ள மரங்களை எல்லாம் வெட்டி அழித்து அந்நிலங்களைக் கழனி நாடாக மாற்றினர். அக்கழனிகட்கு ஆங்காங்கே குளங்களை அமைத்து நீர்ப்பாசன வசதி செய்து வேளாண்மையைப் பெருக்கி மக்களை வாழ்வித்தனர் என்பதைப் பழந்தமிழ் நூல்கள் விளக்குகின்றன. இக்கருத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கினாற்போல, கரையில்லாத குளத்தில் நீர் நிறையுமானால் அது பயனற்றுப்போகும் என்றும் அது போல் சுற்றம் இல்லாதவன செல்வமும் பயனற்றுப் போகும் என்றும் கூறி, குளத்திற்குக் கரை இன்றியமையாதது என்பதை வள்ளுவர் விளக்கி உள்ளார்.

அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று. (523)

இதனால் கரை அமைந்த குளங்களும் கரை அமைக்கப்படாத குளங்களும் இருந்தன என்பதும் ஆற்றுக்கு அடுத்த நிலையில் இக் குளங்கள் பாசனத்திற்குப் பெரிதும் பயன்படுத்தப்பட்டன என்பதும் தெளிவாகின்றது.

### கிணறுகள்

மழை நீரையும் அதன்வழிப் பெருகிய ஆற்று நீரையும் இயற்கை நீர் நிலைகளாகிய ஏரிகளையும் செயற்கை நீர் நிலைகளாகிய குளங்களை யும் வேளாண்மைக்குப் பயன்படுத்திய மக்கள், நீர் வரத்துக்கால் இல்லாத இடத்தும் இந்நீர் நிலைகளில் நீர்வற்றிய காலத்தும், நிலத்தைத் தோண்டி நீர் இறைத்து வேளாண்மை செய்தனர். இச் செயல் அவர்கள் வேளாண்மை செய்வதில் மேற்கொண்ட கூடுதல் முயற்சியைக் காட்டுவதாக உள்ளது. கிணறுகளைக் கேணி என்று கூறு வதும் உண்டு. மணற்பாங்கான பகுதிகளில் தோண்டிய கிணறுகளை மணற்கேணி என்று குறித்தனர்.

"தொட்டனைத் தூறும் மணற்கேணி" (396)

மணற்கேணியில் தோண்டத் தோண்ட நீர் ஊறுவது மட்டுமின்றி இறைக்க இறைக்கவும் நீர் ஊறும் என்பதும், அவ்வாறு ஊறும் நீரை இறைத்து வேளாண்மைக்குப் பயன்படுத்துவார்கள் என்பதும் திருக் குறளால் அறியப்படும் செய்தியாகும்.

வேளாண்மைக்கே அன்றிக் குடிநீருக்காகவும் ஊரின்கண் கேணி கள் தோண்டப் பட்டன. அவைகள் 'ஊருண்கேணி' என்று போற்றப் பட்டன. திருவள்ளுவர் அதனை ஊருணி என்பார். அவ்வூருணியில் நீர் நிறையின் அஃது யாவர்க்கும் பயன்படும்.

### நீரைப் பயன்படுத்திய முறை

வேளாண்மை செய்வோர் தண்ணீரை வீணாக்காமல் சிக்கன மாகவும் அளவாகவும் பயன்படுத்தினார்கள் என்பதையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இன்று அதனை நீர் நிர்வாகம் என்ற பெயரால் கூறுவர். வயல்களில் வரப்பு அமைத்து, பாத்தி கட்டி, நீர் பாய்ச்சியுள்ளனர். "வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந் தற்று" என்ற தொடரே இதற்குச் சான்றாகின்றது. கரும்புநடும் வயல் களைக் கூடப் பாத்தி பாத்தியாகப் பிரித்து நட்டார்கள் என்பதையும்

அறிகின்றோம். இவ்வாறு பாத்தி அமைத்துக் கொண்டது நீரைச் சிக்கன முறையில் பயன்படுத்துவதற்கேயாகும். இன்று இதனைப் பாத்திப் பாசன முறை என்று கூறுவர்.

இவ்வாறு எண்ணிய அளவு விளைச்சலை எண்ணியபடி பெற இயற்கையாகிய மழையை, வற்றாத ஆறுகளைப் பயன்படுத்தினர். அடுத்துப் (பருவ காலங்களில் பெய்யும் மழை நீரை, ஏரி குளங்களில் தேக்கி வைத்து வேளாண்மை செய்தனர். பருவ மழை தவறிய காலத்தும் ஏரி குளங்களில் நீர் வற்றிய காலத்தும் கிணறுகளைத் தோண்டிப் பயிர் விளைத்தனர். இவ்வாறு காலத்திற்கேற்ப நீர்நிலைகளைப் பயன்படுத்தியும் நீரைச் சிக்கனமாகத் தக்க முறையில் பாய்ச்சியும் வேளாண்மை செய்தனர் என்பதைத் திருக்குறள் வழிநின்று அறிகின்றோம்.)

# 5. உழவியல் ✓ ⊕

மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாது தேவைப்படுவன மூன்று. உணவு, உடை, உறையுள் என்பன அவை. அம்மூன்றனுள் முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகக் கருதப்படுவது உணவு. அவ்வுணவைத் தரும் தொழில் உழவுத் தொழில். ஆதலின், உலகத்துத் தொழில்கள் அனைத்திலும் உழவுத் தொழிலே தலையாய தொழிலாகும் என்று வள்ளுவர் கூறுகின்றார். யார் யார் எந்தெந்தத் தொழில்களைச் செய்தாலும், எங்கெங்கெல்லாமோ சுற்றி வந்தாலும் இறுதியில் உணவுப் பொருள்களை நாடியே வாழவேண்டியுள்ளது. உணவுப் பற்றாக் குறைக் காலத்தில் உலகைச் சுற்றி வரும் விமானிகள் எல்லாம் உணவுப் பங்கீடு வழங்கும் இடங்களில் ஒருவர்பின் ஒருவராக நின்ற காட்சியே இதனை மெய்ப்பிக்கும். அதனால்தான்,

> சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
> உழந்தும் உழவே தலை. (1031)

என அறுதியிட்டு உரைக்கின்றது திருக்குறள். எத்தொழிலைச் செய்வார்க்கும், தொழிலே செய்ய இயலாதார்க்கும் உணவைத் தருவது உழவுத் தொழிலே. உழவுத் தொழில் நின்றுவிட்டால், உழவர்கள் தொழில் செய்யாது முடங்கி விட்டால், உலகப் பொருள்களை எல்லாம் துறந்துவிட்டோம் என்று கூறும் முனிவர்களாலும் வாழ முடியாது. உலகமே நிலை கலங்கி நின்றுவிடும். உலகம் என்னும் பெருந்தேர் ஓட உழவர்கள் என்ற அச்சாணி தேவை. இதனை,

> உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
> எழுவாரை எல்லாம் பொறுத்து. (1032)

என்ற குறள் விளக்குகின்றது.

உலகத்தில் தொழில்கள் பல. அவற்றுள் உரிமையுடையன சில; உரிமையற்றன பல. அவற்றுள், உழவுத் தொழில் ஓர் உரிமைத் தொழில். அத் தொழில் செய்வோர் உரிமை உடையோர் ஆவர். அவர்கள் வாழ்வதே வாழ்வு. அவ் வாழ்வே உரிமையுடைய வாழ்வு. அவர்களே தம்முயற்சியால் உழுது விளைத்த பொருள்களைப் பிறர்க்குக் கொடுத்தும் வாழ முடியும். உணவுப் பொருள்கள் உடலை வளர்த்து உயிரைக் காக்கும் உயிர்ப் பொருள்கள். அதனாலேயே உழவர்கள், "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்று சிறப்பிக்கப் பெற்றனர்.

வள்ளுவர் காலம் முடியாட்சிக் காலம் ஆதலின் குறுநில மன்னர்கள் பல்லரைத் தம் மன்னரின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரவும், சிற்றரசுகள் எல்லாம் அடங்கிய பேரரசு அமைக்கவும், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யும் உழவர்களே காரணமாய் இருந்தனர். புரப்பவர்களையும் இரப்பவர்களையும் காப்பாற்றுபவர்கள் உழவர்களே· ஆதலினால்தான் உழவர்கள் ''அச்சாணி'' என்று போற்றப்பட்டனர். அன்றியும் உழவுத் தொழிலால் யாருக்கும் எவ்விதத் தீங்கும் விளைவதில்லை. பிற தொழில்களைப் போல் போட்டியும் பொறாமையும் கொள்ள வழியில்லை. அவரவர் வயலில் அவரவர் விளைவித்துக் கொள்கின்றனர். அதனால் வீடும் நாடும், நலமும் வளமும் பெறுகின்றன. வள்ளுவர் பலவகையான தொழில்களைப் பற்றிய குறிப்புகளைத் தமது நூலில் கோடிட்டிருந்தாலும் முழுமையாகப் போற்றிப் புகழ்வது உழவுத் தொழில் ஒன்றையேயாகும். இக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டே,

"உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

என்ற முதுரையும் எழுவதாயிற்று. இவ்வாறு மன்னராலும் மக்களாலும் மதிக்கப் பெற்ற உழவர்கள், உழவு முறையில் கொண்டிருந்த கொள்கைகள் இன்றைய உழவியல் அறிஞர்களாலும் போற்றற்குரியதாக விளங்குகின்றன.

**உழுதல்**

"அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்" என்பது பழமொழி. இம்மொழி இன்று உழவியலின் அடிப்படைத் தத்துவமாகப் போற்றப் படுகிறது. வள்ளுவர் இக்கருத்தினை வலியுறுத்துவதோடு எவ்வாறு

உழவேண்டும் என்பதனையும் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார். பெரும் பெரும் கட்டிகளாக இருக்கின்ற வயல்மண் மிகச் சிறுசிறு கட்டிகளாகும் வரை உழவேண்டும். ஒருபலம் அளவுள்ள மண்கட்டிகள் (தொடி) கால்பலம் (கஃசு) அளவுள்ள சிறு கட்டிகள் ஆகும் வரை அஃதாவது புழுதியாகும் வரை உழவேண்டும். அதற்குப் பலசால் உழவேண்டும். ஒவ்வொரு சால் உழும் பொழுதும் ஆழம் மிகுந்து கொண்டே போகும். இதனைத் "தொடிப்புழுதி கஃசு" என்ற சொல் தொடர் உணர்த்து கின்றது. இஃது புன்செய் நிலத்திற்கேயன்றி நன்செய் நிலத்திற்கும் பொருந்துவதாகும். இவ்வாறு நன்கு உழுத மண்ணை "உணக்க" வேண்டும்; பொடிப் பொடியாக உதிரும் வண்ணம் நன்றாகக் காய விடவேண்டும். அவ்வாறு உணக்கின் அதாவது உலரவிடின் காற்று மண்ணுள் புகும்; மண்ணில் இயல்பாக உள்ள ஈரப்பசை நீங்கும். அன்றியும் பலமுறை உழுவதால் கீழ்மண் மேலும், மேல்மண் கீழும் கலக்க ஏதுவாகின்றது; அடிமண்ணில் உள்ள வெப்பத்தையும் ஆற்றி விடுகிறது. முன்னைய பயிரால் அடிமண்ணில் குறைந்த சத்துக்கள் இம்மண் கலப்பால் சரி செய்யப்படுகிறது. ஒரு முறையிட்ட எரு அடுத்து வரும் ஓரிருமுறைகட்குப் பயன்படுமாதலின் பிடியளவு எருவும் இல்லாமலேயே பயிர் செழித்து வளர்ந்து நல்ல பலனைத்தரும் என்று கூறுகின்றார் வள்ளுவர். இதனால் உழுதலின் சிறப்பு வற்புறுத்தப் பெறுகிறது.

> தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
> வேண்டாது சாலப் படும். (1037)

**எருவிடுதல்**

எரு இல்லாமல் பயிர் செய்வது நிலையான பொதுவிதியல்ல என்பதை அடுத்த குறளிலேயே விளக்கி விடுகின்றார். ஏரால் நிலத்தை உழுது பண்படுத்துவது இன்றியமையாதது எனினும் அதனினும் சிறப்பு வாய்ந்தது எருவிடுதல் ஆகும். இதனை, "ஏரினும் நன்றால் எருவிடுதல்" என்பதன் மூலம் விளக்குகின்றார் வள்ளுவர். இவ்வெருவின் இன்றி யமையாமையை மனித வாழ்வோடு இயைத்துக் காட்டுகிறது திருக் குறள். தலைவனுக்கும் தலைவிக்கும் காதல் தோன்றுகிறது. அக்காதல் வளர்ச்சியை ஒரு பயிரின் வளர்ச்சியாகக் காணு கின்றார் வள்ளுவர். வளரும் பயிருக்கு எரு தேவை. அவ்வெருவும் பயிரிடும் தொடக்கத்தில் இடவேண்டும். அறுவடையின்போது எரு இடுதல் பயனற்ற செயலாகும். எருவில் பலவிதமான சத்துக்களும் (தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து) அடங்கி இருத்தல் வேண்டும்.

இந்நுணுக்கங்களை நன்கு உணர்ந்த வள்ளுவர், காதலரைப் பற்றி ஊரார் பலவாறு பேசுகின்ற பேச்சுக்களை எருவாக உருவகம் செய்கின்றார். ஊரில் உள்ளோர் தொடக்க காலத்தில்தான் அக்காதல் உறவைப் பற்றிப் பேசுவார்கள். அத்தகைய பேச்சுக்களே அவர்கள் காதலை மேன்மேலும் வளரச் செய்கின்றது. திருமணத்திற்குப் பிறகு அவர்கள் காதலைப் பற்றிய பேச்சே இராது. அதுபோல் வளரும் பயிர் மேலும் மேலும் வளரத் தொடக்கத்தில் எரு இடவேண்டும். அன்றியும் ஊரார் அவர்கள் காதலைப்பற்றிப் பலவாறு பேசுவதுபோல எருவிலும் பலவிதமான சத்துக்கள் அடங்கியுள்ள எருவையே இடவேண்டும் என் பதையும் குறிப்பால் புலப்படுத்தி விடுகின்றார். இதனை, "ஊரவர் கௌவை எருவாக" என்ற குறள் தொடர் நமக்கு அறிவிக்கின்றது. இவ் வாறு எருவின் இன்றியமையாமை உணர்த்தப்படுவதை அறியலாம்.

**நீர் பாய்ச்சுதல்**

ஏரையும் எருவையும் போல் அல்லாமல் நீர் பாய்ச்சுதல் பயிரின் அறுவடைக் காலம் வரைத் தொடர்ந்து நடைபெற வேண்டும். மேலே கூறிய காதல் தலைவியை அவளது அன்னை நாள்தோறும் கடிந்துரைக் கின்றாள். இக் கடிந்துரையானது பயிர் வளர்ச்சிக்கு முறைப்படி நீர் பாய்ச்சுவது போல அவர்கள் காதல் பயிர் வளரப் பயன்பட்டதாம். ஒருதாய் தன்மகள் களவு ஒழுக்கத்திலிருந்து (காதல் நிலையிலிருந்து) கற்பொழுக்கத்திற்குச் செல்லும்வரை (திருமணம் ஆகும் வரை) அறி வுரை கூறிக்கொண்டே இருப்பது போல் பயிர் வளர்ந்து அறுவடைக் குத் தயாராகும் வரை நீர் பாய்ச்ச வேண்டும் என்ற குறிப்பினை "அன்னை சொல் நீராக" என்ற தொடர் விளக்குவதை அறிந்து மகிழலாம்.

நீர் பாய்ச்சுவதன் இன்றியமையாமையை வலியுறுத்திய வள்ளுவர் அதனால் விளையும் நன்மையையும் விளக்கியுள்ளார். நல்ல உணர்வு உடையவர்களிடத்தில் ஒரு கருத்தைச் சொல்வோமானால் அது பல கருத்துக்களாக மலர்ந்து பெருநன்மை விளைக்கும். இச்செயலானது தானாகவே வளர்கின்ற பயிருக்கு மேலும் பாத்தி கட்டி நீரைப் பாய்ச்சு வது போன்றதாகும். தானாகவே வளர்ந்து பலனைக் கொடுக்கும் மானா வாரிப் பயிருக்கும் தண்ணீர் பாய்ச்சிப் பெரும் பலனை அடையலாம். ஆதலின் எவ்வகைப் பயிருக்கும் நீர் பாய்ச்சுதல் வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்தாகின்றது. அகவாழ்விலும் புறவாழ்விலும் உழவுத் தொழிலே சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதை இக்கருத்துக்கள் நமக்கு அறிவிக்கின்றன.

**களை எடுத்தல்**

பயிர்கள் வளர்ந்து வரும்போது களைகள் தோன்றுவது இயல்பு. இக்களைகளை அவ்வப்போது களைந்து விட வேண்டும். இல்லாவிடின் பயிர்கள் எதிர்பார்க்கும் பலனைத் தராமல் போய்விடும். இவ்வாறு பயிர்களுக்கிடையே தோன்றும் களைகளைக் கையால் பிடுங்கின் அதைக் களை பறித்தல் என்றும், களைக் கட்டு என்ற கருவியால் களையை வெட்டினால் அதைக் களை வெட்டுதல் என்றும் கூறுவர். முன்னர் கூறியது நன்செய்க்கும் பின்னர் கூறியது புன்செய்க்கும் பொருந்துவதாகும். பசிய பயிர்கள் செழித்து வளர்கின்றன. பயிருடன் களையும் வளர்கின்றது. இதனைக் காணுகின்றார் வள்ளுவர். உடனே மன்னனும் மக்களும் அவர் கண் முன் தோன்றுகின்றனர். நல்ல மனிதர்களிடையே சில தீய மனிதர்கள் தோன்றி நல்லவர்களின் நன்மையைக் கெடுத்து விடுவது அவருக்கு நினைவுக்கு வருகின்றது. இப்பயிர்களில் களைகள் தோன்றி நல் விளைச்சலுக்குத் தடையாக இருப்பது போல இக்கொடியவர்கள் நன்மை விளைவுக்குத் தடையாக இருக்கின்றார்களே என வருந்தி, உழவன் பயிர்களில் உள்ள களையை வேரோடு எடுப்பதைப் போல இவர்களை அடியோடு அழித்துவிட வேண்டும் என்று உழவை அறிவாக்கி மன்னனுக்கு வழங்குகின்றார். அன்றியும் களையெடுப்பதிலும் ஒரு நுணுக்கத்தை உணர்த்துகின்றார் வள்ளுவர். களைகள் மீண்டும் தோன்றாதவாறு எடுக்க வேண்டும் எனின் கொடியவர்களைக் கொன்று அழிப்பது போல அவைகளை வேரோடு பறிக்க வேண்டும். களைகளை அழிப்பதும் கொடியவர்களை அழிப்பதும் அழிவுச் செயல்கள் அல்ல. களைகளை அழிப்பது பயிர்களைக் காப்பாற்ற. கொடியவர்களை அழிப்பது நல்லவர்களைக் காப்பாற்ற என்பது கருத்து. ஆதலின், இவ்வகையில் களையெடுக்கும் தன்மையையும் தெளிவாக்குகிறார்.

கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர். (550)

**காப்பு**

வளரும் பயிருக்குக் காவல் அவசியமாகும். காத்தலில் இரு வகையுண்டு. பயிர்களுக்கு நோய் வராமல் காத்தல் ஒன்று. பயிர்களைப் பிறவுயிர்கள் அழிக்காமல் காத்தல் மற்றொன்று. இவ்விரு வகையாலும் அழிவு நேராமல் காப்பது பயிர் செய்வார் கடமையாகும். வயலுக்குப் பாய்ச்சிய நீர் வயலில் தங்காமல் உடைந்து போதலும் உண்டு. உழவு மாடுகளே கயிற்றை அறுத்துக் கொண்டு பயிர்களை மேய்ந்து

விடுதலும் உண்டு. கிளிகள் கதிர்களைக் கொத்திச் செல்வதும் உண்டு. எலிகள் விளைந்த கதிர்களைக் கடித்துச் சென்று வலைகளில் வைத்துக் கொள்வதும் உண்டு. நாவாய்ப் பூச்சிகள் பயிர்களை நாசம் செய்வதும் உண்டு. அதிக மழையால், காற்றால் பயிர்கள் சாய்ந்து விடுதலும் உண்டு. இவ்வாறு இயற்கையாலும் செயற்கையாலும் வரும் தீமைகளைப் போக்கவே நாள்தோறும் சென்று கண்காணித்துக் கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். ''பயிர் பாராமல் கெடும், கடன் கேளாமல் கெடும்'' என்பது நம் நாட்டுப் பழமொழி. இக்காப்பினை ஓர் அழகிய உவமையின் வாயிலாக விளக்குகின்றார் வள்ளுவர். கணவன் தன் மனைவியை அன்போடு பேணிக் காக்க வேண்டும். அவள் வெளிப்படுத்தும் தேவைகளை அவ்வப்போது நிறைவு செய்ய வேண்டும். அவளது தேவைகள் என்னென்ன என்று தானாக உணர்ந்தும் நிறைவு செய்ய வேண்டும். தேவைகளை நிறைவு செய்வதோடன்றி அன்றாடம் அருகிலிருந்தும் அன்பு செய்ய வேண்டும். அவ்வாறு செய்யானாயின் அவளது அன்பையும் இல்லறப்பயனையும் இழந்தவனாவான். இவ்வாறு ஒருவன் தன் மனைவியைப் பேணிக் காப்பது போல உழவன் தனது வயல்களையும் பயிர்களையும் பேணிக் காக்க வேண்டும் என்பது வள்ளுவரின் அறிவுரையாகும்.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். (1039)

மேலும் வயல்களை வேலியிட்டும் பாதுகாத்து வந்துள்ளனர் என்பதையும் குறள் நமக்கு அறிவிக்கின்றது. வேலியிட்டுப் பயிர்களைப் பாதுகாப்பது போலப் பெரியோர்கள் நாணம் என்னும் பண்பை வேலியாகக் கொண்டு தங்களிடம் பழி பாவங்கள் புகாவண்ணம் பாதுகாத்தனர் என்பதால் வேலிகள் இருந்தன என்பதை அறிய முடிகின்றது. இவ்வாறு பயிர்களைப் பலவகையாலும் காத்துப் பயனடைந்து வாழ்ந்தவர் தமிழர் என்பதை வள்ளுவம் கூறுகின்றது.

**உழுபவர்க்கே நிலம் சொந்தம்**

உழுபவர்க்கே நிலம் சொந்தம் என்ற கொள்கையைத் திருக்குறள் குறிப்பாக உணர்த்தியுள்ளது என்பதை நுணுகி ஆராயின் அறியலாம். முற்கூறிய குறளில் உள்ள 'கிழவன்' என்னும் சொல்லுக்கு உரிமை உடையவன் என்பது பொருள். நிலத்துக்கு உரிமை உடையவன் நிலக்கிழவன் ஆவான் (நிலக்கிழவன் எனும் சொல் இன்று நிலக்கிழான் எனத் திரிந்து வழங்குவது இலக்கண வழக்கு). அவனே

நிலத்தை உழுது பயிரிட்டு வாழ்ந்தான். அவ்வாறு யார் யார் பயிர் செய்து வாழ்ந்தார்களோ அவர்கட்கெல்லாம் அந்நிலம் உரிமை உடையதாக இருந்தது. உழுது பயிரிடாதவர்களுக்கு நிலம் சொந்தமில்லை. இக்கருத்தை நுண்மையான ஓர் உவமையின் மூலம் உணரவைக்கின்றார் வள்ளுவர். இல்லாளை நிலத்துக்கு உவமை கூறுகின்றார். இல்லாளைப் போன்றது நிலம். கணவனுக்கு உரியவள் மனைவி. அதுபோல் உழுபவனுக்கே உரிமை உடையது நிலம். கணவனுக்கும் மனைவிக்கும் உள்ள தொடர்பையும் உரிமையையும் போல உழுபவனுக்கும் நிலத்திற்கும் தொடர்பும் உரிமையும் உண்டு என்பதை மிக நுண்மையாக உணர்த்தியுள்ளது போற்றுதற்குரியதாகும்.

மேலும் மனைவியோடு கணவனே வாழவேண்டும்; வாழ முடியும். அதுவே முறை. அதுபோல நிலத்தை உழுபவனே அதற்கு உரியவன். அதுவே முறையானது. ஒருவன் மனைவியை வேறு ஒருவன் உரிமை கொண்டாடுவது முறையற்றது போல, உழுபவனுக்குரிய நிலத்தை வேறு ஒருவன் தனக்குச் சொந்தமானது என்று உரிமைகொண்டாடுவது முறையற்றது. ஆதலின் உழுபவனுக்கு உரிமை உடையது நிலம் என்பது வள்ளுவர் குறிப்பு.

**நில உச்சவரம்பு**

நில உச்சவரம்பினைப் பற்றிய கருத்தும் திருக்குறளில் கூறப்பட்டுள்ளது என்பதை அறியலாம். திருக்குறளுக்கு முன்பு தோன்றிய நூல்களில் ஒருவன்-ஒருத்தி என்ற கொள்கை பெரும்பாலும் இடம்பெறவில்லை. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களில் பரத்தையர் பிரிவு என்ற முறையும் இருந்துவந்தது. இக்கொள்கையை மறுத்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற கொள்கையை நிலை நாட்டியவர் வள்ளுவரே. ஒருவன் வாழ்வுக்கு ஒருத்தி என்ற வரையறை கொண்டது போல உழுபவனுக்கும் ஓரளவு நிலமே உரிமை உடையதாக இருக்கவேண்டும் என்று கொள்ளவேண்டும். ஒருத்திக்கு மேல் ஒருவன் விரும்பக்கூடாதது போல ஓரளவுக்கு மேல் ஒருவன் நிலத்தை விரும்புதலும் வைத்திருத்தலும் கூடாது என்பதை உணர்த்தவே இவ் வாழ்வியல் உவமையை 'உழவு' என்ற அதிகாரத்தில் பெய்துள்ளார் என்று கருத இடமுண்டாகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற எண்ணிக்கை இருந்தது போல நிலத்திற்கும் ஓர் அளவு இருந்திருக்கக் கூடும். ஆயினும் அந்த அளவு இன்று புலப்படவில்லை என்றாலும் ஒருவன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அளவே, அவ்வளவாக இருந்திருக்கக்கூடும் என்று கருதலாம். இதனைச்

செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும். (1039)

என்ற குறளால் அறியலாம். இவ்வாறு 'ஒருவன் வாழ்விற்கு ஏற்ற அளவு உரிமை உடைய நிலம்' என்ற பொதுநிலைக் கொள்கையை 2000 ஆண்டுகட்கு முன்பே வள்ளுவர் கூறியுள்ளார். அக்கருத்து இன்று உழு பவனுக்கே நிலம் சொந்தம், நிலஉச்சவரம்பு என்றெல்லாம் புதுமைக் கண்டு பிடிப்புகளாகத் தோற்றமளிக்கின்றது.

இவ்வாறு உழுதல், எருவிடுதல், நீர் பாய்ச்சுதல், களை கட்டுதல், காத்தல் ஆகிய இவ்வைந்து முறைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்துப் பயிர் செய்தால் எண்ணிய விளைவை எண்ணியாங்கு எய்தலாம் என்பதை,

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு. (1038)

என வகைப்படுத்திக் கூறிய வள்ளுவரின் திறன் உழவியல் அறிஞர் களாலும் போற்றுவதற்குரியதொன்றாகும். மேற்கூறிய கருத்துக்கள் வள்ளுவர் காலத்தில் தமிழர்கள் உழவு முறையில் பெற்றிருந்த தெளிந்த அறிவினை நமக்கு நன்கு அறிவிப்பனவாக உள்ளன.

# 6. பயிரியல்

வள்ளுவர் உழவியல் முறைகளை ஆய்ந்து கூறியது போலச் சில பயிர் வகைகள் பற்றியும், அவைகளைப் பயிரிட வேண்டிய காலம், அவற்றிற்குத் தேவையான வித்துக்கள் ஆகியவை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். நன்செய் பயிர்கள், புன்செய்ப் பயிர்கள் என்ற பாகுபாடும் அவரது கருத்துக்களிலிருந்து பெறப்படுகின்றது. நல்ல விளையுளைப் பெற மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்பதைப் பல இடங்களில் சுட்டிக்காட்டி உள்ளார். அத்துடன் அறுவடை, அறுவடைக்குப்பின் வைக்கோல் போன்ற தீவனப் பொருள்களைப் போரிட்டுக் காப்பது முதலிய குறிப்புகளும் காணப்படுகின்றன. இவற்றை நோக்கும் பொழுது வள்ளுவர் காலத் தமிழ் மக்கள் பயிர் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்துள்ளார்கள் என்பது தெளிவாகின்றது.

### பருவம்

வாணிகம் போன்ற தொழில் செய்வோர் தட்ப வெப்பம் ஆகிய பருவம் பார்க்க வேண்டுவதில்லை. ஆண்டு முழுமையும் அத்தொழிலைச் செய்து கொண்டே இருக்கலாம். அதுபோலப் பிற தொழில் செய்வாரும் பருவம் கருத வேண்டுவதில்லை. ஆனால் பயிர்த் தொழில் செய்வோர் பருவம் அறிந்தே செய்ய வேண்டும். அதனால் தான் "பருவத்தே பயிர்செய்" என்ற பழமொழியும் தோன்றலாயிற்று. இதனைப் "பருவத்தோடு ஒட்ட ஒழுகல்" என்று வள்ளுவர் கூறுகின்றார். பருவம் என்ற சொல்லே வேளாண்மையோடு தொடர்புடைய சொல்லாகும். பருவ மழை, பருவ காலம், பருவப் பயிர் என்பன உழவின்

பல்வேறு காலங்களைக் குறிப்பனவாக உள்ளன. மேலும் பருவத்தோடு ஒட்ட ஒழுக வேண்டும் என்று வள்ளுவர் கூறுவதால், பருவமல்லாக் காலத்தில் பயிர் செய்வதைக் காட்டிலும் பருவத்தில் செய்வதால் நிறைந்த பயனைப் பெறலாம் என்பதே அவரது உட்கருத்தாக மிளிர்கின்றது.

**விதை**

பருவம் பார்த்துப் பயிர் செய்வதைப் போல நல்ல விதைகளைத் தேர்ந்தும் பயிர் செய்ய வேண்டும். நிலவளமும் நீர்வளமும் நிறைந்து இருப்பினும் ''வித்துக்கள்'' நல்லதாக இல்லை எனில் முளைப்பதே அரிதாகி விடும். ஒழுக்கத்தை விதையாக உருவகம் செய்கின்றார் வள்ளுவர். நல்ல ஒழுக்கம் என்னும் விதையினை விதைத்தால் அது முளைத்து வளர்ந்து நன்மைகளாகிய கதிர்களை ஈனும் என்ற பொருளில் ''நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்'' என்று கூறுகின்றார். மேலும் 'வைப்பிற்கோர் வித்து'' என்றும், ''ஈனும் வித்து'' என்றும் விதையை உவமையாகவும் உருவகமாகவும் கையாண்டுள்ளார். இவ்வாறு விதைகளின் இன்றியமையாமை திருக்குறளில் பேசப்படுகின்றது.

**நெல்**

''நிலத்துக்கு அணி என்ப நெல்லும் கரும்பும்'' என்பது நாலடியார் வாக்கு. நூற்றுக் கணக்கான நெல்லின் பெயர்கள் இலக்கியங்களில் கூறப்படுவதிலிருந்து அக்காலத்தில் நெல் விளைவிப்பதிலும், அதன் வகைகளைத் தேர்வதிலும் மக்கள் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பதை அறியலாம். வள்ளுவர் நெற்பயிரினைப் பற்றிய குறிப்பினைத் தருகின்றார். நெற்கதிர்கள் ''அலகு'' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. நெற்பயிர்களை நடும்பொழுது நெருக்கமாக நடாமல் இடைவெளி விட்டு நட வேண்டும். காற்று ஊடே செல்லுமாறு தூறுக்குத் தூறு இடைவெளி இருக்குமானால் பயிர் நன்றாகத் தழைத்துச் செழித்து வளரும். முறைப்படி பயிர் செய்து ''தள்ளா விளையுளைப்'' பெறுவதே சிறந்தது என்பதை வள்ளுவர் பல இடங்களிலும் வற்புறுத்தியுள்ளார். ஓர் யானை படுத்துறங்கும் பரப்பளவுள்ள நிலம், ஏழு யானைகளுக்குப் போதுமான விளைவினைத் தரும் அளவிற்கு, உயர் விளைச்சல் தரும் நெல் வகைகளையும், உயர்ந்த அளவு விளைவைப் பெறப் பண்பட்ட பயிர் விளைவிக்கும் முறையினையும் மேற்கொண்டு பயிர் செய்தார்கள் என்பதையும் அறிகின்றோம். கதிர் முற்றி நெல் மணிகள் விளைந்தவுடன் அறுவடை நடைபெறும். நெல் அடித்துத் தூற்றும்பொழுது மணி (அரிசி) இல்லாத

நெல் காற்றில் ஒதுங்கிவிடும். அதனைப் 'பதர்' என்று குறிப்பிடுகின்றார் வள்ளுவர். வீணைப் பேசிப் பேசியே காலங் கழிக்கின்றவர்களை இப்பதர்களுக்கு ஒப்பானவர்கள் என்று இகழ்ந்துரைக்கின்றார்.

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கள் பதடி எனல். (196)

நெல்மணிகளையும் பதர்களையும் பிரித்து எடுப்பதை நெல் தூற்றுதல் என்பர். இவ்வாறு பிரித்து எடுத்து மூட்டைகளாகக் கட்டி எடுத்துச் சென்று உலர்த்திப் பக்குவப்படுத்தி ஓராண்டுவரை வைத்திருந்து பின்னரே அதனைப் பயன்படுத்துவர். ஓராண்டிற்குப் பின் அவற்றைப் பயன் படுத்தின் உணவு சுவையுடையதாகவும், சமைக்கும்பொழுது குறைந்த அளவு அரிசி நிறைந்த அளவு சோருகவும் மலரும் என்பது தமிழ்மக்கள் அறிந்திருந்த உண்மையாகும். அவ்வாறு ஓராண்டு கழிந்த நெல்லினைப் "பழநெல்" என்றும் "யாண்டு கழி நெல்" என்றும் பெயரிட்டு அழைத் தனர். அப்பழம்நெல்லே உயர்ந்த நெல்லாகக் கருதப்பட்டது. அறுத் ததும் உலையில் இடும் வழக்கம் அன்று இருந்ததில்லை. நெல்லின் தாள் கள் வைக்கோல் எனப்படும். வள்ளுவர் அதனை "வை" எனக் குறிப்பிட்டு உள்ளார். அத்தாள்களை எல்லாம் கால் நடைகளுக்குத் தீவனமாகும் பொருட்டு ஒன்று சேர்ந்து வைப்பர். அதனைப் "போர்" என்பர். அதனை வள்ளுவர் "தூறு" என்று குறிப்பிடுகின்றார். நெற்கதிர்களையும் அதன் பதர்களையும் வைக்கோலையும் அதன் தூறையும் குறிப்பிடும் முகத்தான் நெற்பயிரிடும் பாங்கினை விளக்குகின்றார்.

**கரும்பு**

கழனிக்கு அழகு தரும் பயிர்களில் கரும்பும் ஒன்ருகும். வள்ளுவர் கரும்பினைப் பற்றியும் திருக்குறளில் குறிப்பிட்டுள்ளார். நெல்லைப் போன்று கரும்பும் நன்செய்ப் பயிராகும். கரும்பினின்றும் சாறு பிழிவது போல் கயவர்களைக் கசக்கிப் பிழிந்தால்தான் சமுதாயத்திற்குப் பயன் படுவர் என்று உவமை வாயிலாகக் கரும்பு பயிரிடுவதைச் சுட்டுகின்ருர்.

சொல்லப் பயன்படுவர் சான்ரேர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்.  (1078)

ஒரு பொருளை எடுத்துக் காட்டாகக் கூற வேண்டுமென்றாலும் அல்லது ஒரு தொழிலை எடுத்துக் காட்டாகக் கூறவேண்டுமென்றாலும், அது பன்னெடுங்காலமாக மக்களிடையே பழக்கப்பட்டிருத்தல் வேண்டும். கரும்பினின்றும் சாறுபிழியும் தொழில் எடுத்துக் காட்டாகக் கூறப் படுவதைக் கொண்டு அத்தொழில் மக்களிடையே மிகவும் பழக்கப்பட்ட ஒரு தொழிலாகும் என்பதை நன்கு உணர்ந்து கொள்ளலாம். தின்பதற்கு என்றும் சாறுபிழிவதற்கு என்றும் கரும்பில் இருவகைகள் இருந்தன என்பதை உரைக் குறிப்புகள் கூறுகின்றன. கரும்பினைச் சாறுபிழியும் அளவிற்குப் பயிரிட்டார்கள் எனின், பெரும்அளவில் ஏராளமாகப் பயிரிட்டிருக்கவேண்டும் என்பதும் புலனாகிறது. சாறுபிழிந்தவர்கள் அதனைப் பக்குவமாகக் காய்ச்சிக் கட்டி (வெல்லம்) செய்திருக்கவும் வேண்டும். ஏன் எனில் திருக்குறளோடு ஒத்த காலத்தில் முன்னும் பின்னுமாகத் தோன்றிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்கள், எந்திரம் வைத்துக் கரும்பில் சாறுபிழியும் ஓசை ஊரெங்கும் ஒலித்ததையும், கட்டி செய்ததையும், கட்டி செய்யும் பொழுது தோன்றிய புகை ஊரைச் சூழ்ந்து கொண்டது என்பதையும் எடுத்துரைக்கின்றன. ஆதலின், கரும்புப் பயிரிடுவதிலும் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்பதை நன்கு அறியலாம்.

**தினை**

நன்செய்ப் பயிர்களாகிய நெல்லும் கரும்பும் அன்றிப் புன்செய்ப் பயிர்களாகிய தினைப்பயிர்கள் பற்றியும் எண்ணெய்வித்துக்கள் வகையைச் சார்ந்த எள் பற்றியும் வள்ளுவர் கூறியுள்ளார். தினையைக் கூறும்போதெல்லாம் சிறிய அளவுடைமையைக் குறிக்கும் பொருட்டே கூறியுள்ளார். எனினும், மக்கள் வாழ்வில் தினை இன்றியமையாத ஓர் இடத்தைப் பெற்றிருந்தது என்பதை, “கூழ்”, “காடி” முதலிய சொற்கள் உணர்த்துகின்றன. ஏனெனில், “உண்டி”, “விருந்து”, “உண்பது” முதலிய பெருநிலை உணவு வகைகளைக் கூறியுள்ள அவரே மிக எளிய உணவு வகைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

*தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது*
*உண்ணலின் ஊங்குஇனிய தில்.* (*1065*)

தன் முயற்சியால் கிடைத்தது தெளிந்த நீரோடு கூடிய புற்கைகள் ஆயினும் அதனை உண்பதைக் காட்டிலும் இனிமை உடையது வேறொன்றும் இல்லை என்பதே அதன் கருத்தாகும். புற்கை என்பதுபுல்லரிசிக் கூழைக்

குறிப்பதாகும். தினையரிசியைக் கூழாக்கி உண்டார்கள் என்பதை வள்ளுவர் குறிப்பால் உணர்த்துவதை அறியலாம். இத்தகைய தினை அன்று அள விறந்து விளைந்தது என்பதை அவரது தினை பற்றிய கூடுதலான எடுத்துக்காட்டுக்களே விளக்குகின்றன. தினை, வரகு, சாமை முதலியன ஒரு குடும்பத்தைச் சேர்ந்த புன்செய்ப் பயிர்களாகும். இதனைச் சிறுதானியப் பயிர்கள் என்று பயிர் நூலார் கூறுவர். உழுது விதைப்பது உழவர்களின் கடமை. உழுவதையும் பலகால், பலசால் மண் மயங்குமாறு உழவேண்டும். பின்னர் வானத்து மழையைக் கொண்டே விளைந்து விடும். ஒரு வகை மானாவாரிப் பயிராகும். இதனை,

'வானோக்கி வாழும் உலகெல்லாம்' (542)

என வானத்து மழையால் விளைவதை வள்ளுவர் கூறுகின்றார். ஆதலின் நன்செய்ப் பயிர்களோடு புன்செய்ப் பயிர்களும் விளைவிக்கப் பட்டதை அறியலாம்.

**எள்**

பயிர் வகைகளே அன்றி எண்ணெய் வித்துக்களையும் கூறுகின்றார் வள்ளுவர். எள் எண்ணெய் வித்துக்களில் ஒன்றாகும். எள்ளும் தினைபோலச் சிறிய அளவிற்கு எடுத்துக்காட்டாகக் கூறப்பட்டுள்ளது. இச்சிறிய பருமன் உடைய எள்ளை இரண்டாகப் பிளந்தால் மேலும் சிறியதாகத் தோன்றும். இவ்வாறு பிளந்த எள்ளின் ஒரு பகுதியளவு உட்பகை தோன்றினாலும் அக்குடி கெட்டு அழிந்துவிடும் என்று எள்ளை எடுத்துக் காட்டாக்குகின்றார் வள்ளுவர்.

எள்பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாம் கேடு. (889)

'எள்பகவு அன்ன' என்ற தொடரால் எள் இரு பருப்புகளை உடைய விதை என்பதையும், எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தமையும் குறிக்கப் படுகின்றது. எள்ளைச் செக்கிலிட்டு ஆட்டும் பொழுது முற்றிக் காய்ந்த எள் பிளந்து நசுங்கி எண்ணெயைச் சொட்டும். எள்ளைச் சிற்றுண்டி போல உணவுப் பொருளாகவும் பயன்படுத்துவர். அவ்வாறு பயன் படுத்தும் பொழுது அதன் மேல் தோலைக் களைந்துவிடுவார்கள். மேல் தோலைக் களைந்த எள் உண்பதற்குச் சுவையாக இருக்கும்.

பயிர் நூலார் எள்ளை எண்ணெய் வித்துக்கள் என்ற வகையுள் அடக்குவர். எள் செடி கிளைத்து வளரும் சிறப்புடையது. எள்ளின்

காய் நீலமணி போன்று கருநிறமுடையது. எள்ளில் தோன்றும் நோய்க்கு 'அரக்கு' என்று பெயர். இவ்வரக்குத் தோன்றிய எள்ளின் எண்ணெய் கசப்புடையதாக இருக்கும். பருவமழை அளவாகப் பெய்யுமாயின் இந்நோய் உண்டாகாது; சிறப்பாக விளையும். "பருவமழை அளவுக்கு விஞ்சிப் பெய்யுமாயின் எள்ளின் பதம் கெட்டு உள்ளிருக்கும் எள் உருகிவிடும். அதனைச் சிதட்டுக்காய் அல்லது பொய்க்காய் (பொக்கு, உள்ளீடு இல்லாதது) என்று கூறுவர். இக்கருத்துக்கள் அக்காலத்து மக்கள் எள் பயிரிடுவதில் பெற்றிருந்த அனுபவத்தைச் சுட்டுவதாக உள்ளது.

## மாற்றுப் பயிர் விளைத்தல்

ஒருவகைப் பயிரைப் பயிரிட்ட பின் தொடர்ந்து அதையே பயிரிடும் பழக்கம் பண்டைய உழவர்கள்பால் இருந்ததில்லை. அவ்வாறு பயிரிட்டால் முன்னைய பயிர் அதற்குத் தேவையான சத்துக்களை மண்ணிலிருந்து எடுத்துக்கொள்கின்றது. அதே வகைப் பயிரை மீண்டும் பயிர் செய்தால் அவற்றிற்குப் போதுமான சத்துக்கள் கிடைப்பதில்லை. மேலும் அவ்வகைப் பயிருக்குத் தேவையில்லாத சத்துக்கள் நிலத்தில் தேங்கி விடுகின்றன. இம்மண்ணியல் தன்மையை அறிந்து, பயிர்களை மாற்றி மாற்றிப் பயிரிட்டார்கள் என்பதை அறிகின்றோம். திருக்குறள் இக்கருத்தினை வெளிப்படையாகக் கூறாவிடினும் நெல்லும் கரும்பும் எள்ளும் தினையும் கூறப்பட்டிருப்பது கொண்டு மாற்றுப்பயிர் முறையினையும் பலவகைப் பயிர்களையும் பண்ணையில் விளைத்ததை அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு நெல்லும் கரும்பும் ஆகிய நன்செய்ப் பயிர்களும், தினையும் எள்ளுமாகிய புன்செய்ப் பயிர்களும் பயிர்செய்யப்பட்டன என்பதை வள்ளுவம் தெரிவிக்கின்றது.. இந்நான்கை மட்டும் குறிப்பிட்டதால் இவைகளை மட்டுமே மக்கள் பயிர் செய்து வாழ்ந்தார்கள் என்று கொள்ளலாகாது. நன்செய்யிலும், புன்செய்யிலும் செய்யக்கூடிய பயிர்கள் அனைத்தும் செய்தார்கள் என்பதும் அவைகளை மாற்றுப்பயிர்களாகவும் கலவைப் பயிர்களாகவும் பயிர் செய்தனர் என்பதும் அக்குறிப்பின் பொருளாகும். இத்தகைய பயிர்களைப் பயிர்செய்ததோடு மட்டுமின்றி அவைகளுக்கு இயற்கையாலும் பழுது நேராவண்ணம் பாதுகாப்பதில் எச்சரிக்கையாகவும் இருந்தனர் என்பதையும் அறிகின்றோம். இவ்வகையில் வள்ளுவர் ஒரு பயிரியல் அறிஞர் ஆகிறார்.

# 7. மரம் செடி கொடிகள்

திருவள்ளுவர் ஓர் இயற்கைக் கவிஞர். இயற்கையின் நுட்பங்களை ஆய்ந்தாய்ந்து கூறுவதில் வல்லவர். இயற்கையோடு இயைந்த வாழ்வினை விரும்புகின்றவர். வாழ்வோடு தொடர்புடைய மரம் செடி, கொடிகள், மலர்கள், காய் கனிகள் ஆகியவற்றைத் தமது நூலில் ஆங்காங்கே தொட்டுக் காட்டிச் செல்கின்றார். இவ்வியற்கைப் பொருள்களை அளவுகோலாகக் கொண்டு மக்கள் வாழ்வினை அளந்து காணுகின்றார். மக்கள் வாழ்வியலை ஆராய்வது போலவே இயற்கைப் பொருள்களின் தோற்றம், வளர்ச்சி, பயன் ஆகிய பல்வேறு நிலைகளை ஆராய்ந்து கூறியுள்ள திறம் போற்றி மகிழ்தற்குரிய தொன்றாகும்.

**பயன்மரம்**

மரங்களை இரண்டு வகையாகப் பிரிக்கின்றார் வள்ளுவர். பயன் மரம், பயன்படா மரம் அல்லது நச்சு மரம் என்பன அவ்விரு வகைகள். பயன் மரம் என்று பொதுப்படக் கூறினாரே அன்றி இன்னின்ன மரங்கள் பயன் தருவன என்று அறுதியிட்டு உரைத்தாரில்லை. மக்களுக்கு ஏதேனும் ஒரு வகையில் பயனுடையதாக இருக்கின்ற மரங்கள் அனைத்தும் பயன் மரங்களே ஆகும். என்றாலும் மக்கள் உண்ணுகின்ற காய்களையும், கனிகளையும் தருகின்ற மா, பலா, வாழை, தென்னை, பனை முதலிய மரங்களே பயன் மரங்கள் என்று போற்றப் பட்டன. காய்கனிகளைத் தரும் "பயன் மரங்களை" ஊரின் பொது இடங்களில் வளர்ப்பது நன்மை தருவதாகும். அவ்வாறு செய்வது, உதவி செய்யும் நன்மனம் உடையவனிடத்தில் இருக்கும் செல்வத்தைப் போல எல்லாருக்கும் பயன்படும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். (216)

மக்கள் அனைவர்க்கும் காய்களும் கனிகளும் எளிமையாகக் கிடைக்க வேண்டும் என்பதே அவரது நோக்கமாகும். மேலும் "பயன் மரம்" என்று குறிப்பிடுவதால் அம்மரங்கள் பல்லாண்டுகள் வரைப் பயனைத் தந்து கொண்டே இருக்க வேண்டும் என்பதும், அவ்வாறு பயன் தர, உரிய காலத்தில் நீரும் எருவும் இட்டு வளர்க்க வேண்டும் என்பதும் அவரது குறிப்பால் புலப்படுவதொன்றாகும்.

**மருந்து மரம்**

பயன் மரங்கள் மக்கட்குப் பழங்களை நல்கி உடலை வளர்ப்பன. மருந்து மரங்கள் மக்கள் உடலில் தோன்றும் பிணியைத் தீர்ப்பன. மரத்தின் தளிர், இலை, பூ, காய், கனி, கொட்டை, பட்டை, வேர், மரம் ஆகிய அனைத்தும் மருந்தாகப் பயன்படும் 'வேம்பு' போன்ற மரங்கள் உண்டு. மக்கள் அம்மரங்களின் பட்டைகளையும் வேர்களையும் வெட்டிச் செல்வதாலும் இலைகளையும் தளிர்களையும் எடுத்துச் செல்வதாலும் அவைகள் பார்ப்பதற்கு வடுப்பட்ட மனிதனைப் போல் தோன்றும் என்பதையும் அறிகின்றோம். (பல வகையான மரங்களையும் ஆராய்ந்து அவைகளுள் இவை இவை பிணி தீர்க்கும் மரங்கள் என்று கண்டுள்ளார்கள் எனின் அவர்களின் மர இயல் அறிவு பாராட்டுதற்குரிய தொன்றாகும்) இத்தகைய பிணி தீர்க்கும் நன் மரங்கள் மலையின் உச்சியில் இருந்து பயன் இல்லை; அடர்ந்த காடுகளின் நடுவில் இருந்தும் பயன் இல்லை. அவைகள் பெருந்தகைமை உடையவனிடத்தில் உள்ள செல்வம் போலப் பலர்க்கும் பயன்பட வேண்டும். ஆதலின் அத்தகைய மருந்து மரங்களை மக்கட்குப் பெரிதும் பயன்படும் வகையில் ஊரின் நடுவே வளர்க்க வேண்டும் என்று கூறுகின்றார்.

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின். (217)

**பனை மரம்**

திருவள்ளுவர் மரங்களைப் பற்றிப் பொதுப்படக் கூறினரேனும் பனை மரத்தைப் பற்றி மட்டும் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். பனை மரம் மிக நீண்டு உயர்ந்து வளர்வது. பிறர் செய்த உதவி மிகச் சிறியதாக இருந்தாலும் அதனைப் பனை மரத்தின் உயர்ச்சி போல் மிகப் பெரிய அளவாகக் கொள்ள வேண்டும் என்பதனை விளக்க, இப்பனை

மரத்தினை எடுத்துக்காட்டாக்குகிறார் வள்ளுவர். தாங்கள் விரும்பிய காதலியரை அடையமுடியாத காதல் இளைஞர்கள் பனை மடலில் குதிரை போன்ற உருவம் செய்து அதன் கருக்குகள் உடலையறுக்கக் குருதி சொட்டச் சொட்ட அதன் மீது தெருவழியாக ஊர்ந்து சென்று தம் காதலை ஊரார்க்கு அறிவிப்பது பண்டைய வழக்கமாக இருந்தது. ஆதலின் காதலை முற்றுவிக்கும் கருவியாகவும் பனைமடல் பயன்பட்டுள்ளது.

பனை மரத்தைப் பயிர் செய்வதற்கு அரிய முயற்சிகள் தேவையில்லை. மழை பெய்த ஈரமான நாட்களில் அதன் கொட்டையை முளைக்கப் போடுதல் போதுமானது. அதன் பிறகு அதனை வளர்ப்பதற்கு எவ்விதமான முயற்சியும் தேவைப்படுவதில்லை. அது வளர்ந்த பிறகு கூரைவேய ஓலை, இனிய மென் பதமான நுங்கு, பின்னர் பழம், சுவை மிக்க கிழங்கு, இனிய தெளிவு (வேள்நீர்), அத்தெளிவிலிருந்து மிக எளிமையாகச் செய்யக் கூடிய பனை வெல்லம் - இத்தனையும் தருகின்றது. அதுவும் பல்லாண்டுகள் தொடர்ந்தாற் போல் தருகின்றது. மரம் மிகவும் முற்றிய பிறகு ''வீடுகட்ட விட்டமாகப் பயன்படுத்துங்கள்'' என்று தன்னையே தியாகம் செய்து விடுகின்றது. இதற்கு நாம் உழைக்கும் உழைப்பு ஒரு மாதமல்ல, ஒரு வாரமல்ல, ஒருநாள் அல்ல, ஒரு மணி நேரங்கூட அல்ல, சில மணித் துளிகள் போதுமானது. இவ்வாறு பனைமரம் ஒருவர் செய்த சிறு உதவிக்கு வாழ் நாள் முழுவதும் பன்மடங்கு பயன் தருவது போலப் பிறர் செய்த உதவி சிறியதாயினும் அதைப் பன்மடங்காகக் கருதி நன்றி மறவாதிருத்தல் வேண்டும் என்ற இக்கருத்தினை,

> தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
> கொள்வர் பயன்தெரி வார். (104)

என்னும் குறளிலுள்ள ''பனைத்துணையா'' அஃதாவது பனை அளவாக என்ற இரு சொற்களால் உணர்த்தி உள்ளார் என்பது ஈண்டு கருதத்தக்க தொன்றாகும். ஆதலினாலேயே உரையாசிரியர்கள் பனைமரத்தைப் பயன் மரத்திற்கு எடுத்துக் காட்டாகக் கூறியுள்ளனர்.

(பனை மரத்தைப் போன்று உயர்ந்து வளர்வது தென்னைமரம். ஆனால் தென்னையைப் பற்றித் திருக்குறளில் ஒன்றும் கூறப்படவில்லை. அதற்கு அடிப்படையான காரணங்கள் உண்டு என்று எண்ணத் தோன்றுகிறது. தென்னையை வளர்ப்பது, பனையை வளர்ப்பது போன்ற

எளிமையான செயல் அல்ல. பனை புன்செய்ப் பயிர். தென்னை நன்செய்ப் பயிர். ஆதலால், சிறிது பெற்றுப் பெரிதளவு பயன்தரும் பனையைப் போன்றது அல்ல தென்னை என்பதால், இது நன்றிக்கு எடுத்துக் காட்டாகாது என விடுத்திருக்கலாம்.) எனினும், கள்ளைப் பற்றிக் கூறி இருப்பதால் அக்காலத்திலேயே தென்னையைப் பயிரிடும் பழக்கமும் இருந்தது என்பதை அறிய முடிகின்றது. இத்தென்னையும் பனையும் உள்ளீடு இல்லாத ஓர் அறிவுடைய புல் வகையைச் சார்ந்த "புறக்காழ்" மரங்கள் என்று தொல்காப்பியர் கூறுவர். மர இயல் பாகுபாட்டிற்கும் இஃது ஒத்ததாக உள்ளது.

**நச்சு மரம்**

மேற்கூறிய பயன்தரும் மரங்களே அன்றிப் பயன்படாத தீமையை விளைவிக்கின்ற நச்சுமரங்களும் உண்டு. சில மரங்களில் உள்ள பயன்களாகிய வேதியல் குணங்களை ஆய்ந்து அறிந்து பிணி தீர்க்கப் பயன் படுத்தியது போல (அத்தி மரத்தின்பால் புண்ணுக்கு மருந்தாகும் என்று புறநானூறு கூறுகின்றது) சில மரங்களில் உள்ள நச்சுத் தன்மையை அறிந்து அதனை ஒதுக்கியும் உள்ளனர். பயன் மரங்களை ஊர் நடுவில் வளர்க்க வேண்டுமே ஒழிய நச்சு மரங்களை அவ்வாறு வளர்ப்பதில்லை; வளர்க்கவும்கூடாது. அவை தீயவர்களிடம் உள்ள செல்வம் போல் யாருக்கும் பயன்படாததோடு தீமையையும் விளைவிக்கும். நச்சு மரங்களை வளர்க்காவிடினும் அவை தாமாகவே வளரும் தன்மை உடையன. ஏனெனில் அதனை எதுவும் தின்னாது தீண்டாது, ஆதலின் அதற்கு அழிவு இல்லை. அறியாதார் அதன்கண் பழுத்துள்ள பழங்களை உண்டு விடுவார்களாயின் உயிர்க்கு இறுதி ஏற்பட்டு விடும். ஆதலின் அத்தகைய நச்சுத் தன்மை உடைய "எட்டி" போன்ற மரங்களை வளர வொட்டாமல் தடுக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

> நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
> நச்சு மரம்பழுத் தற்று. (1008)

இன்று நச்சுமரங்களையும் பயன்படுத்தும் அளவிற்கு வேளாண்மை அறிவு வளர்ந்துள்ளமை போற்றுதற்குரிய தொன்றாகும்.

**வற்றல் மரம்**

சில மரங்களை விதையிட்டு வளர்க்கலாம். ஆனால் (முருங்கை போன்ற சில மரங்களை அவ்வாறு செய்வதைக் காட்டிலும் அவற்றின் கொம்புகளை வெட்டி வைத்து வளர்த்தால்) அவை விரைவாகவும் நிறைவாகவும்

வும் பயனளிக்கும். அவ்வாறு செய்யும் பொழுது வெட்டிய கொம்புகளின் ஈரம் வற்றிப்போகும் முன் நடுதல் வேண்டும். நடுதற்குரிய இடம் வன்மை யானதாகவும் இருத்தல் கூடாது. வேர் எளிதல் பற்றக்கூடிய அளவிற்கு உழுது மென்மை வாய்ந்த வளமிக்க பகுதியில் நடவேண்டும். அப் பொழுதுதான் அது தளிர்க்கும். ஆதலின் கொம்புகள் வெட்டி நடும் முறையையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்பதை அறியலாம்.

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று. (78)

அன்பில்லாமல் வாழ்வது பாலைநிலத்தில் வற்றிப்போன மரம் தளிர்ப் பதைப்போன்றது என்று பொதுவாக உரைவகுப்பர் உரையாசிரியர். வற்றிப்போன மரத்தின் கொம்பைப் பாலையில் நட்டால் அது தளிர்க் காது. ஆதலின் மரம் நடுகின்றவர்கள் மரக் கொம்பு ஈரமாக இருக்கும் பொழுதே நன்னிலத்தில் நடவேண்டும் என்பதே அவர்தம் உரையின் உட்பொருளாகும்.

**மரத்தின் பகுதிகள்**

திருவள்ளுவர் மரங்களின் பலவகையான தன்மைகளையும் ஆராய்ந்து கூறியதுபோல் மரத்தின் உறுப்புகள் பற்றியும் ஆராய்ந்து கூறியுள்ளார். மரத்தின் பெரிய பகுதிகள் கிளைகள் எனப்படும். அதனைக் கோடு என்ற சொல்லால் குறிக்கின்றார் வள்ளுவர். ஒரு கிளையில் உள்ள பலபகுதிகளைக் "கொம்பு" என்ற சொல் உணர்த்தும். கொம்பிலிருந்து செல்லும் சிறுசிறு பகுதிகள் வளார் எனப்படும். பல ஆண்டுகள் வளர்ந்த மரம் நன்கு முற்றி இருக்கும். அதனை வைரம் பாய்ந்த அல்லது சேவு ஏறிய மரம் என்பர். அதனைக் "காழ்" என்ற சொல்லால் உணர்த் துகின்றார் வள்ளுவர். அன்பு, கண்ணோட்டம், ஊக்கம் முதலிய மக்கட் பண்பு இல்லாதாரை மரம் என்று கூறுகிறது திருக்குறள்.

**செடி கொடிகள்**

மரங்களை ஆராய்ந்த வள்ளுவர் செடி கொடிகள், புல், புதர்கள் ஆகியவை பற்றியும் கூறியுள்ளார். செடிகளில் நெருஞ்சிச் செடி என்பதும் ஒன்று. இது நிலத்தில் படர்வது. மழைக்காலத்தில் பச்சைப் பசேல் எனப் படர்ந்து இருக்கும் இதன் தோற்றம், நிலமகள் பச்சைப் பட்டுடை பூண்டு விளங்குவதுபோல் காட்சி அளிக்கும். இதன்காய் நெருஞ்சி முள் எனப்படும். வள்ளுவர் இதனை நெருஞ்சிப்பழம் என்பர். செடிகள் பல நெருக்கமாகப் பின்னிப்பிணைந்து அடர்ந்து இருப்பதற்குப் புதர் என்று பெயர். வேடர்கள் அதன் மறைவில் இருந்து கொண்டு கண்ணி

வைத்துப் பறவைகளைப் பிடிப்பார்கள் இச் செயல் தவவேடத்தைப் பூண்டு துறவிபோல் காட்சியளித்துத் தீச்செயல்களைச் செய்யும் மக்களுக்கு எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது. இப்புதர்கள் பெரும் பான்மையும் முட்செடிகள் நிறைந்து இருக்கும்.

*தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து*
*வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று. (274)*

கொடி வகைகளில் ஒன்றுன குன்றியைத் திருக்குறளில் காணலாம். அக்கொடியிலிருந்து விளையும் மணி கருப்பும் சிவப்பும் கலந்த நிறமுடையது. அதனைக் குன்றிமணி என்பர். மூக்கின் பகுதி கருப்பாகவும் பிற பகுதி சிவப்பாகவும் இருக்கும். இக்குன்றி மணியினை ஆழ்ந்து நோக்கி, உள்ளத்தில் தீய எண்ணம் கொண்டு வெளித் தோற்றத்தில் தூயவர்கள் போலக் காட்டிக் கொள்ளும் மக்களுக்கு உவமையாகக் கூறியுள்ளார்.

*புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி*
*மூக்கிற் கரியார் உடைத்து. (277)*

இம்மணிகள் பொன்னை நிறுக்க அளவுகருவியாகப் பயன்படும் சிறப்பு வாய்ந்தவை. சிறிய அளவிற்குத் தினையையும் எள்ளையும் குறிப்பிட்டது போல இக்குன்றி மணியையும் கூறுவார் வள்ளுவர்.

வள்ளுவர் வள்ளி என்ற ஒரு சொல்லையும் கையாளுகின்றுர். அச்சொல் பொதுவாகக் கொடியைக் குறிப்பதாகும். கொடி எவ்வளவு படர்ந்து இருந்தாலும் அதன் அடிப்பகுதியை அறுத்துவிடின் அது காய்ந்து பயனற்றுப் போய்விடும். ஆதலின் அதன் அடிப்பகுதி அறுபடாமல், பழுது நேராமல் பாதுகாக்கப்படவேண்டும். மேலும் கொடிகள் வாடாமல் இருக்க அதற்கு ஈரப்பசை இருந்தாக வேண்டும். மரங்கள் போல் அல்லாமல் கொடிகளுக்கு அடிக்கடி நீர்பாய்ச்ச வேண்டும் என்பதை "வாடிய வள்ளி" என்ற தொடரால் புலப் படுத்துகின்றுர். இன்று வள்ளிக்கொடி என்பது சர்க்கரை வள்ளிக் கொடியைக் குறிப்பதாகும். திருவள்ளுவர் பசிய புல்லைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். மழை பெய்யின் புற்கள் முளைக்கும். மழைபெய்யா விடின் புற்கள் முளையா. வெளியிடங்களில் தோன்றும் புற்கள் கால்நடைகளின் மேச்சலுக்குப் பயன்படும். பயிர்களிடையே தோன்றும் புற்கள் களைகள் என்று களையப்படும்.

இவ்வாறு வள்ளுவர் மரம் செடி கொடிகள் பற்றியும் அவற்றின் பயன் பயனின்மை பற்றியும் அவற்றின் பகுதிகள் பற்றியும் விளங்கக் கூறியுள்ள திறம் அவரது மரநூல் அறிவைப் புலப்படுத்துவதாக உள்ளது.

# 8. மலர் காய் கனிகள்

மலர் மென்மையானது; மணம் வீசுவது; மனதிற்கு மகிழ்ச்சியைத் தருவது; அழகிலும் ஓர் அமைதியை நல்குவது. இத்தகைய தன்மைகளை உடைய மலர்கள் பற்றிய கருத்துக்கள் திருக்குறளில் காணக் கிடைக்கின்றன. வள்ளுவர் மலர்கள் தோன்றும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு மலர் வகையினை நிலப்பூ, நீர்ப்பூ என்று இரண்டாகப் பகுக்கின்றார். நீர்ப்பூ பலமுறை கூம்பி மலரும் தன்மை உடையது. நிலப்பூ ஒருமுறை மட்டுமே மலரும் தன்மை உடையது; மலர்ந்து பின் வாடி வதங்கிக் கீழே விழுந்து விடும். குவிந்து விரியும் தன்மை நிலப்பூவிற்கு இல்லை. இதே போல் மணத்தின் அடிப்படையிலும் நாறும் மலர், நாறா மலர் என்ற பிரிவினையும் கூறுகின்றார். இதனால் மலர்கள் தோன்றுகின்ற இடம், அவை வீசுகின்ற மணம் ஆகியவை பற்றிய அவரது மலரியல் அறிவை உணரமுடிகின்றது.

**தாமரை**

பூ என்ற சொல் தாமரையைக் குறிக்கும். "பூ எனப்படுவது பொறி வாழ் பூவே" என்பது இலக்கியம். இத்தகைய சிறப்பு வாய்ந்த மலர் தாமரையாகும். இது பல இதழ்களை உடையது. நூறு இதழ்களை உடைய தாமரை மலரும் உண்டு. நீர்ப்பூவாகிய இம்மலர், நிற வேறுபாட்டால் வெண் தாமரை என்றும் செந்தாமரை என்றும் பெயர் பெறும். இத்தாமரையின் தண்டுகள் குளத்தின் நீர்மட்டத்திற்கேற்ப வளர்ந்து கொண்டே போகும். இஃது ஓர் அறிவியல் உண்மையாகும். நீருள் இருக்கும் தண்டிற்கு இலைப்பச்சையும் காற்றும் தேவை ஆதலின் அது விரைவில் வளர்தற்கு இலை நீருக்குமேல் இருக்கும்படி செய்து விடுகின்றது. அன்றியும் நீர்ப்பூக்களின் தண்டுகள் விரைவில் வளர்

வதற்கு ஏற்றதாகத் துளையுள்ள தண்டுகளாக அமைந்துள்ளன. இக் கருத்துக்களை உள்ளத்துள் கொண்ட வள்ளுவர் (தண்டின் வளர்ச்சி நீரின் உயரத்தைப் பொருத்து அமையும் என்று கூறியுள்ளார். இது போல் மனிதனின் முயற்சிக்கு ஏற்ப உயர்வு பெறுவான் எனும் அறிவுரையையும் வழங்கியுள்ளார்.)

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு. (595)

தாமரை மலரில் தேன் நிறைந்திருக்கும். 'தேன் வண்டுகள், மணம்மிக்க இம்மலரின் தேனை எடுத்துச் சென்று மலை உச்சியில் உள்ள சந்தனக் கொம்புகளில் கட்டியுள்ள கூட்டில் சேர்க்கும். உயர்ந்த மலரின் தேன் ஆதலின் அதன் தகுதிக்கு ஏற்றாற்போல் உயர்ந்த தன்மையுடைய மரத்தில் சேர்த்து வைக்கும்' வண்டின் செய்கையை அறிஞர்கள் பாராட்டுவர். மேலும் தாமரை மலரை முகத்துக்கு உவமையாகக் கூறுவர் கவிஞர். தாமரை மலர், முகம் போன்று உருவ அமைப்பிலும் சற்றுப் பெரிதாக இருக்கும். திருவள்ளுவர் தாமரைக் கண்ணனுடைய உலகைக் கூறி, அவ்வுலகில் விரும்பியதை விரும்பியபடி பெற்று வாழும் வாழ்வைக்காட்டிலும். தன்னை விரும்பும் பெண்ணோடு சேர்ந்து வாழும் வாழ்வு மிக்க மகிழ்ச்சி உடையதாக இருக்கும் என்று ஒரு தலைவன் கருதியதாகக் கூறுகின்றார்.

தாம்வீழ்வார் மென்தோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. (1103)

தாமரை மலரில் கலைமகளும் மலைமகளும் அலைமகளும் வாழ்கின்றனர் என்பது தமிழ் மரபு. இதனால் இவர்களை வெண்டாமரையாள் செந்தாமரையாள், பொன் தாமரையாள் எனக் கூறுவதும் உண்டு. தூய உள்ளத்தில் இறைவன் எழுந்து அருளுவான் என்பதும் வள்ளுவர் கருத்து.

**குவளை**

தாமரையைப் போன்று குவளையும் நீர்ப்பூக்களின் வகையைச் சேர்ந்ததாகும். குவளையின் பூக்கள் மேல் நோக்கி மலரும் தன்மை உடையன என்பதை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். தாமரையை முகத்திற்கு உவமையாகக் கூறுவது போலக் குவளையைக் கண்ணிற்கு உவமையாகக் கூறுவர். குவளை கருநீல நிறமுடையது. கண்ணைப் போன்ற

தோற்றம் உடையது. அதனை உற்று நோக்கின் விழித்திருக்கும் கண்ணைப் போன்று இருக்கும். "குவளை கண் விழித்து நோக்க" என்று குவளை மலரைக் கண்ணுகைக் கூறுவர் கவிஞர். நிறத்தாலும் வடிவத்தாலும் ஒத்து இருத்தலின் குவளை கண்ணுக்கு உவமையாயிற்று. குவளை மலரில் செம்மை நிறமுடைய குவளை மலரும் உண்டு. அதனைச் செங்குவளை என்பர். வள்ளுவர் இவ்விரண்டனையும் உள்ளடக்கிப் பொதுப் படையாகக் கூறியுள்ளார். நீர்ப்பூக்களின் விதைகள் நீரில் ஆழ்ந்து மீண்டும் செடியாகி வளரும். மேலும், நீர்ப்பூக்கள் தனித்தனி மலராக மலரும் இயல்புடையன. இதை உணர்ந்த வள்ளுவர், நீர்ப்பூக்களைக் கூறும்போதெல்லாம் மலர் என்றும் பூ என்றும் தெளிவுபடக் கூறியுள்ளார். கொத்துக்கொத்தாகத் தோன்றி மலரும் இயல்பு நீர்ப்பூக்களுக்கு இல்லை. "இதனை நெய்தல், நீலோற்பலம், நீலம், கருநெய்தல், கருங்குவளை, பானல் என்று பல பெயரால் கூறுவர். இவை ஒரே இனத்தைச் சார்ந்தவை. இவற்றில் வெண்மை, சிவப்பு, நீலம், கருநீலம் ஆகிய நிறங்களுடைய பூக்களைத் தோற்றுவிக்கும் செடிகள் உண்டு" என்று செடி நூல் கூறும்.

## அனிச்சப்பூ

அனிச்சப் பூ உலகத்துப் பூக்களில் எல்லாம் மென்மையானது. மோந்து பார்த்த அளவிலேயே அது வாடி உருக்குலைந்து விடும். இதனை "மோப்பக் குழையும் அனிச்சம்" என்று கூறுவார் வள்ளுவர். அது மனிதனின் மூச்சு வெப்பத்தையும் தாங்காத இயல்புடையது. அதன் மென்மைக்கு ஓர் எடுத்துக் காட்டுக்கூற வேண்டுமாயின் அன்னப் பறவையின் இறகுகளின் உட்புறத்திலுள்ள தூவியைக் கூறலாம். "அனிச்சப் பூவைக் காட்டிலும் அவள் பாதங்கள் மென்மையானவை. அனிச்சமும் அவள் பாதத்திற்கு நெருஞ்சி முள்ளாகத் தோன்றும்" என்று காதலன் ஒருவன் தன் காதலியின் மென்மைத் தன்மையைப் புலப்படுத்துவதாக வள்ளுவர் கூறுகின்றார்.

> அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
> அடிக்கு நெருஞ்சிப் பழம். (1120)

அனிச்சப் பூவிற்குக் காம்பு உண்டு. அக்காம்பினைக் களையாமல் சூடிக் கொள்வோரும் களைந்து விட்டு மலர்களை மட்டும் சூடிக் கொள்வோரும் உண்டு. வள்ளுவர் அனிச்சப்பூ பற்றிய இக்கருத்துக்களை நான்கு குறள்களில் கூறுகின்றார்.

### அனிச்சம் ஒரு மரம்

அனிச்சம் என்பது ஒரு மரம். அனிச்சப்பூ, கொம்பிலிருந்து மலர்கின்ற கோட்டுப் பூவாகும். "இது பற்றி மன்னார்குடி இலக்கண ஆசிரியர் சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இது கோட்டுப்பூ வகையைச் சேர்ந்தது. இது குறவம்புலம் புகைவண்டி நிலயத்தின் பக்கத்திலுள்ள ஐயனார் கோவிலில் இருக்கின்றது. இதன் தோற்றம், இலை, கிளை இவற்றால் இது சிறு சண்பகம் போல இருக்கும். மாசி, பங்குனியில் பூ சரம் சரமாகத் தொங்கும். மாலையில் மலரும். விடியலில் பொடியாக உதிர்ந்து விடும். மலர் வெண் கடம்பு போல மணம் உள்ளது. சிவந்த கோடுகள் படர்ந்த வெள்ளைப்பூ. காயின் மேலோடு வலியது" என்ற குறிப்பு மட்டுமே கிடைக்கின்றது. இவ்வரிய இனிய மரத்தை இனங் கண்டு போற்றி வளர்க்க வேண்டியது தமிழர்களின் கடனாகும்.

### மலரின் பல்வேறு நிலைகள்

மலர் வகைகள், தன்மைகள், மேன்மைகள் ஆகியவற்றைப் பற்றிப்பல இடங்களில் கூறிய வள்ளுவர், மலரின் பல்வேறு நிலைகளையும் விளக்கியுள்ள திறன் போற்றி மகிழ்தற்குரியதாகும். அவர் தாமரை, குவளை, அனிச்சம் ஆகிய மூன்று மலர்களை மட்டும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். எனினும் பல இடங்களில் மலர், பூ என்ற பொதுச் சொற்களைக் கையாண்டுள்ளார். அன்றியும் மலரின் பல்வேறு நிலைகளைக் கூறுவதன் வழியாகப் பலவகையான மலர்களையும் குறிப்பால் உணர்த்திவிடுகின்றார். எடுத்துக்காட்டாக 'இணர்' என்னும் சொல்லைக்குறிப்பிடலாம். இணர் என்பது கொத்துக்கொத்தாய் மலரும் கோட்டுப்பூவை உணர்த்தும் சொல்லாகும். வேங்கை, கொன்றை, புன்னை போன்ற மரங்கள் கொத்துக்கொத்தாக மலர் விடும் தன்மை உடையன. 'இணர்' என்ற ஒரு சொல்லால் கொத்தாக மலரும் மலரின் ஓர் இனத்தையே சுட்டுவதாக அமைந்துள்ளது.

பூவின் தோற்றநிலை அரும்பு என்பதாகும். இது பூவின் தொடக்க நிலையை உணர்த்துவது. மொக்கு என்பது பூவின் மொட்டைக் குறிக்கும். இது அரும்பு மொட்டாக வளர்ந்த இரண்டாம் நிலை. முகை என்பது பூவின் மூன்றாம் நிலையைக் குறிக்கும். இது பூ முகிழ்க்கும் நிலையை உணர்த்தும். இம்முகை வெடித்தால்தான் பூவிலிருந்து மணம் வெளிவரும்; வெடிக்காத வரை பூவின் மணம் வெளிவராது. இதனை "முகை மொக்குள் உள்ளது நாற்றம்" என்று வள்ளுவர் கூறுவார்.

அடுத்த நிலை போது என்பதாகும். இது பூ விரியத் தொடங்கும் நிலை. மலர் என்பது ஐந்தாம் நிலை. பூவின் இதழ்கள் அனைத்தும் மலர்ந்து விரிந்து மணம் வீசும் நிலை. இந்நிலையில் விரியாத இதழ்கள் இரா.

காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும்இந் நோய். *(1227)*

என்ற குறள் அந்நிலைகளைத் தொகுத்துக் குறிப்பிடுகின்றது. காதலை மலரோடு ஒப்பிட்டு, மலர் காலையில் அரும்பிப் பகலெல்லாம் பல நிலை களைக் கடந்து போதாகி - மாலையில் மலர்ந்து மணம் வீசுவது போலக் காதல் காலையில் அரும்பி மாலையில் மலரும் என்பது கருத்து. மலருக் குப்பிறகு அலர் என்ற ஒரு நிலை உண்டு. அது பூ தன் மணம் முழுமையும் பரப்பிவிடும் நிலையை உணர்த்துவதாகும். வீ என்ற ஒரு நிலை உண்டு. இந்நிலையில் பூ வாடிவிடும். இறுதியாக செம்மல் என்ற நிலையில் பூவின் வாழ்வே முடிந்து விடுகின்றது. வாடி வதங்கிக் கீழே விழுந்துள்ள பழம் பூவினைச் செம்மல் என்று கூறுவர். இம்மலர்நிலைகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்திக் கூறுவர் அறிஞர் கி. ஆ. பெ. வி. அவர்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| அரும்பு | — | பூ | — | அரும்பும் நிலை |
| மொட்டு | — | பூ | — | மொக்கு விடும் நிலை |
| முகை | — | பூ | — | முகிழ்க்கும் நிலை |
| மலர் | — | பூ | — | மலரும் நிலை |
| அலர் | — | பூ | — | மலர்ந்த நிலை |
| வீ | — | பூ | — | வாடும் நிலை |
| செம்மல் | — | பூ | — | வதங்கும் நிலை |

**மலரின் பகுதிகள்**

மலரின் பல்வேறு நிலைகளை ஆய்ந்ததைப் போலவே வள்ளுவர் மலரின் பகுதிகளையும் ஆய்ந்துள்ளார் என்பதும் அறியக் கிடக்கின்றது. மலரின் காம்பினைக் 'கால்' என்று குறிப்பிடுகின்றார். இதனைச் செடி நூலார் புல்லி வட்டம் என்று கூறுவர். மலர்களை மாலையாகத் தொடுத்துக் கூந்தலில் அணிந்து கொள்ளும் வழக்கம் தொன்று தொட்ட தொன்றாகும். அம்மாலைக்குத் 'தொடலை' என்று பெயர். அவ் வாறு தொடுக்கும் பொழுது பூவின் காம்பினைக் களைந்து விட்டுத் தொடுப்பார்கள். தனிமலரைக் கூந்தலில் அணிந்து கொள்வதும் உண்டு. பூவின் இதழைத் 'தோடு' என்ற சொல் உணர்த்துகின்றது.

இதனைச் செடிநூலார் அல்லி வட்டம் என்று கூறுவர்.) தாமரை போன்ற பெரும் மலர்களை அப்படியே சூடிக் கொள்ளாமல் அதன் இதழ்களைப் பறித்துத் தொடுத்துத் தொடலையாக்கி அணிந்து கொள்வர்.

**மலரும் மணமும்**

மலர்களில் சண்பகம் போன்ற மணமிக்க மலர்களையே மக்கள் விரும்புவர். இவைகளை 'நறுமலர்' என்பார் வள்ளுவர். மணமில்லாத முருக்கமலர் போன்றவைகளை மக்கள் விரும்பிப் போற்றியதில்லை. மணமற்ற மலர்களை மகளிர் சூடுவதும் இல்லை. கொத்துக் கொத்தாக மலர்ந்திருந்தாலும் மணமில்லாத மலர்கள் பயனற்றவையாகும். அது போல எவ்வளவு கற்றிருந்தாலும் கற்றவைகளை எடுத்துச் சொல்லும் ஆற்றல் இல்லாதவர்கள் பயனற்றவராவார்கள் என்று கூறுகிறது திருக்குறள்.

> இணரூழ்த்தும் நாறா மலரனையர் கற்றது
> உணர விரித்துரையா தார். (650)

தமிழ் மக்கள் மலர்கள் மீது எல்லையற்ற விருப்பம் கொண்டிருந்தனர் என்பதற்குத் தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் நூற்றுக்கணக்கான மலர்களின் பெயர்களே சான்றாகும். குறிஞ்சிப் பாட்டு என்னும் ஒரு நூல் மட்டும் தொண்ணூற்று ஒன்பது மலர்களின் பெயர்களைக் குறிப்பிடுகின்றது. வள்ளுவர் மலர்கள் மலர்கின்ற காலத்தைப் பற்றியும் குறிப்பாகத் தெரிவித்துள்ளார். "மாலை மலரும்" என்று கூறுவதால், சில மலர்கள் மாலையிலும், சில மலர்கள் காலையிலும், சில மலர்கள் இரவிலும் மலரும் என்பதனை அறியமுடிகின்றது. தாமரை காலையிலும் பீர்க்கு மாலையிலும், அல்லி இரவிலும் மலரும் மலர்களாகும். பீர்க்கம்பூ மலரும் நேரத்தைப் பார்த்து விளக்கு வைக்கும் வழக்கம் தமிழகத்தில் உண்டு. இரவில் மலரும் மலர்கள் மிக்க நறுமணம் உடையதாயும் வெண்மை நிறம் பொருந்தியதாயும் இருக்கும். வண்டுகளைத் தன்பால் ஈர்த்து மகரந்தச் சேர்க்கைக்கு வழிகோல மணமும் நிறமும் காரணமாக அமைக்கப்பட்டிருக்கும் இயற்கையின் அறிவியல் நோக்கை எண்ணி வியக்க வேண்டியதாக உள்ளது. இவ்வாறு வள்ளுவர், மலரின் மணத்தையும், மலரும் காலத்தையும் அறிவிக்கின்றார்.

**காய்கனிகள்**

மலர்கள் காயாகிக் கனியாகி மக்கட்கு உணவாகப் பயன்படுகின்றன. வள்ளுவர், காய்கள் கனிகள் ஆகியவற்றைப் பற்றியும் கூறி

யுள்ளார். காய்களின் இரண்டு நிலைகள் விளக்கப்படுகின்றன. காய் என்பது முற்றிய நிலையில் உள்ளது; பயன்படுத்துவதற்குரிய பக்குவத்தை அடைந்தது. கருக்காய் என்பது பயன்படுத்த முடியாத பிஞ்சு நிலையை உணர்த்துவது. காய்களின் பிஞ்சுத் தன்மையையும் முற்றிய தன்மையையும் ஆராய்ந்தே அப்பெயர்கள் வழங்கி உள்ளார் என்பதை நோக்கும் பொழுது காய்கள் பற்றிய ஆராய்ச்சியும் வள்ளுவர் செய்துள்ளார் என்பது தெரிகின்றது. காய்களை அன்றிக் கனிகளையும் ஆராய்ந்துள்ளார் வள்ளுவர். காய் பழுத்து உண்ணும் நிலையில் இருப்பதைப் பழம் என்றும் அளவுக்கு விஞ்சிப் பழுத்ததைக் கனி என்றும் வகைப்படுத்தி இல்லற வாழ்வோடு ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். இல்லற வாழ்வில் காதலர்கள் இடையிடையே பெரிதும் சிறிதுமாய ஊடல்களை மேற்கொள்ள வேண்டும். ஊடல் கொள்ளாத வாழ்வு, கண்ணகி கோவலன் வாழ்வுபோலச் சுவையற்றதாகிவிடும். ஆதலின் ஊடல் என்பது பழுத்த பழம் போலவும் முற்றிய காய் போலவும் பயன்தரத் தக்க அளவில் இருத்தல் வேண்டும். மிகவும் பழுத்துக் கனிந்துவிட்ட கனி போல ஊடல் மிகுந்துவிடவும் கூடாது. தோற்ற நிலையில் உள்ள பிஞ்சுக் காய் போல ஊடல் மிகவும் குறைந்துவிடவும் கூடாது.

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயும் அற்று. (1306)

மேலும் இன்சொல்லுக்குக் கனியையும் வன்சொல்லுக்குக் காயையும் எடுத்துக்காட்டாகக் கூறி, கனி இருப்பக் காய் உண்ணல் கூடாது என்பதன் மூலம் இன்சொல் பேசுமாறு அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

பழங்களில் விதையுள்ள பழங்களைக் காட்டிலும் விதையில்லாப் பழங்கள் சிறப்புடையனவாகக் கருதப்படுகின்றன. அதில் சதைப்பற்று மிகுந்து இருக்கும். இதனைக் "காழில் கனி" என்பர். இத்தகைய விதையில்லாத பழங்களைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே வள்ளுவரது அவாவாகும்.

இவ்வாறு மலர் காய் கனிகள் பற்றி ஆராய்ந்த திறம் நோக்க வள்ளுவரை ஒரு தோட்டவியல் அறிஞர் என்று கூறலாம்.

# 9. கால்நடைகள்

பயிர்த்தொழிலுக்குக் கால்நடைகள் இன்றியமையாதவை. கால்நடைகளுள்ளும் எருதுகள் பெரும்பங்கு பெறுவன. இன்றுபோல் அல்லாமல் அன்று எருதுகளின்றி எவ்விதமான பயிரையும் பயிரிட முடியாது என்ற நிலை இருந்தது. அதனாலேயே எருதுகளைச் செல்வம் என்று போற்றினர். 'மாடு' என்ற சொல்லுக்கே செல்வம் என்ற பொருளும் அமையலாயிற்று. உழவுக்குப் பயன்படும் மாடுகளைக் காளைகள் என்றும் எருதுகள் என்றும் பகடுகள் என்றும் கூறுவர். இவ்வெருதுகள் ஏர் உழுவதற்கும் ஏற்றம் இறைப்பதற்கும் வண்டி இழுப்பதற்கும் பழக்கப்பட்டுப் பயன்படுத்தப் பெற்றுவந்தன. எருதுகளின் முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்றார் வள்ளுவர்.

### எருதுகள்

எருதுகள் தளராத முயற்சி உடையன. வண்டியை இழுத்துச் செல்லும் எருதுகள் சேற்று நிலமாயினும் மேடாயினும் பள்ளமாயினும் மணற்பாங்கான பகுதியாயினும் முயற்சியோடு அவைகளைக் கடந்து செல்லும் ஆற்றலுடையன. வண்டியை இழுக்கும் பொழுது இரண்டு எருதுகளும் ஒருங்கு இணைந்தும், மூக்குகள் நிலத்தினைத் தொடும் அளவிற்கு மிகக் குனிந்தும் கால்களை மடக்கி வைத்தும் இழுத்துச் செல்லும். இவ்வெருதுகளைப் போன்று எத்தகைய இடுக்கண்வரினும் அவைகளைக் கண்டு அஞ்சாது, மனம் தளராது முறியடித்து வாழ வேண்டும். எருதுபோன்ற தளரா முயற்சி உடையவனிடத்தில் துன்பங்கள் நெருங்காது வரினும் அவைகள் துன்புற்றுத் தோற்றோடிப் போகும். ஆதலின் எருதுகள்போல அரிய முயற்சியோடும் ஆற்றலோடும் விளங்கவேண்டும் என்று ஒரு வகையில் மாடாக வாழுமாறு அறிவுறுத்துகின்றார் வள்ளுவர்.

மடுத்தவாய் எல்லாம் பகடுஅன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து. (624)

எருதிற்கு அவ்வளவு உடல்வலிமை எங்கிருந்து வந்தது என்று ஆராயின் ஓர் உண்மை விளங்கும். நன்செய் நிலங்களில் உழுது களைத்த எருதுகள் புன்செய் நிலங்களில் முளைத்துள்ள பசுமையான புல்பூண்டுகளை மேய்வதால் ஒருவகையான கலப்பு உணவைப் பெறுகின்றன. இஃது இன்றைய அறிஞர்களாலும் பரிந்துரைக்கப் படுகின்றது. மேலும் அவை வைக்கோல், தினைத்தாள் ஆகியவைகளைத் தீவனமாகப் பெறுகின்றன. ஆதலின் நல்ல உடல் வலிமையோடு செயலாற்றுகின்றன. முயற்சி என்பது எருதுகளின் இயல்பான குணமாகும். இரண்டும் சேர்ந்து அவற்றிற்கு அரிய வலிமையை உண்டாக்குகின்றன. அவ்வலிமையால் எத்தகைய பாரத்தையும் எளி-தாக இழுத்து விடுகின்றது. இத்தகைய எருதுகள் கொங்கு நாட்டில் மிகுதியாக வளர்க்கப்பட்டன என்பதையும் அறிகின்றோம்.

**பசுக்கள்**

பசுக்கள் தெய்வங்களாகவே கருதப்பட்டன. கோவிலுக்கெனப் பசுமாடுகள் விடும் வழக்கம் அன்றும் இருந்து வந்தது. அப் பசுமாடுகள் மேய்ச்சல் நிலங்களாகிய ஊர் மந்தைகளில் மேய்ந்து நீர் நிலைகளில் தண்ணீர் குடித்து வாழும். அம்மாடுகள் தெருவழியாக வரும்பொழுது மக்கள் அவைகட்குத் தண்ணீர் வைத்து மகிழ்வார்கள். அத் தண்ணீரும் தங்கள் முயற்சியால் கொணர்ந்ததாக இருக்கவேண்டும். இரந்து பெற்றுக் கொடுத்தல் இழிவாகும் என்று கூறுகின்றார் வள்ளுவர்.

ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு
இரவின் இளிவந்தது இல். (1066)

பசுக்கள் பாலின் பொருட்டே வளர்க்கப்பட்டன. அவைகள் ஏர் உழுவதற்கோ ஏற்றம் இறைப்பதற்கோ வண்டி இழுப்பதற்கோ பயன் படுத்தப்படவில்லை. அரசன் செம்மையாக ஆட்சி செய்யான் எனின் பசுக்கள் தரும் பயன் குறைந்து விடும் என்று வள்ளுவர் கூறுகின்றார். செங்கோல் செலுத்தப்படவில்லை எனில் பருவமழை குன்றிவிடும் என்பதும் பொதுவாக அன்றிருந்த கொள்கையாகும். மழையின்றேல் பசும்புல்லும் முளைப்பது அரிதாகிவிடும். மேய்ச்சல் நிலங்களில் பசுக் களுக்கு வேண்டிய பசும்புல் இல்லை எனில் இயல்பாகவே பயன் குன்றி விடும். அன்றியும் பால் தரும் பசுக்களுக்குப் பசும்புற்களே நல்ல தீவன

மாகும் என்பதையும் கருத்திற்கொண்ட வள்ளுவர், "காவலன் காவான் எனின் ஆ பயன் குன்றும்" என்று சுருங்கச் சொல்கின்றார். பசுக்கள் கயிற்றை அறுத்துக் கொண்டு பசிய பயிர்களை மேய்ந்து விடுதலும் உண்டு என்பதைக் குறள் கூறுகின்றது.

**பாலும் நெய்யும்**

பால் மிகச்சிறந்த உணவு. பாலை நன்றாகத் தூய்மை செய்யப்பட்ட கலத்தில் வைக்க வேண்டும். கலம் தூய்மை குறைந்திருக்குமாயின் பால் கெட்டுத் திரிந்து விடும். அதுபோல் செல்வமும் பண்புடையவர்களிடத்தில் இருக்கவேண்டும். பண்பற்றவர்களிடத்தில் செல்வம் இருக்குமாயின் அஃது ஒருவருக்கும் பயன்படாது போய்விடும் என்று கூறுகின்றார் வள்ளுவர்.

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று. (1000)

பாலைக்கறந்து உறையிட்ட தயிரை மோராக்கி விற்ற செய்தியினையும் அறிகின்றோம். முல்லை நில ஆய்மகள் ஒருத்தி தான் ஏராளமாக வளர்த்த பசுக்கள், எருமைகள் ஆகியவற்றிலிருந்து பாலைக்கறந்து காய்ச்சி இரவில் உறையிட்டு வைப்பாள். விடியற் காலத்தில் எழுந்து மத்தினால் அத் தயிரினைக் கடைந்து, மண்பானையில் மோரை எடுத்துச் சென்று அருகில் உள்ள ஊர்களில் விற்றுவருவாள் என்று இலக்கியம் இயம்புகின்றது.

இன்று போல் பெரும் அளவில் அன்று பால் பண்ணைகள் இல்லை என்றாலும் ஒவ்வொரு வீடும் ஒவ்வொரு பால் பண்ணையாக விளங்கியது என்பதையும், மக்கள் இதனை ஒரு வேளாண்மைத் துணைத் தொழிலாகக் கொண்டு வருவாய் தேடிக் கொண்டனர் என்பதையும் அறிய முடிகின்றது. திருவள்ளுவர் பாலைக் குறிப்பிட்டது போல நெய்யையும் குறிப்பிட்டுள்ளார். "நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்" என்ற புறநானூற்றுத் தொடரால் நெய் உணவுக்குப் பயன்படுத்தப் பட்டது என்பதை அறிகின்றோம். நெய்யை, நெருப்பு வளர்த்தலாகிய வேள்வி போன்ற நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தினார்கள் என்பதை, "அவிசொரிந்து ஆயிரம் வேட்டல்" என்ற தொடரால் விளக்குகின்றார் வள்ளுவர். (நெய்யை விட்டு நெருப்பை அவிக்க முடியாதது போல ஊரவர் பேசுகின்ற பேச்சுகளால் காதலைத் தடுக்க முடியாது என்றும் கூறியுள்ளார்.) இவ்வாறு பசுக்கள் வளர்த்துப் பாலும் நெய்யும் விற்ற செய்தியையும் அறிந்து மகிழ்கின்றோம்.

**ஆடுகள்**

ஆடுகள் கிடைக்கென வளர்க்கப் பெற்றவை. வேளாண்மைக் காக மந்தை மந்தையாக வளர்க்கப் பெற்று வந்தன. இதற்கு மாருகச் சங்க இலக்கியங்களில் புலால் உணவு மிகவும் சிறப்பாகப் போற்றப் படுகின்றது. மக்கள் ஆட்டிறைச்சியை விரும்பி உணவாகப் பயன் படுத்தி உள்ளனர். ஆட்டுக் கிடாயை அறுத்து நெருப்பிலே சுட்டுப் பின்னர் சமைத்து உண்ட வழக்கம் இருந்து வந்தது. ஆனல் வள்ளுவரோ மாறுபட்ட கருத்துடையவராகத் திகழ்கின்ருர். கள்ளை யும் புலாலையும் உண்ணுவது கூடாது என்று முழக்கமிட்ட முதல் பெரியார் வள்ளுவரே ஆவார். மக்கள் தொகையும் மேல் நாட்டு நாக ரிகமும் மிகுந்த இன்றைய நிலையில் இக்கருத்துக்கள் போற்றப்படுமா என்பது ஐயத்திற்குரியதே. எனினும் கொல்லாமை, புலால் மறுத்தல் என்ற இரண்டு அதிகாரங்களிலும் உயிர்களைக் கொல்லுவதும், அதனை உண்பதும் கொடுஞ் செயல் என்று கடிந்து கூறியுள்ளார். ஆடுகளை முதன்மையாக நினைந்தே எவ்வுயிரையும் கொல்லக் கூடாது என்று கூறி உள்ளார் என்று கூறினும் பொருந்தும்.

எந்த ஒரு பொருளையும் உற்று நோக்கிப் பார்ப்பது வள்ளுவர்க்கு வழக்கமாகும். பார்க்கும் பொருளிலிருந்து நற்பண்புகள் கிடைக்குமாளுல் அதனை மக்கட்கு அறிவுரையாக வழங்குவார். தீப்பண்புகள் காணப்படுமாளுல் அத்தகைய பண்புகளை விட்டொழிக்க வேண்டுமென்று எடுத்து மொழிவார். ஆதலின் எப்போதும் அவருடைய பார்வை, பயனுடைய பார்வையாகவே இருக்கும். அக்கால மக்கள் போர்புரிவதில் மிக்க நாட்டங் கொண்டவர்கள், மனிதர்களிடையே போர் புரிய வாய்ப்பில்லாத போது சேவல் களையும் ஆட்டுக்கிடாய்களையும் ஒன்ருேடொன்று மோதவிட்டு வேடிக்கை பார்ப்பது அவர்களது வழக்கமாகும். அத்தகைய காட்சிகளை வள்ளுவரும் கண்டுள்ளார். இரண்டு ஆட்டுக்கிடாய்கள் போரிடத் தொடங்கி விட்டன. ஒன்ருேடொன்று பலமாக மோதிக் கொள்கின்றன. இரண்டு தலைகளிலிருந்தும் இரத்தம் வடிந்து கொண்டிருக்கின்றது. எனினும் மீண்டும் மீண்டும் முட்டி மோதுகின்றன. திடீரென இரண்டும் பின்வாங்குகின்றன. அவ்வாறு பின்வாங்குவது தோற்றதற்கோ சோர்ந்து போனதற்கோ அறிகுறியல்ல. மேலும் வலிமையோடு மோத அவைகள் அவ்வாறு பின்வாங்குகின்றன. அவற்றிக்கு உயிர் முக்கியமில்லை; வெற்றிதான் அவற்றின் குறிக்கோள்.

அக்காட்சியைக் கண்ட வள்ளுவர் அதிலிருந்து ஓர் அரிய கருத்தை எடுத்து நமக்கு வழங்குகின்றார். வலிமையும் ஆற்றலும் உடையவர்கள் தங்கள் பகைவருக்கு அஞ்சி, அடங்கி, ஒடுங்கி இருப்பதைப் போல் தோற்றமளிப்பார்கள். அவர்கள் அவ்வாறு காட்டிக் கொள்வது பகைக்கு அஞ்சி அல்ல. ஆட்டுக்கிடாய் பின்வாங்குவது போலப் பின்வாங்கிப் பின்பகையை ஒரேமூச்சில் அழிப்பதற்காகத்தான். ஆதலின் வலிமை உடையவர்களின் பகையை மேற்கொண்டவர்கள் எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கூறுகின்றார்.

ஆடுகளை வெட்டி இறைச்சியை விலைக்கு விற்ற செய்தியை "விலைபொருட்டால் ஊன்தருவார்" என்ற தொடர் மூலம் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இதனால் மக்களில் சிலர் ஆட்டிறைச்சி விற்றலை ஒரு தொழிலாகவும் கொண்டிருந்தனர் என்பது புலனாகிறது. மேலும் பசுவின் சாணமும் ஆட்டின் பிழுக்கையும் மிகச்சிறந்த உரமாகும். செயற்கை உரம் இல்லாத அக்காலத்தில் பல்வேறு தழை தாம்புகளைத் தின்ற ஆடுமாடுகளின் கழிவுப் பொருட்கள் எல்லாச் சத்துக்களும் அடங்கிய செயற்கை உரம் போல வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டன என்பதை அறியலாம். இவ்வுரம் இன்று தொழு உரம் என வழங்கப்படுகிறது. இந்த ஆட்டெரு இன்றும் கூடச் செயற்கை எருவினும் சிறந்த எருவாகப் போற்றப் பெற்று வருகின்றது. ஆட்டுத்தோலைப் பதனிட்டு அதனைப் படுக்கை விரிப்பாகவும் பயன்படுத்தி உள்ளனர். இவ்வாறு ஆடுகள் வளர்க்கப்பட்டமையும் அதனை மக்கள் பயன்படுத்திய முறையையும் அறிகின்றோம்.

**குதிரை**

குதிரையும் கால்நடைகளோடு வைத்து எண்ணப்படும் ஒப்புமை உடையதாகும். வள்ளுவர் குதிரையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் குதிரைகள் பெரிதும் போருக்குப் பயன்படுத்தப்பட்டன. நால்வகைப் படையுள் குதிரைப் படையும் ஒன்று என்பது குதிரைகளின் சிறப்புக்குச் சான்று பகர்வதாகும். அரசர்கள் நான்கு குதிரைகள் பூட்டிய தேரில் செல்வது வழக்கமாக இருந்தது. போருக்குப் பயன்படுத்தப்படும் குதிரைகள் நன்கு பழக்கப் படுத்தப்பட்டனவாக இருக்கும். அவைகட்குப் போர்க்கல்வி பயிற்றுவிக்கப்படும். அதற்கெனக் "குதிரை நூல்கள்" இருந்தன என்பதை வரலாறு அறிவிக்கின்றது.

இன்று அத்தகைய நூல்கள் கிடைக்கவில்லை. அவை காலவெள்ளத்தால் அழிந்து போயின. போர் நிகழும் சூழ்நிலைக்கு ஏற்பப் பயிற்சி பெற்ற குதிரைகள் நடந்து கொள்ளும். சில குதிரைகள் போரில்லாத பொழுது பயிற்சியின்படி நடந்து, போர்க்காலங்களில் வீரர்களைக் கீழே தள்ளிவிட்டு ஓடிவிடும். இத்தகைய குதிரைகள் போர்க்கல்வியைச் சரிவரக் கற்காத குதிரைகளாகும், இவைகளைப் போன்ற மனிதர்களும் உலகில் உண்டு. மகிழ்ச்சியான காலங்களில் நம்மோடு மகிழ்ந்து இருந்து, துன்பம் வந்த காலத்தில் நம்மைத் தனியே விட்டுவிட்டு ஓடிவிடுவார்கள். இத்தகைய மனிதர்களோடு நட்புக் கொள்வதைக் காட்டிலும் "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்று தனியே இருந்து விடுதலே நல்லது என்று வள்ளுவர் கூறுகின்றார்.

அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை. (814)

குதிரைகள் வெளிநாடுகளில் இருந்து தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டுக் கடல் வழியாகக் கப்பலில் கொண்டு வரப்பட்டன என்பதை "நீரின் வந்த நிமிர்பரிப் புரவி" என்ற குறிப்பால் அறியலாம். அரபியர்களுடன் தமிழர்கள் குதிரை வாணிகம் செய்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. ஆதலின் குதிரை தமிழகத்து விலங்கல்ல என்பது ஒருதலை. ஐந்து அறிவுள்ள விலங்காகிய குதிரைகளில் வெள்ளை நிறமுடையன சிறந்தனவாகக் கருதப்பட்டன. காற்றென விரைந்து செல்லும் ஆற்றலுடைய இக்குதிரைகள் அன்னப்பறவையோடு ஒப்பிடப் பட்டுள்ளன. குதிரைகளின் பிடரிமயிர் கத்தரித்து விடப்பட்டு அழகாக இருக்கும். குதிரைகளுக்குப் புல்லும் கொள்ளும் கொடுக்காமல் நெய்ச்சோறு கொடுத்ததால், அவைகள் அவற்றை உண்ணாது வெறுத்தன என்ற குறிப்பும் கிடைக்கின்றது.

வள்ளுவர், பசுக்கள் எருதுகள் ஆடுகள் குதிரைகள் ஆகிய கால்நடைச்செல்வங்கள் பற்றிக் கூறியதோடல்லாமல் அவைகளின் பயன்கள் வளர்ப்பு முறைகள் அவற்றின் இன்றியமையாமை ஆகியவைகளையும் விரித்துக்கூறியுள்ளார். இக்கால்நடைகளில் எருதுகள் கொண்டு உழவு செய்தும், பசுக்களால் பால்வளம் பெருக்கியும், ஆடுகள் வளர்த்து வருவாயைக் கூட்டியும், குதிரைகள் கொண்டு படையமைத்து நாட்டைக் காத்த தோடன்றி வேண்டுமிடங்களுக்கு விரைந்து சென்று தங்கள் தொழில் முடித்தும் வேளாண்பெருமக்கள் பயனடைந்தார்கள் என்பது கருப்பொருளாகும்.

# 10. விலங்கினங்கள்

பண்டைக்காலத்தில் காடுகளும் காட்டில் வாழும் விலங்குகளும் போற்றிப் பாதுகாக்கப்பட்டன. காடுகள் நாட்டைப் பாதுகாக்கும் அரண்களாக இருந்தமையின் அவை இன்றியமையாதனவாய்க் கருதப் பட்டன. காடுகளில் செறிந்த மரங்களை உண்டாக்கி அவைகளை மக்கள் அழிக்காமல் பாதுகாத்தும் வந்தனர். அத்தகைய காடுகளை வள்ளுவர் “அணி நிழல்காடு” என்று குறிப்பிடுகின்றார். நிழல் தரும் பெரிய மரங் களும், பகைவர் புகுதற்கரிய முள் மரம், மூங்கில் மரம் போன்றவை களும் அக்காடுகளில் அடர்ந்து வளர்ந்திருந்தமை திருக்குறளால் அறியப்படும். இத்தகைய மரங்கள் அடர்ந்த காடுகளே மழை வளத்தை உண்டுபண்ணக் கூடியவை. அவற்றின் இலைதழைகள் பயிருக்குச் சத்துள்ள இயற்கை எருவாகும். ஆதலின் காடுகள் மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்பட்டன. மனிதர்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத காடுகளில்தான் விலங்குகள் தன்னிச்சையாக வாழும் இயல்புடையன. அன்றியும் காடுகள் அழியா மலிருக்க இவ்விலங்கினங்கள் காரணமாகின்றன. வள்ளுவர், யானை, சிங்கம், புலி, நரி, மான், முயல் முதலிய விலங்குகளைப் பற்றிக் குறிப் பிட்டுள்ளார். அவர் வாயிலாக விலங்கினங்களின் தன்மைகளையும் சிறப்புக்களையும் அறிவதோடு அவற்றின் உடற்கூறுகள் முதலிய குறிப்பு களும் உணரக் கிடக்கின்றன. வனத்துறையும் வேளாண்மையின் ஒரு பகுதி ஆதலின் அதுபற்றிய செய்திகளும் இப்பகுதியில் ஆராயப் படுகின்றது.

**யானை**

யானை பெரிய உருவமுடைய விலங்கு; கூரிய வெண்மையான தந்தங்களையும் சிறிய கண்களையும் உடையது. பிற விலங்குகட்கு

இல்லாத துதிக்கை யானையின் சிறப்பு உறுப்பாகும். இத்துதிக்கையின் உதவியால் உணவை எடுத்து உண்ணும். இத்துதிக்கையில் துளை இருப்பதால் அதனைத் "தூம்புடைத் துதிக்கை" என்று இலக்கியம் கூறும். இத்துளை வழியாக நீரை உறிஞ்சிக் குடிக்கும். யானை உண்ணுவதற்காக எடுத்த கவளத்தைக் கீழே விடாது என்பதையும் அறிகின்றோம். ஆண் யானையைக் களிறு என்றும் பெண் யானையைப் பிடி என்றும் வழங்குவது மரபு.

யானையின் ஆற்றல் அளவிடற்கரியது. பண்டை நாளில் யானைகள் பெரும்பான்மையும் போருக்குப் பயன்படுத்தப்பட்டன. வீரர்களின் அம்புகள் தனது உடலிலும் முகத்திலும் புதைந்தாலும் தளராது நின்று போரிட்டு வெற்றியை நிலைநாட்டும். தன் உடம்பு எல்லாம் அம்புகளால் புதைக்கப்பட்டிருந்தாலும் சுருண்டு விழுந்து விடுவதில்லை. அப்போதும் அது பீடு நடை நடந்து தன் பெருமையை நிலைநிறுத்தும். அதுபோல மன உரம் படைத்தவர்கள் எத்தகைய துன்பம் வந்த காலத்தும் கலங்கி அழுது வருந்துவதில்லை என்று கூறுகின்றார்.

> சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பில்
> பட்டுப்பா டூன்றும் களிறு. (597)

போர்க்களத்தில் வலிய கருவிகளோடு கூடிய மனிதர்களையும் எதிர்த்து நிற்கும் யானை, சேற்று நிலத்தில் அழுந்தி விடுமாயின், சிறு நரி கூட அதனைக் கொன்று விடக்கூடும். ஆதலின் எத்துணை மனவலி உடையவர்களாக இருந்தாலும் உரிய இடத்திலிருந்து செயலாற்றினால் தான் வெற்றி பெற முடியும் என்பதை யானையின் இயல்பு கொண்டு அறிவுறுத்துகின்றார்.

யானையோடு யானை போரிட்டுக் கொள்வதும் உண்டு. அக்காட்சியினை அருகிலிருந்து காணின் பார்ப்போர்க்குத் துன்பம் விளைய ஏதுவாகும். ஆதலின் குன்றின் மீதோ உயர்ந்த இடங்களின் மீதோ ஏறி நின்று அதனைக் கண்டு களிப்பர். குன்றின் மேல் இருந்து பார்ப்பவர் அச்சமின்றி இருப்பது போலக் கையில் பொருளை வைத்துக் கொண்டு ஒரு செயலைத் தொடங்கியவன் எளிமையாக அச்செயலைச் செய்து முடிப்பான் என்பது வள்ளுவர் கருத்தாகும். இக்கருத்தினை விளக்க யானைப் போரை நினைவூட்டுகின்றார் வள்ளுவர்.

> குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்துஒன்று
> உண்டாகச் செய்வான் வினை. (758)

யானை பெருங் காடுகளிலும் மலைச் சாரல்களிலும் தனது குடும்பத்துடன் வாழும் அன்புடை விலங்காகும். சிறிதளவு நீர் மட்டுமே இருந்த இடத்திற்கு ஓர் யானைக் குடும்பம் சென்றது. குட்டியானை அந்நீரைக் குடித்து எஞ்சிய நீரில் விளையாடிக் கலக்கி விட்டது. அக் கலங்கல் நீரும் சிறிதளவே இருந்தது. அந்நீரைப் பெண் யானை குடிக்கட்டும் என்று கருதிய ஆண் யானை, குடிப்பது போல் நீரிலே துதிக் கையை வைத்துக் கொண்டிருந்தது என்று கூறும் நிகழ்ச்சி யானையின் அன்புக்கோர் எடுத்துக் காட்டாகும். இவ்வாறு காட்டில் திரியும் யானைகளைப் பிடிக்க நாட்டிலுள்ள பழக்கப்பட்ட யானைகளைப் பயன் படுத்துவர். யானையால் வேறு ஒரு யானையைப் பிடிப்பது போல ஒரு செயலைத் தொடங்கியவன் அச்செயலாலேயே வேறோர் செயலையும் செய்து முடித்துக் கொள்வான். பெருங் குழிகள் வெட்டி வைத்து அதன்மீது புற்களைப் பரப்பியும், நேரடியாக விரட்டியும், வேட்டையாடியும் பிடிப்பதுண்டு. பிடித்து வந்த யானையைப் போருக்காகவும் பிற வேலைகட்காகவும் பழக்குவர். யானையைப் பழக்கப் பாகர்கள் குறியீட்டுச் சொற்களைப் பயன்படுத்துவர். அதனை அடக்குவதற்கு அங்குசம் என்ற கருவியைப் பயன்படுத்துவர் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

யானை அறிவு நிறைந்த விலங்கு. யானையை அறிவுடை மக்களோடு ஒப்பக் கருதுவர். இத்தகைய பெருஞ் சிறப்புடைய (யானை மதம் பிடித்துக் கொண்டால் அதன் கண்களைத் திரையிட்டு மறைத்து விடுவார்கள். பருவ மங்கையர் தங்கள் மார்பைத் துணியிட்டு மறைப்பது, களிற்றின் கண்களைத் திரையிட்டு மறைப்பது போன்றது என்று வீரச் சுவையுடைய யானைக்குச் செய்யும் செயலை இன்பச் சுவைக்கு எடுத்துக் காட்டாக்குகிறார் வள்ளுவர்.)

கடாஅக் களிற்றின்மேல் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில். (1087)

இத்தகைய யானைகள் பண்டைக் காலத்தில் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்பட்டு வந்தன. இவ்வுண்மையை "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று, யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென் மதுரை" என்னும் அடிகளால் நன்கு அறியலாம்.

**சிங்கம்**

விலங்குகளில் தலைமைச் சிறப்பை உடையது அரிமா. அரிமாவைச் சிங்கம் என்ற பெயரால் வழங்குவர். வள்ளுவர் அதனை 'ஏறு'

என்ற சொல்லால் குறிக்கின்ருர். சிங்கத்தின் பெருமித நடையை வள்ளுவர் பெரிதும் சிறப்பித்துக் கூறுகின்ருர். நற்பண்புகளுடைய பெண்ணைத் துணைவியாகப் பெற்றவன் சிங்கம் போல் பெருமித நடையுடன் தலை நிமிர்ந்து வாழலாம். அத்தகைய நல்ல மனைவியைப் பெருதவர்க்குச் சிங்கம் நடப்பது போன்ற பீடுநடை இல்லை; தலைகுனிந்தே வாழ நேரிடும் என்பதை,

> புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடு நடை. (59)

என்ற குறளால் விளக்குகின்ருர். சிங்கம் மிக்க வலிமையுடைய விலங்கு. அதன் வலிமை, பகை விலங்குகளையும் நடுங்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. பெருவலிமை உடைய அரசனுக்குச் சிங்கத்தைக் காட்டாகக் கூறுவர் புலவர். சிங்கம் மலையும் மலைசார்ந்த குறிஞ்சி நிலப் பகுதியில் உள்ள மலைச்சாரல்களில் வாழும் இயல்புடையது; யானையைக் கொன்று அச்சமின்றித் திரியும் இயல்புடையது. இத்தகைய சிறப்புவாய்ந்த விலங்கு, தன் நடையின் மூலம் வள்ளுவரையும் ஈர்த்துள்ளது என்பது அறியத்தக்கது. காடுகளுக்கு அழிவு நேராமையே இவற்ருல் பெறும் பயன். ஆதலின், இவைகளை 'வனச் செல்வங்கள்' என்று இன்றும் போற்றுகின்றனர்.

**புலி**

புலி ஆற்றல் வாய்ந்த விலங்கு. அது மரங்களடர்ந்த காடுகளிலும் மூங்கில் நிறைந்த மலைச் சாரல்களிலும் வாழும் இயல்புடையது. மலைப் பிளவுகளிலும் கற்குகைகளிலும் பதுங்கி இருக்கும். இது யானை, மான் முதலிய பிற விலங்குகளை மறைந்திருந்து தாக்கும். புலியின் நகங்கள் மிகவும் கூரியதாக இருக்கும். இதன் பிடியிலிருந்து தப்புவது என்பது அரிய செயலாகும். அதனல் இதனை, "இருங்கோள் வயப்புலி" என்று கூறுவர்.

புலி தாக்க வருமாயின் அதனைக் கண்டு யானை அஞ்சும் என்று வள்ளுவர் கூறுகின்ருர். குறிஞ்சி நில மக்கள் புலி யானையைத் தாக்குவதைப் பெருங் குன்றுகளின்மீது இருந்து கண்டு களிப்பார்கள். வலிய கருவிகளும் ஆள் துணையும் ஒருங்கு சேர்ந்து இருப்பினும் மனவலிமை இல்லாதவர்கள் வெற்றி பெற இயலாது. மனவலிமையுடையவர்கள் அத்தகைய துணை வலிமைகள் இல்லை எனினும் வெற்றி பெறுவார்கள் என்பதைப் புலியின் வாயிலாக வள்ளுவர் உணர்த்துகின்ருர்.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (599)

இத்தகைய பேராற்றல் வாய்ந்த புலி, மான்களையும் பன்றிகளையும் கொன்று தின்னும்; கொன்ற விலங்குகளின் உடலை இழுத்துச் சென்று அது விரும்பும் இடத்தில்போட்டுத்தின்றுவிட்டு, எஞ்சியதை அப்படியே விட்டுச் செல்லும் இயல்புடையது. அவ்வாறு விட்டுச் சென்றதை மற்ற விலங்குகளும் பறவைகளும் உண்டு மகிழும். புலி பெரும் பசியால் வாடி வருந்துமாயினும் தன்னால் கொல்லப்பட்ட விலங்கு இடப்பக்கமாக வீழ்ந்து இறக்குமானால் அதைத் தனது தோல்வியாகக் கருதி அதனை உண்ணமல் விடுத்து, வலப்பக்கமாக விழுந்து இறக்கும் விலங்குகளையே உண்ணும் கொள்கை உடையது. இவ்வாறு தானும் உண்டு, எஞ்சியதைப் பிறவற்றிற்கும் பயனாகும்படி செய்கின்ற புலி போன்ற மனவலிமையும் சீரிய கொள்கையும் உடையவர்களோடு நட்புக்கொள்ள வேண்டும் என்பது புலவர்களின் அறிவுரையாகும்.

புலியின் தோல் பற்றியும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். உலகில் வலிமையில்லாத சிலர் தங்களை மிகுந்த வலிமையுடையவர்கள் போல் காட்டிக்கொள்வார்கள். அவர்கள், புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு பயிர்களை மேயும் பசுப்போல, வல்லவர்களாய் நடித்துக் கொண்டே தீமைகளை, பெருமை தராத செயல்களைச் செய்வார்கள் என்பதைப் புலித்தோல் கொண்டு விளக்குகிறார் வள்ளுவர்.

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (273)

இதனால் மக்கள் புலிவேட்டையாடி உள்ளார்கள் என்பதும் அதன் தோலைப் பயன்படுத்தியுள்ளார்கள் என்பதும் விளங்கும்.

**நரி**

நரி தந்திரம் மிகுந்த விலங்கு. யானையைப் போன்ற உருவமும் வலிமையும் இலலை என்றாலும் யானை சேற்று நிலத்தில் சிக்கிக்கொள்ளுமானல், அது மதம் செருக்கிய யானையாக இருந்தாலும், நரி அதனைக் கொன்றுவிடும். எத்தகைய வலிமை உடையவர்களாக இருந்தாலும் இடமறிந்து ஏவல் செய்யவேண்டும் என்பதையும் வலிமைக் குறைவுடையவர்களும் இடமறிந்து ஏவல் செய்யின் வெற்றி பெறலாம் என்பதையும் வள்ளுவர் நரியின் இயல்பு கொண்டு விளக்குகின்றார்.

காலாழ் களரில் நரியடும் கண்அஞ்சா
வேலாள் முகத்த களிறு. (500)

நரிகள் முள்ளுடைய காட்டில் மிகுதியாகக் காணப்படும். இந்நரிகள் கூட்டமாகச் சேர்ந்துகொண்டு ஊளையிடும் பழக்கமுடையன. இந்நரிகள் புலி முதலிய பெருவிலங்குகள் தின்றுவிட்டுச் சென்ற தசையைத் தின்று வாழும்; பிணத்தையும் தின்னும். இதனைப் ''பிணந்தின் குறுநரி'' என்று கூறுவர். ஆடுகளையும் ஆட்டுக் குட்டிகளையும் பிடித்துத் தின்னும் பழக்கமே இதற்குப் பெரும்பான்மையானதாகும்.

இவ்வாறு சிங்கமும் புலியும் நரியும் வாழ்வதால் காடுகள் அழிவின்றி இருப்பதோடு, அது மழையையும் பெய்வித்தலின், இவ்விலங்குகள் மறைமுகமாக வேளாண்மைக்குத் துணை செய்கின்றன.

**மான்**

மான்கள் பலவகைப்படும். இரலை, நவ்வி, மரை, கலைமான், புள்ளிமான் போன்ற பெயர்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. இவற்றின் ஆண் இனத்தை ''ஏறு'' என்றும் பெண் இனத்தைப் ''பிணை'' என்றும் கூறுதல் மரபு. வள்ளுவர் பிணையைப் பற்றிக் கூறியுள்ளார். மான் மருண்ட பார்வையுடையது. இளம்பெண்களின் பார்வையை மானின் பார்வையோடு ஒப்பிட்டு மகிழ்வர் கவிஞர். அதனைத் திருக்குறள் "பிணைஏர் மடநோக்கம்" என்று கூறுகின்றது.

இம்மான்கள், முல்லை நிலப் பகுதிகளின் நீர்நிலைகளுக்கருகிலுள்ள புல்லை உண்டு, தங்களது துணைகளோடு துள்ளிக் குதித்து விளையாடும். இவை கூட்டங்கூட்டமாக வாழும் இயல்புடையன. இவைகளில் ஆண் மான்கள் அழகிய நீண்ட கொம்புகள் உடையனவாயிருக்கும்; பெண் மான்களின் கொம்புகள் அத்தகைய சிறப்புடைய்ன அல்ல.

மானினத்தில் சிறப்பாகக் குறிப்பிடப்படுவது கவரிமான், இம்மானினம் மிக்க மான உணர்வுடையது என்ற கொள்கை பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. கவரிமான் தனது மயிர்த் திரளில் ஒன்று விழுந்து விடுமாயினும் உயிரை விட்டு விடும் என்று கூறுவர். அதுபோல் மான உணர்வு மிக்கவர்கள் அவ்வுணர்வை இழக்கும்படியான சிறு குறை நேர்ந்தாலும் தங்கள் உயிரைப் போக்கிக் கொள்வார் என வள்ளுவர் கூறுகின்றார்.

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின். (969)

கவரிமான்கள் அருகம்புல் போன்ற ஒரு வகையான புல்லை மேய்ந்து சுனைநீரைக்குடித்துத்திளைக்கும் இயல்புடையன என்றும் இவை சுனையோரங்களில் உள்ள மரநிழலில் தங்களது பெண் மான்களோடு மகிழ்ந்து விளையாடும் என்றும் இவ்வினம் வடதிசைக்கண் உள்ள இமயமலைச் சாரலில் வாழ்வன என்றும் அறிகின்றோம்.

ஆனால், "கவரிமான் தமிழகத்து விலங்கு அல்ல. இது திபெத்தில் உள்ள யாக் என்னும் எருதுபோன்ற ஒரு பொதி சுமக்கும் விலங்கு" என்று விலங்கியல் அறிஞர் கூறுவது ஆராய்தற்குரிய தொன்றாகும். இத்தகைய விலங்கினங்களை ஆராய்ந்து உண்மை காண வேண்டுவது இன்றியமையாததாகும்.

**முயல்**

முயல்கள் காடும் காடுசூழ்ந்த பகுதிகளிலும் வாழும் இயல்புடையன. அவைகள் காட்டு முயல்கள் எனப்படும். வள்ளுவர் கானமுயல் என்று கூறியுள்ளார். இவைகளின் கண்கள் பெரியதாகவும் செவிகள் நீண்டும் இருக்கும், கால்கள் குறுகியதாயிருத்தலின் இதனைக் குறுமுயல் என்று கூறுவர். முயல்கள் புல்லை உணவாகக் கொள்ளும். முயல் இறைச்சி மிகவும் சுவையுடையதாகவும் மென்மையானதாகவும் இருக்கும். மாடுமேய்ப்பவர்கள் முல்லையில் தங்கள் மாடுகளை மேயவிட்டு, முயற்கறி உணவை விரும்பி உண்பர். முயல்களை வேட்டைநாய் கொண்டும் வலைகொண்டும் அம்பு எய்தும் பிடிப்பர். வள்ளுவர், அம்பு எய்து பிடிப்பதைப் பற்றிக் கூறியுள்ளார். வீரர் அல்லாதாரை வென்று புகழ் பெறுதலைவிட வீரரை வெல்ல முயன்று தோல்வியடையினும் அதுவே சிறந்த வெற்றியாகும் என்ற கருத்தை விளக்க, முயலை, அம்பெய்து வெற்றி கொள்வதைக் காட்டிலும், யானைக்குக் குறிவைத்து அது பிழைபட்டுப் போமாயினும் அதுவே சிறப்புடையதாகும் என்று கூறுகின்றார்.

கான முயல்எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. (772)

இவ்வாறு காடுகளைப் பற்றியும் காடுகளில் வாழும் விலங்குகள் பற்றியும் வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களை நோக்கப் பண்டைக் கால முதலே அவைகள் போற்றிக் காக்கப்பட்டன என்பதை அறியலாம். காடுகள் மழைவளம் பெருக்கியதோடு இலைதழைகளால் வேளாண்மையை வளப்படுத்தின என்பதும், அக்காடுகள் இவ்விலங்கினங்களால் காக்கப்பட்டன என்பதும் இவ்வகையில் இவ்விலங்கினங்கள் வேளாண்மைக்குப் பயன்பட்டன என்பதும் விளக்கப்பட்டது.

# 11. நீர்வாழ்வன ஊர்வன பறப்பன

## நீர்வாழ்வன

### மீன்

நிலம் தரும் செல்வத்தைப் போலக் கடல் வழங்கும் செல்வமும் பெரும் செல்வமாகும். இயற்கை தரும் இக்கடல் செல்வங்கட்கு மிகுதியான வளர்ப்பு முயற்சி வேண்டுவதில்லை. கடலிலிருந்து அவற்றைப் பிடித்து எடுப்பதற்கே அதிக முயற்சி தேவை. கடல் செல்வமாகிய மீனைப் பற்றியும் திருக்குறளில் காணலாம். நிலங்களைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று நான்காகப் பகுத்ததில் நான்காவது பகுப்பு நெய்தல் நிலமாகும். இந்நிலம் கடலும் கடல் சார்ந்த நிலப் பகுதி ஆதலின், மீன் பிடிப்பதும் உப்பு விளைப்பதும் அந்நிலத்து மக்களின் பெருந்தொழில்களாக இருந்து வந்துள்ளன. அந்நிலத்து மக்கள் மீனைப்பிடித்து அருகில் உள்ள ஊர்களுக்குக் கொண்டு சென்று விற்றுப் பணமாகவோ அல்லது உணவுப் பொருளாகவோ பெற்று வருவார்கள். பிடித்த மீன்களை உடனுக்குடன் விற்காமல் அவற்றைப் பக்குவப் படுத்துவதும் உண்டு. அதனை "மீன் உணக்கல்" என்று கூறுவர். காவிரிப் பூம்பட்டினத்தின் கடற்கரை ஓரங்களில் பெண்கள் மீன் உணக்கிக் கொண்டு இருந்ததாக இலக்கியம் கூறுகின்றது.

மீனகளில் பலவகை உண்டு. கயல் மீன் என்பது அம்பு போல் நீண்டு இருக்கும். இறால் மீன் என்பது வில் போல் வளைந்திருக்கும். சுறு மீன் என்பது மிகப் பெரிய மீன். அதற்குக் கூர்மையான கொம்புகள் உண்டு. கடல் ஓரப் பகுதியில் செல்லுகின்ற வேறு பல மிருகங்களைத் துன்புறுத்தும் ஆற்றல் உடையது. மீனவர்கள் நிறைமதி நாளில்

சுறுமீனின் கொம்புகளை நட்டுக் கடவுள் வணக்கம் செய்து கடற்கரையில் மகிழ்ந்து விளையாடுவார்கள் என்பதைப் பழந்தமிழ் இலக்கியத் தால் அறியலாம். மீன்களில் வாளை, வரால், அயிரை என்ற வேறு பல வகைகளும் உண்டு. இவைகளை வலை போட்டுப் பிடிப்பார்கள். இம்முறையே அன்றித் தூண்டில் போட்டுப் பிடிப்பதும் உண்டு.

தூண்டிலில் கோத்திருக்கும் கொக்கி போன்ற இரும்பில் உள்ள இரையை விரும்பிய மீன் அதனை விழுங்க, அதனோடு தூண்டிலும் சேர்ந்து மாட்டிக் கொண்டு துடிதுடிக்கும். தூண்டிலில் இருந்த சிறிய புழுவை விரும்பித் தனது உயிரையே இழக்கின்ற மீனின் செயல் போன்றது சூதாட்டம் என்கிறார் வள்ளுவர். சூதாட்டத்தில் வரும் சிறு இலாபத்தை எண்ணித் தொடர்ந்து அதனைச் செய்பவர்கள் தங்கள் பொருள் முழுவதையும் இழந்துவிடுவார்கள். ஆதலின் சூதாடுதல் கூடாது என்பதை மீனைக் கொண்டு விளக்குகின்றார்.

> வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
> தூண்டில்பொன் மீன்விழுங்கி யற்று. (931)

வள்ளுவர் மீனையும் மீன் பிடிக்கும் தொழிலையும் குறிப்பிட்டிருப்பதால் மீன் வளர்ப்பும், அதனைப் பிடித்துப் பக்குவப்படுத்தியமையும், மக்களில் சிலர் அதனை உணவாகக் கொண்டமையும் பெறப்படுகின்றது. வேளாண்மையில் பயிர் வளர்க்க நீர் துணை செய்கின்றது. நீரிலுள்ள புழு பூச்சிகளைத் தின்று நீரைத் தூய்மையாக்க மீன்கள் துணை செய்கின்றன. ஆதலின், பசுமைப் புரட்சி என்னும் நிலவளத்தைப் போல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நீலப்புரட்சி என்னும் கடல் வளத்திற்கு வள்ளுவர் வித்திட்டுள்ளார் என்பதை அறிந்து மகிழலாம். மீனின் தோற்றம் கண் போன்று இருப்பதால் மங்கையரின் கண்களைக் கயற்கண் என்று வருணித்து மகிழ்வது கவிஞர்களின் மரபு.

**முதலை**

நீர் வாழ் விலங்கினங்களுள் முதலையும் ஒன்றாகும். ஆறு, குளம் போன்ற பெரிய நீர்நிலைகளில் முதலைகள் வாழும். பண்டைய நாளில் அரசர்கள் தங்கள் கோட்டைகளைச் சுற்றிப் பெரிய அகழிகள் தோண்டி அதில் முதலைகளை விட்டுவைத்திருப்பார்கள். பகைவர்கள் அகழியைக் கடக்க நீந்தி வரவேண்டும். நீரில் இறங்கினால் முதலைகள் அவர்களை

விழுங்கிவிடும். இவ்வாறு பாதுகாப்பிற்காக முதலைகள் வளர்க்கப்பட்டன. நீரில் இருக்கும் பொழுது முதலைக்கு வலிமை அதிகமாக இருக்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார். அது நீருள் இருக்கும் பொழுது மிகப் பெரிய யானையைக்கூட எளிதில் இழுத்துவிடும். ஆனால் நீரைவிட்டு வெளியே வருமானால் அதனை நரி கூட மிக எளிதில் இழுத்து விடும். ஆதலின் ஒரு செயலைச் செய்யக் காலம் பார்ப்பது போல, இடத்தையும் பார்த்தே செய்யவேண்டும் என்று முதலையை வைத்து அறிவு புகட்டுகின்றார் வள்ளுவர்.

> நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
> நீங்கின் அதனைப் பிற. (495)

முதலையின் கால்கள் வளைந்து இருக்கும். இடங்கர், கராம் என்பன முதலையின் வகைகளில் சிலவாகும். முதலை, தான் ஈன்ற குட்டியைத் தின்னும் அன்பற்ற விலங்கு. மீனைப் போலவே முதலையும் நீரில் வாழும் பிற உயிரினங்களையும் வஞ்சகமாகப் பிடித்துத் தின்னும் இயல்புடையது. அதன் கண்களிலிருந்து இயல்பாகவே நீர் வழிந்து கொண்டிருக்கும். இதனைக் கண்ட பிற உயிரினங்கள், உயிர்களைப் பிடித்துத் தின்ற செயலை எண்ணி வருந்தி, முதலை கண்ணீர் வடிக்கின்றது என்றும் இனி உயிர்களைப் பிடித்துத் தின்னாது என்றும் கருதி அருகில் சென்றால் அவைகளையும் பிடித்துத் தின்றுவிடும். இதுபோல் சிலர் தவறான செயல்களை வேண்டுமென்றே செய்துவிட்டுப் பிறகு செய்த தவற்றிற்கு வருந்துவது போல் பொய்யாகக் கண்ணீர் விடுவர். இத்தகைய வஞ்சகர்கள் விடும் கண்ணீரை "முதலைக் கண்ணீர்" என்று கூறுவது உலக வழக்கு.

**ஆமை**

ஆமை, கடல் ஆறு குளம் ஆகிய நீர்நிலைகளில் வாழும் உயிரினம். நீருள்ள மருதநில வயல்களிலும் வாழும் தன்மையுடையது. அதனை வயலாமை என்று கூறுவர். ஆமையின் நகங்கள் கூர்மையாக இருக்கும். அதன் வயிற்றுப் பகுதி வெண்மை நிறமுடையது. ஆமையின் இறைச்சி சுவையுடையதாக இருக்கும் என்றும் மக்கள் விரும்பி உண்பர் என்றும் நூல்கள் கூறுகின்றன. அதன் மேல் ஓடு வலிமையுடையதாக இருக்கும். அது பார்வைக்கு மரக்காலைக் (அக்காலத்திய முகத்தல் அளவுக்கருவி) கவிழ்த்து வைத்தது போலத் தோன்றும். ஆமை தனக்குத் துன்பம் வரும் காலத்தில் தனது

கால்களையும், தலையையும் ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளும். ஆமையின் இச்செய்கையைக் கண்ட வள்ளுவர், ஆமையைப்போல் நமது மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஐந்து உறுப்புகளையும் தீநெறிக்கண் செல்லாதவாறு தன்னுள் அடக்கி ஆளக்கற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்றார்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (126)

மீனை வளர்த்துப் பயன் பெறுவதுபோல ஆமைகளையும் வளர்த்துப் பயன் பெறலாம். இவ்வாறு வள்ளுவர் நீர்வாழ் இனங்களையும் அவற்றின் பயன்களையும் அவைகளிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகளையும் அறிவுறித்தியுள்ளார் என்பதை அறியலாம்.

## ஊர்வன

### எலி

உழவுத் தொழிலுக்குப் பகையாளி எலி. வள்ளுவர் பொதுவாக எலியைப் பற்றிக் கூறியுள்ளார் எனினும் எலிகளில் பலவகையுண்டு என்பதை அறியலாம். இவ்வெலிகளில் இல்லெலிகள், கரம்பை எலிகள், வெள்ளெலிகள், சுண்டெலிகள் என்பன சில. இல்லெலிகள் என்பவை வீட்டில் உள்ள உணவுப் பொருள்களைத் தின்று வாழும். மற்ற எலிகள் நன்செய் நிலங்களிலும், புன்செய் நிலங்களிலும் உள்ள வரப்பு ஓரங்களில் வளைகள் வைத்துக் கொண்டு வாழும். விளைந்த காலம் பார்த்துக் கதிர்களை அறுத்துச் சென்று வளையுள் வைத்துக் கொள்ளும். உழவன் உழைப்பை உண்டு வாழும் இவ்வெலிகள் போல் பிறர் உழைப்பை உண்டு வாழும் மனிதர்களும் உண்டு. அவர்களோடு நட்புக் கொள்ள வேண்டாம் என்பது அறிஞர்களின் அறிவுரையாகும். விளையும்போது காட்டிலும் விளைந்தபின் வீட்டிலும் உணவுப்பொருள்களுக்குக் கேடுவிளைவிக்கும் இத்தகைய எலிகளால் தீமையே அன்றி நன்மைகள் ஏதுமில்லை.

### பாம்பு

எலிக்குப் பகை பாம்பு. அது எலிகளைப் பிடித்துத் தின்னும் பழக்கமுடையது. ஆதலின் பாம்புகள் உள்ள இடத்தில் எலிகள் இரா. எலிகள் பெருங்கூட்டமாக ஒன்று திரண்டு கடல்போலப் பேரொலி செய்தாலும், ஒரு நாகம் எதிர்நின்று சீறின் அவைகள் ஓடிவிடும்.

அதுபோல திறனற்ற மக்கள் பலர்கூடி ஆரவாரிப்பினும், திறனுடைய ஒருவனை அவர்களால் வெல்ல இயலாமல், தோற்று ஓடிப்போவார்கள் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும். (763)

எலிக்குப் பகை பாம்பு என்பது போல மனித இனத்திற்கும் பாம்பு பகையாகும். கருத்து ஒற்றுமை இல்லாத ஒருவனோடு கூடி வாழ்வது, பாம்போடு சேர்ந்து வாழ்வது போலத் தீமையையே விளைவிக்கும் என்று கூறுகின்றார். ஆதலின், எலியும் பாம்பும் வேளாண்மைக்குப் பகையே. வயல்களிலும் வரம்புகளிலும் வாழ்ந்து உழவர்கட்கு ஊறு விளைவித்து, ஆக்கத்திற்கு அழிவு தேடும் இவ்வுயிர்களை அழித்து விடுவதே அறிவுடைமையாகும்.

**புழு**

புழுவைப் பற்றியும் வள்ளுவர் கூறியுள்ளார். புழுவிற்கு எலும்பு இல்லை. அது உற்று உணரும் ஓரறிவுயிர் என்பார் தொல்காப்பியர். புழு, கதிரவனின் வெப்பம் தாங்காது அழிந்துபடக் கூடியது. ஆதலின் இப்புழுக்கள் ஈரமுள்ள இடங்களிலும் பசுமையான இலை தழைகள் மீதும் இருந்து சூரிய வெப்பத்திலிருந்து தப்பிப் பிழைத்து வாழ்கின்றன. எலியைப் போல இப்புழுக்கள் பயிர்களுக்குத் தீமையே செய்கின்றன. ஆதலின், இந்நச்சு உயிர்களை அழித்துத் தீமை நேராமல் காக்க வேண்டுவது வேளாண்மை செய்வோரின் கடமையாகும்.

## பறப்பன

திருவள்ளுவர் மயில், அன்னம், கொக்கு, காக்கை, கோட்டான் ஆகிய பறவைகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இப்பறவைகளின் பண்புகளும் உறுப்பின் சிறப்பியல்புகளும் இவற்றிற்கும் வேளாண்மைக்கும் உள்ள தொடர்பும் விதந்து கூறப்பட்டுள்ளன.

**மயில்**

மயில் அழகிய பறவை. அதன் தோகை அழகினும் அழகியது. கண் போன்ற உருவ அமைப்பினைக் கொண்டது. தோகையுடையது ஆண் மயில் என்றும், தோகையற்றது பெண் மயில் என்றும் இனம் பிரிக்கப்படும். மேகங்களைக் கண்டு மகிழ்ந்தாடும் இம்மயில்கள் பாகற் பழத்தை விரும்பி உண்ணும் என்பது அறியக் கிடக்கின்றது. மயில்

தங்கள் இனத்தோடு வேங்கை மரத்தின் மீதிருந்து மகிழும். காலை இளம்பரிதியின் வெயிலில் திளைக்கும். மயிலின் சாயலைப் பெண்ணின் சாயலோடு ஒப்பிட்டு மகிழ்கின்றார் வள்ளுவர். மயிலின் தோகை மிகவும் மென்மையானது. மென்மையானது என்று அளவுக்கும் மிகுதியாக வண்டியில் ஏற்றினால் வண்டியின் அச்சு முறிந்துவிடும். அதுபோல், எளியவர் என்று பலரோடு பகை கொள்ளல் ஆகாது. அப்பலரும் ஒன்று சேர்ந்த வழி வலியவர்களையும் வென்று விடுவார்கள். ஆதலின், ஒருவன் வலியவனாக இருப்பினும் எளியவர்கள் பலரைப் பகைத்துக் கொள்ளல் ஆகாது என அறிவுறுத்துகின்றது திருக்குறள். மயில் இன்று தேசியப் பறவையாகப் போற்றப்படுவது குறிப்பிடத் தக்கதாகும். இத்தகைய மயில் கூட்டங்கள், விளைந்த கதிர்களை உண்டு பயிர்கட்குக் கேடு விளைவிக்கும் இயல்புடையன.

> பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்
> சால மிகுத்துப் பெயின். (475)

**அன்னம்**

வெண்மையான சிறகுகளை உடைய அன்னப் பறவையின் கால்கள் சிவந்த நிறத்தோடு குறுகியதாகவும், அடிப்பகுதியில் தோலுடைய தாகவும் இருக்கும் என்றும் அதுவானத்தில் மிக வேகமாகப் பறந்து செல்லும் இயல்புடையது என்றும் தமிழ் நூல்கள் கூறுகின்றன. புன்னை மரங்கள் நிறைந்த நெய்தல் நிலப்பகுதிகளில் வாழும் அன்னம் தனது குஞ்சுகளுக்குக் கடலிலிருந்து இரை கொண்டு செல்லும். பாலையும் நீரையும் கலந்து வைப்பினும் பாலை மட்டும் உண்ணும் ஆற்றல் உடையது என்று கூறும் கருத்தினை, வள்ளுவமோ சங்க இலக்கியங் களோ குறிப்பிடவில்லை. அன்னத்தின் தூவி மிகவும் மென்மையானது என்று வள்ளுவர் கூறுகின்றார். அன்னத்தின் நடையைப் பெண்ணின் நடையோடு ஒப்பிட்டு மகிழ்வர் கவிஞர். இராமன் சீதையின் நடையை அன்னத்தின் நடையோடு ஒப்பிட்டு மகிழ்ந்ததை,

> "ஓதிமம் ஒதுங்கக் கண்ட உத்தமன் உழைய ளாகும்
> சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்"

என்று அழகு படக் கூறுகின்றார் கம்பர். இக்காலத்தில் இப்பறவையைக் காண்பது அரிது.

**கொக்கு**

வெண்மையான சிறகுகளையும் இளம் பச்சை நிறமுடைய நீண்ட கால்களையும் உடைய கொக்கினைப் "பைங்கால் கொக்கு" என்று கூறுவர். அவை ஓடை போன்ற நீர் நிலைகளின் கரையோரங்களில் ஆடாது அசையாது நெடுநேரம் நின்று கொண்டிருக்கும். சிறிய மீன்களை எல்லாம் ஓட விட்டுவிட்டு அதற்குரிய உணவாகிய பெரிய மீன்கள் நீரின் வழியே வரும் பொழுது மிகவும் வேகமாக விரைந்து சென்று கொத்தி எடுத்துக் கொள்ளும். இவ்வாறு ஒரு செயலைச் செய்ய முனைந்தவன் அதற்குரிய காலம் வரும்வரை பொறுமையாகவும், விழிப்புணர்வோடும் இருந்து தக்க சமயம் வாய்க்கும் பொழுது கொக்குப்போல் விரைந்துசென்று முடிக்கவேண்டும் என்பதை வள்ளுவர் நமக்கு அறிவுரையாக வழங்குகின்றார்.

கொக்குஒக்கக் கூம்பும் பருவத்து மற்றுஅதன்
குத்துஒக்க சீர்த்த விடத்து. (490)

இக்கொக்குகளை நன்செய் நிலங்களிலும் நீர் நிலைகளிலும் கூட்டங் கூட்டமாகக் காணலாம்.

**காக்கை**

காக்கையும் கூகையும் கூட வள்ளுவரின் கவனத்தை ஈர்த்து உள்ளன. கரிய நிறமுடைய காக்கையின் கழுத்து, சாம்பல் நிறமுடையது. அதன் வாயின் உட்பகுதி சிவப்பு நிறம் பொருந்தியதாக இருக்கும். காக்கையின் கால் விரல்கள் நெருங்கி இருக்குமாதலின் அதனைத் "தொகுவிரல் காக்கை" என்று கூறுவர் புலவர். காக்கையின் இனம் தழுவி வாழும் பண்பு இன்றைய கூட்டுறவு இயக்கத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. ஏதேனும் உணவு கிடைத்தால் அது தனது இனத்தைக் கரைந்து அழைத்து ஒன்று சேர்ந்து உண்ணும் இயல்புடையது. காக்கையைப் போல மக்களும் சுற்றம் தழுவி வாழ வேண்டும் என்று கூறுகின்றார்.

காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கே உள. (527)

காக்கையைச் சிறப்பித்துப் பாடிய புலவர், காக்கை பாடினியார் என்று அழைக்கப்படுகின்றார். காக்கை ஒரு வீட்டிலிருந்து கரையுமானால் அந்த வீட்டிற்கு விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை மக்களிடையே

இருந்து வந்துள்ளது. காக்கையிடமுள்ள அரிய குணங்கள் ஆறினையும் கற்றுக்கொண்டுவிட்டீர்களா? என்று கேட்கிறது கீழ்வரும்பாடல்

காலை எழுந்திருத்தல், காணாமலே புணர்தல்,
மாலை குளித்தல், மனைபுகுதல்—சால
உற்றாரோடு உண்ணல், உறவாடல் இவ்வாறும்
கற்றாயோ காக்கை குணம்.

இத்தகைய சிறப்புடைய காக்கைக்கு இரவில் கண்தெரியாது என்ற செய்தியைக் கூறுகின்றார். இப்பறவை இனம், விளைந்த கதிர்களைக் கொத்தித்தின்றும் பயிர்களை நாசம் செய்தும் வேளாண்மைக்கு ஊறு விளைப்பன வாகும்.

**கூகை**

மரப்பொந்துகளில் வாழும் தன்மையுடைய இப்பறவை, கூகை கோட்டான் ஆந்தை என்று பல பெயர்களில் குறிக்கப்படுகின்றது. வளைந்த வாயினையும் பெரிய கண்களையும் கூரிய நகங்களையும் உடைய கூகை, இரவில் அலறுவது அச்சத்தை விளைப்பதாக இருக்கும். இக்கூகைகள் எலிகளைப் பிடித்து உண்பதில் பெரு விருப்பம் கொண்டவை. இதற்குப் பகலில் கண் தெரியாது. ஆதலின், இவ்வினத் திற்குப் பகையான காக்கைகள் இவற்றைப் பகல் நேரத்தில் தாக்கி அழிக்க முற்படும். இரவில் காக்கைகளுக்குக் கண்தெரியாது ஆதலின் அவற்றை அக்கூகைகள் இரவு நேரங்களில் தாக்கி அழிக்கும். இப்பறவை இனங்கள் மாறுபட்ட நேரங்களில் பார்வையற்று இருக்கின்றன. இவைகளைப் போல் ஒரு செயலில் வெற்றியே நோக்கமாகக் கொண்டவன் உரிய காலத்தில் செயலைத் தொடங்கி முடிக்க வேண்டும் என்பதற்கு இதனை உவமையாகக் கூறுகின்றார் வள்ளுவர்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை இகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது. (481)

இரவில் காக்கைக்கும் பகலில் கூகைக்கும் கண் தெரியாத தன்மையை உடற்கூறு அடிப்படையில் ஆராயத் தக்கது.

வள்ளுவர், பறவை இனங்களைப் பற்றியும் தெளிந்த அறிவினைக் கொண்டுள்ளார் என்பதற்கு மேற்கூறிய கருத்துக்கள் சான்றுகின்றன. குறிஞ்சியில் மயிலும், மருதத்தில் கொக்கும், நெய்தலில் அன்னமும், பாலையில் ஆந்தையும், எல்லா நிலங்களிலும் காணப்படும் காக்கையை முல்லையிலும் ஆக ஐவகை நிலங்களிலும் வாழும் பறவை இனங்களையும் கூறியுள்ளது சிறப்புடைய தொன்றாகும். இப்பறவையினத்தால் பயிர்களுக்கு அழிவு நேராமல் காக்கவேண்டும் என்பது குறிப்புப்பொருளாகும். நீரில் வாழ்பவை, நிலத்தில் ஊர்பவை, வானத்தில் பறப்பவை ஆகிய மூன்று வேறுபட்ட தன்மை உடைய உயிரினங்களை மேற்கண்ட-வாறு வள்ளுவர் ஆராய்ந்துள்ளார்.

# 12. வேளாண்மைப் பொறியியல்

திருவள்ளுவர் உழவியல் முறைகளைத் தெளிவுபடக் கூறியது போல உழவுக்குப் பயன்படும் கருவிகள் பற்றியும் கூறியுள்ளார். பண்பட்ட உழவியல் முறைகளை அறிந்தவர்கள் பண்பட்ட உழவுக்கருவி களையும் பயன்படுத்தி இருத்தல் வேண்டும். உழுவதற்கும் இறைப் பதற்கும் அறுப்பதற்கும் இன்னும் பிற செயல்களுக்கும் பயன்படுத்தப் பட்ட கருவிகள் பற்றி வெளிப்படையாகவும் குறிப்பாகவும் வள்ளுவம் கூறுகின்றது. அக்கருவிகள் பற்றிய அமைப்பு முறைகளை இப்பகுதி விரித்துரைக்கின்றது.

## உழவுக் கருவிகள்

நிலத்தை உழுவதற்கு ஏர் என்ற கருவி பயன்படுத்தப்பட்டது. "ஏரினும் நன்றால் எருவிடுதல்", "ஏரின் உழாஅர் உழவர்" என்ற குறட் பாவரிகள், ஏர் என்ற கருவியால் உழுதலைச் செய்தார்கள் என்பதை அறிவிக்கின்றன. ஏர் என்ற சொல்லுக்கு அழகு என்பது ஒரு பொரு ளாகும். அழகைத் தரும் பயிர்களையும், பலனைத் தரும் பொருள் களையும் விளைப்பதால் அதன் சிறப்பே அழகுடையது என்ற கருத்தில் அக்கருவிக்கு, ஏர் என்ற சொல்லைப் பெயராகச் சூட்டியுள்ளார்கள் என்றும் கருதலாம். ஏருக்கு நாஞ்சில் என்றும் மேழி என்றும் வேறு பெயர்கள் உண்டு. கலப்பை என்ற சொல் பிற்கால வழக்கமாகும். எனினும் இன்று அச்சொல் பெரு வழக்காக இருந்து வருகின்றது.

ஏர் மரத்தால் செய்யப்படும் கருவி. பெண் யானையின் துதிக்கை போன்று வளைந்து இருக்கும் அமைப்பைக் கொண்டது. ஏரோடு

கொழுவையும் பொருத்தி உழுவர். அக்கொழு உடும்பு முகம் போலக் கூர்மையாக இருக்கும். அக்கொழு முழுதும் நிலத்தில் முழுகும்படி ஆழமாக உழுவார்கள். புன்செய் நிலத்தில் உழுத கொழு தேய்ந்து மழுங்கிப் போய் இருக்கும். வள்ளுவர், இரும்பினைப் பற்றிக் கூறி இருப்பதால் உழுதற்கு ஏரோடு கொழுவும் பயன்படுத்தப்பட்ட உண்மையைக் குறிப்பால் உணரலாம்.

உழுவதற்கு ஏரும் கொழுவும் மட்டும் இருப்பின் போதா. நுகம் என்ற கருவியும் தேவையானதாகும். ஏரில் மாடுகளைப் பூட்டி உழுவதற்கு நுகத்தடி வேண்டும். அந்நுகத்தடியைப் பற்றிய முழு உருவத்தை "நெடுநுகத்துப் பகல்போல" என்ற தொடரால் உணரலாம். நுகம் நீளமானது. அதன் நடுப்பகுதியைக் குறிக்க ஓர் ஆணியை வைத்திருப்பார்கள். சான்றோர்கள் அவ்வாணியைப் போல் நடுநிலையாக விளங்க வேண்டும் என்று உவமையும் கூறப்பட்டுள்ளது. இந் நுகம் மாடுகள் பூட்டிச் செய்யும் எவ்வகைத் தொழிலுக்கும் இன்றியமையாததாகும். திருக்குறள், ஏர் உழுதலையும் வண்டி இழுத்தலையும் பற்றிக் கூறுவதால் ஏர், கொழு, நுகம் ஆகிய கருவிகள் பயன்படுத்தப் பெற்றன என்பதை அறியலாம்.

### நீர் இறைக்கும் கருவிகள்

வயலுக்கு நீர் பாய்ச்ச ஏற்றம் வைத்து இறைத்தார்கள் என்பதை "இறைப்பவர்க்கு ஊற்று நீர் போல மிகும்" எனும் குறள் கருத்து புலப்படுத்துகின்றது. கிணற்றில் உயரமான பகுதியில் ஏற்றம் இருக்கும். அதனை இக்காலத்தார் ஏத்தல் என்று கூறுவர். நீர் இறைப்பதற்கு ஆம்பி, கிழார், ஏற்றம் என்ற பல்வேறு கருவிகளைப் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆம்பி என்பது மனிதர்கள் கையால் நீரை இறைக்கும் இறைகூடையைப் போன்றது. கிழார் என்பதற்குப் பூட்டைப் பொறி என்பது பொருளாகும். இன்று இதனைப் பறி என்று கூறுவர். ஏத்தம் என்பதும் ஒருவகைக் கருவியே. அது ஏற்றக்கோல் கொண்டு நீரை இறைப்பதாகும். எந்திரம் வைத்தும் நீர் இறைத்தார்கள் என்பதையும் இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

### விதைப்புக் கருவிகள்

விதைப்பதற்கும் நடுவதற்கும் கருவிகள் இருந்ததாகத் திருக்குறளோ அன்றிச் சங்க இலக்கியங்களிலும் குறிப்புகள் இல்லை. தொல்காப்பியரும் இதுபற்றிக் குறிப்பாகவேனும் குறிப்பிடவில்லை. "வித்தும் இடல் வேண்டும் கொல்லோ" என்ற குறள் தொடரால் விதையை

விதைத்தும் ஊன்றியும் பயிர் செய்தார்கள் என்றே கருத வேண்டி உள்ளது.) "நட்டபின் நீரினும் நன்றுஅதன் காப்பு" என்ற குறள் தொடரால் பயிர் நடவுகளையும் கையாலேயே செய்தார்கள் என்பதை-அறிகின்றோம். விதைப்பதை ஆண்களும், நடுவதைப் பெண்களும் செய்வது மரபாக இருந்து வந்துள்ளது. ஏர் உழும்பொழுதும் ஏற்றம் இறைக்கும் பொழுதும் உழவர்கள் பாடல்களைப் பாடிக் கொண்டே தங்கள் தொழிலைச் செய்வார்கள். இதனை, ஏர்மங்கலம் என்றும் ஏற்றப்பாட்டு என்றும் கூறுவர் கவிஞர். பெண்கள் நாற்று நடும் பொழுது பாடுகின்ற பாடல்கள் உழத்தியர் பாட்டு எனப் பெயர் பெறும்.

**களை எடுக்கும் கருவிகள்**

விளைவிக்கும் பயிர்களில் களைகள் தோன்றுதல் இயல்பு. அக் களைகளில் சிலவற்றைக் கையால் பிடுங்கி விடலாம். கையால் பிடுங்க முடியாத களைகளை வெட்டி எடுக்க வேண்டும். அதற்குக் "களைகட்டுதல்" என்று பெயர். அதற்குக் களைக்கட்டு என்ற கருவியைப் பயன் படுத்தி உள்ளனர். இதனைப் "பைங்கூழ் களைகட்டதனொடு நேர்" என்ற குறள் தொடரால் அறியலாம். களையைக் கட்டும் (நீக்கும்) கருவி ஆதலின் அதற்குக் களைக்கட்டு என்று பெயர் ஏற்பட்டது. இக்களைக் கட்டால் பயிர்களின் வேருக்கு அருகிலுள்ள களைகளைக் கூடப் பயிர் களுக்கு அழிவு நேராவண்ணம் களைந்துவிட முடியும். இறுகிய மண்ணைக் கிளறி விடவும் இக்கருவி ஏற்றதாகும். இக்களைக் கட்டுக்குத் 'துளர்' என்பது இலக்கியப் பெயர். பெரும்பான்மையும் களை வெட்டுதல் புன்செய் நிலத்தில் செய்யப்படுவது ஆதலின் களை வெட்டும்பொழுது தோன்றும் நுண்ணிய மண்புழுதி அத்தொழில் செய்யும் வினைஞர் கையில் படிந்துள்ளதைக் கூர்ந்து நோக்கிப் பாடி உள்ளனர் கவிஞர்.

களைக் கட்டை விடப் பெரியது மண்வெட்டி. இது மண்ணை வெட்டி எடுத்துக் கரை போடவும் பாத்தியமைக்கவும் பயன்படுவதாகும். வள்ளுவர், "பாத்தியுள் நீர் சொரிந்தற்று, பாத்திப்படுப்பதோர் ஆறு" என்ற குறட்பாக்களின் தொடர்களால் பாத்தியைக் குறிப்பிட்டுள்ளார். ஆதலின், அதனை அமைக்கும் கருவியைப் பற்றியும் குறிப்பால் கூறி யுள்ளார் என்று கொள்ளலாம்.

### அறுவடைக் கருவிகள்

விளைந்தவைகளை அறுவடைசெய்வதற்கு 'அரிவாள்' என்ற கருவி பயன்படுத்தப்பட்டது என்பதை, "வாடியவள்ளி முதல் அரிந்தற்று" என்ற தொடரால் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இந்த அரிவாள், போரில் வீரர்கள் பயன்படுத்திய வாளினும் வேறுபட்டது. இல்லங்களிலே காய்கறிகள் அரிவதற்காகப் பயன்படுத்திய வாள் ஒன்றும் உண்டு. அந்த வாளுக்கு மனை அரிவாள் என்று பெயர். அது, அரிவாள் மனை என்று முன்பின்னாக மாறி இப்பொழுது அருவாமனை என வழங்குகின்றது. இந்த மனை அரிவாளை வெங்காயத்தாள் அரிவதற்குப் பயன்படுத்துவர் பெண்கள். நெல் முதலியவற்றின் தாளை அறுப்பதற்குக் கருவிகள் இருந்தது போலத் தினைக் கதிர்களைக் கொய்வதற்கும் அரிவாளைப் போன்ற ஆனால், அரிவாளினும் சிறிய வடிவமுள்ள கருவிகள் பயன்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்பதை ஆராய்ந்து அறியலாம். அறுக்க முடியாதவைகளை வெட்டுதற்கும் கருவிகள் வேண்டும். அது அரிவாளினும் பெரிதான 'கொடுவாள்' போன்றதாக இருக்கலாம் என்பதையும் 'அரிந்தற்று' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டு உய்த்து உணரலாம்.

### இரும்புக் கருவிகள்

மரங்களையும் மரக்கொம்புகளையும் வெட்டுதற்குக் கோடரிகளைப் பயன்படுத்துவர். மரக்கொம்புகளைக் கோடு என்று கூறுவார் வள்ளுவர். அக்கோட்டை அரிவது கோடரி எனப்படும். அச்சொல் மக்கள் வாயில் புகுந்து நீண்டு கோடாரியாகவும் கோடாலியாகவும் வழங்குகின்றது. வள்ளுவர், குடும்பத்தை மரமாகவும், அக்குடும்பத்திற்கு வரும் துன்பத்தைக் கோடரியாகவும் உருவகம் செய்து, நல்ல ஆண்மகன் இல்லாத குடும்பம் கோடரியால் வெட்டப்பட்ட மரம்போல் அழிந்து படும் எனக் கூறுகின்றார்.

> இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்
> நல்லாள் இல்லாத குடி. (1030)

கோடரிக்கு நவியம் என்ற வேறு பெயரும் உண்டு. அது பெரிய உருவ அமைப்பு உடையது. அதன் வாய்ப்பகுதி அரத்தால் அராவப்பட்டுக் கூரியதாய் இருக்கும். அக்கோடரிக்கு மரத்தாலான நீண்ட காம்பு உண்டு. அதற்குக் 'கை' என்று பெயர். இதனை, "நெடுங்கை நவியம்" என்று இலக்கியம் கூறும். காட்டை அழித்து நல்ல விளை நிலங்களாக மாற்றும் பொழுது மரத்தை வெட்டக் கோடரிகள் பெரிதும் பயன்பட்டன என்பதை அறியலாம்.

**அரம்**

வள்ளுவர் "அரம்" என்ற கருவியைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அரம் என்பது இரும்புக் கருவிகளைக் கூர்மையாக்கும் கருவி. குறிப்பாக, அரத்தைக் கொண்டு இரம்பம் என்ற கருவியைக் கூர்மையாக்குவார். பிற கருவிகளைக் கல்லிலும் மரத்திலும் தேய்த்துக் கூர்மையாக்கலாம். ஆனால் இரம்பத்தை அவ்வாறு தேய்த்துக் கூர்மையாக்க முடியாது. அரத்தால் மட்டுமே அராவிக் கூர்மையாக்க முடியும். புகைவதைக் கொண்டு நெருப்பின் உண்மையை அறிந்து கொள்வது போல் கூர்மையாக்கும் கருவியைக் கொண்டு கூர்மையாக்கப்படும் கருவி உண்டு என்பதை அறியலாம். ஆதலின் வள்ளுவர், இரம்பம் இருந்த உண்மையைக் குறிப்பால் புலப்படுத்தி உள்ளார் என்பதை அறியலாம். இரம்பத்தைக் கோடாரியால் வெட்ட முடியாத மரங்களை அறுக்கவும், அறுத்த மரங்களை மீண்டும் செப்பம் செய்யவும் பயன்படுத்துவர். மரவேலை செய்வோர்க்கு இவ்விரம்பமே மிகுதியும் பயன்படும் கருவியாகும். "அரம்பொருதபொன், அரம்போலும் கூர்மை, அடுமுரண்தேய்க்கும் அரம்" என்னும் தொடர்களால் அரமும் அரத்தால் தீட்டப்படும் இரம்பமும் இருந்தமையை வள்ளுவர் புலப்படுத்துகின்றார்.

**வண்டி (சகடம்)**

விளைந்த பொருள்களை இல்லங்களுக்கு எடுத்துச் செல்ல வண்டி பயன் படுத்தப்பட்டுள்ளது. கழனியிலிருந்து இல்லங்களுக்குக் கொண்டு செல்வதே அன்றி, அருகிலுள்ள ஊர்கட்குப் பொருள்களைக் எடுத்துச் சென்று விற்கவும் இவ்வண்டிகளைப் பயன்படுத்தியுள்ளனர். நிலத்திற்கு வேண்டிய எருவை ஏற்றிச் சென்று நிலத்தில் இடவும் வண்டிகள் பயன்பட்டன. அன்று எல்லா நிலைகளிலும் போக்குவரவு சாதனமாக இருந்ததும் வண்டியே என்பதை நன்கு உணரலாம். வள்ளுவர் வண்டியின் உறுப்புகளையும் குறிப்பிட்டுள்ளார். வண்டியின் இன்றியமையாத உறுப்பு அச்சு. அச்சு இல்லாமல் வண்டியினை அமைக்க முடியாது. அதனை "அச்சு" என்றும் "ஆணி" என்றும் கூறுகின்றார். அச்சின் இறுதியில் சக்கரங்கள் கழன்று போகாமல் இருக்க ஆணியைச் சொருகுவர். அதனை "அச்சாணி" என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். அச்சு பெரியது. அதை நோக்க ஆணி மிகச் சிறியது. எனினும், அச்சுக்குரிய இன்றியமையாமை இவ் வாணிக்கும் உண்டு. அதுபோல் உருவத்தால் சிறியர் என்று யாரையும் இகழ்தல் கூடாது. அவர்கள் அச்சாணி போல மிகவும் முதன்மை வாய்ந்தவர்களாகவும் இருப்பர் என்று கூறுகின்றார் வள்ளுவர்.

உருவுகண்டு எள்ளாமை வேண்டும்உருள் பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. **(667)**

வண்டிக்கு அன்றிப் பெருந்தேர்களுக்கும் இவ்வச்சும், ஆணியும் இன்றியமையாத உறுப்புகளாகும்.

(வண்டியின் சக்கரம் மூன்று பாகங்களை உடையது.) குடம் என்பது ஒன்று, அதனை 'உருளி' என்று இலக்கியம் கூறும். அக்குடத்தில் கால்கள் சொருகப்பட்டிருக்கும். அதற்கு ஆரக்கால்கள் என்று பெயர். ஆரக்கால்களின் மறு பக்கத்தில். வட்டைகள் செருகப் பட்டிருக்கும். இம்மூன்று உறுப்புகளாலும் இணைக்கப்பட்டதே சக்கரம் என்பது. வண்டியின் பார் நீண்டு வலிமையுடையதாகவும் தூண்கள் போன்ற பருமை உடையதாகவும் இருக்கும். இந்நெடும் பாருக்குத் துணையாகவும் இணையாகவும் இரண்டு சிறு பார்கள் வண்டியின் முன் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும். அதற்குக் கைகள் என்று பெயர். அவ்வண்டிகள் பாயினால் வேயப்பட்டிருக்கும். அதன் தோற்றம் மேகங்களால் மூடப்பட்ட குன்றுகள் போல் காட்சியளிக்கும். இத்தகைய வண்டி, பாரத்தை ஏற்றிக்கொண்டு நிலத்தை அறுத்துக்கொண்டு செல்லும் என வண்டியைப் பற்றிய கருத்துக்களை இலக்கியங்கள் கூறுகின்றன. இவ்வாறு (வண்டியின் ஒவ்வொரு உறுப்பும் சிறப்பித்துக்கூறப்படுவதால் அழகிய வண்டிகள் செய்யும் திறன் பெற்ற வினைஞர் இருந்தார்கள் என்பதையும் வண்டிகள் வேளாண்மைக்குப் பெரிதும் பயன்பட்டன என்பதையும் அறிகின்றோம்.) வண்டிகளே அன்றித் தேர், பல்லக்கு, கப்பல், தோணி முதலியவைகளும் செய்யப்பட்டதை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

**கிணறு வெட்டும் கருவி**

**கணிச்சி (கொந்தாளம்)**

கணிச்சி என்ற ஒருவகைக் கருவியை வள்ளுவர் கூறுகின்றார். இது கிணறு வெட்டுதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவியாகும். இக் கணிச்சியைக் குந்தாலி என்பர். இஃது இன்று கொந்தாளம் என வழங்கப்படுகின்றது. இக்கருவியைக் கொண்டு கற்கள் நிறைந்த பகுதியைத் தோண்டலாம். அதற்கு இக்கருவியின் கூரான முன்பகுதியைப் பயன்படுத்துவர். இதன் பின் பகுதியைக்கொண்டு பெரிய கற்களையும் உடைக்கலாம். இத்தகைய இரண்டு செயல்களுக்கும் பயன்படும் ஒரு கருவியாகும் இது. இதற்கு மழு என்றும், கோடரி என்றும் பொருள் கூறுவாரும் உளர். வள்ளுவர் காமத்தைக் கணிச்சியாகவும், நாணத்தைத் தாழ்ப்பாளாகவும், மனவுறுதியைக் கதவாகவும் உருவகம் செய்து, காமம் என்னும் கணிச்சி மனவுறுதி என்னும் கதவை

உடைக்கும் என்று கூறுகின்றார். (கதவைப் பிளக்கும் என்று கூறாமல் உடைக்கும் என்று கூறியதால் கணிச்சி என்பது கொந்தாளம் என்னும் கருவியையே குறிப்பதாக உள்ளது. ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளை அமைக்கவும் இக்கருவி பயன்படுவதொன்றாகும். ஆதலின், கிணறு வெட்டும் கருவிகள் பற்றியும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார் என்பது தெளியப்படும்.)

காமக் கணிச்சி உடைக்கும் நிறைஎன்னும்
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.) (1251)

## மீன் பிடிக்கும் கருவி

### தூண்டில்

மீன் பிடிப்பதற்குத் தூண்டில்களையும் வலைகளையும் பயன் படுத்துவர். வள்ளுவர் தூண்டிலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நீண்ட மூங்கிலின் நுனியில் கயிற்றைக் கட்டி அக்கயிற்றின் நுனியில் இரும்பால் செய்யப்பட்ட தூண்டிலை மாட்டி இருப்பர். அத்தூண்டில் வளைந்த வாயுடையதாக இருக்கும். அதன் நுனி மீண்டும் உட்புறமாக வளைக்கப் பட்டிருக்கும். வலை போட்டுப் பிடிக்க முடியாத சிறிய நீர்நிலைகட்கு இத்தூண்டில் பயன்படும். பெரிய நீர்நிலைகளில் வலைபோட்டு மீன்களைப் பிடிப்பர். அவ்வலைகள் கயிற்றால் பின்னப்பட்டிருக்கும். குறுகிய இடைவெளிகளோடு பின்னப்பட்ட வலை "குறுங்கண் அவ்வலை" என்று போற்றப்படும்.

## வேட்டைக் கருவிகள்

பயிர்களை நாசம் செய்யும் விலங்குகள் முதலியவற்றை விரட்டு வதற்காகவும், காடுகளில் சென்று வேட்டையாடுவதற்காகவும் வில், வாள் போன்ற கருவிகள் பயன்படுத்தப்பட்டதை வள்ளுவர் குறிப்பிடு கின்றார். முயல், மான் முதலிய சிறு விலங்குகளை வில் கொண்டு வேட்டையாடுவர். யானை, புலி, சிங்கம் முதலியவைகளை வேல் கொண்டு எறிவர். போர்க்களத்தில் யானையை வேல் கொண்டு தாக்குவர். வாள் கொண்டு வெட்டுவர். "கானமுயல் எய்த அம்பு", "யானை பிழைத்த வேல்," "வாள் ஆண்மை", "கணைகொடிது" என்ற சொற்றொடர்கள் அக்கருவிகள் இருந்தமையைப் புலப்படுத்துகின்றன. இவ்விரும்புக் கருவிகள் வேட்டையாடுவதற்கே அன்றி நாடுகாக்கவும் பயன் பட்டன என்பதையும் அறியலாம்.

**கயிறுகள்**

உழவுத் தொழிலுக்கு கயிறுகள் இன்றியமையாதவை. ஏற்றம் இறைப்பதற்கும், ஏர் உழுவதற்கும், மாடுகளைப் பிணைப்பதற்கும், ஆடு மாடுகளைக் கட்டுவதற்கும் கயிறுகள் மிகவும் பயன்படுவதாகும். வள்ளுவர் இதனைத் "திருவினைத் தீராமை ஆர்க்கும் கயிறு" என்ற தொடரிலுள்ள கயிறு என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு உழுவதற்கும் அறுப்பதற்கும் இறைப்பதற்கும், எடுத்துச் செல்வதற்கும் எனப்பலவகையான கருவிகள் இருந்தன என்பதை வள்ளுவர் தெளிவுறுத்துகின்றார். சிறுதாள்களை அறுப்பதற்கும், பெரிய மரங்களை வெட்டுவதற்கும் தனித்தனியாகக் கருவிகள்; களை எடுப்பதற்கும், மீன்பிடிப்பதற்கும் கருவிகள்; என இவை ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பே இருந்தன என்பதில் தமிழ் மக்களுக்கு ஒரு வகையில் பெருமை. நம் முன்னோர்கள் உழவுக்கருவிகளை அமைத்துக் கொண்டதிலும், தெளிந்த அறிவுடன் விளங்குகின்றார்கள் என்பதில் மகிழ்ச்சி. இந்தப் பெருமையும் மகிழ்ச்சியும் இன்று நமக்கு எவ்வகையில் பயனளிக்கும்? இத்தகைய பழம் கருவிகளை அறிந்து கொள்வதால் என்ன நன்மை? என்ற கேள்வி யார் மனதிலேனும் தோன்றுமாயின் இதை அவர்க்கு ஒரு மாற்றமாகக் கூறலாம். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே வேளாண்மையில் தெளிந்த அறிவுள்ள பழங்குடியில் தோன்றிய நாம் கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக என்னென்ன சாதனைகளை நிகழ்த்தி உள்ளோம்? எத்தனை புதிய கருவிகளைக் கண்டுள்ளோம்! இரண்டாயிரம் ஆண்டுகால நீண்ட இடைவெளியில் எவ்வளவு கருவிகள் கண்டுபிடித்திருக்க வேண்டும்? இன்றைய நமது சாதனைகள் என்னென்ன? என்ற ஒப்பீட்டுக் கணக்கையாவது போட்டுப் பார்க்கத் தூண்டும் என்பதே நோக்கம். அக்கணக்கில் அன்றைய நிலையை நோக்க, இவ்வளவு கால இடைவெளியில் இன்று நாம் செய்துள்ளது குறைவுதான் என்ற விடை கிடைப்பது உறுதி. இனியாவது புதுமைகளைக் காண வேண்டும் என்ற உணர்வை இக்கணக்கு நமக்கு நினைவூட்டுமாயின், அதுவே இதன் மூலம் தெரிந்து கொள்வதின் பயனை விளங்கும் என்பதும் திண்ணம்.

# 13. சிற்றூர் முன்னேற்றம்

'குடி உயரக் கோன் உயர்வான்' என்பதுபோல் ஊர் செழிக்க உலகம் செழிக்கும் என்பது நிறைமொழியாகும். ஒரு நாட்டின் முன் னேற்றம் அந்நாட்டிலுள்ள ஊர்களின் முன்னேற்றத்தைப் பொருத்தே அமையும். ஊரும் நாடும் முன்னேற அங்கு வாழும் மக்களே காரண மாவர். ஒரு நாடு நாடாகஇருப்பினும் அல்லது காடாகவோ மேடா கவோ பள்ளமாகவோ இருப்பினும் இருக்கலாம். அதுபற்றிக் கவலைப் பட வேண்டுவதில்லை. அவ்வமைப்புகள் இன்றியமையாதன அல்ல. அவ் வமைப்புகளின் சிறப்பு, சிறப்பின்மைகளால் ஒருநாட்டிற்குப் 'பெரு மையோ சிறுமையோ உண்டாவதில்லை. அங்கு வாழும் மக்கள் நல்லவர் களாக இருப்பார்களாயின், அந்நாடும் ஊரும் நல்லவைகளாகக் கருதப் படும் என்று அருந்தமிழ்ப் புலவர் ஔவையார் கூறுகின்றார்.

நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. புறம்-187

**கல்வி**

மக்கள் நல்லவர்களாக விளங்க அவர்கட்கு இன்றியமையாது தேவைப்படுவது கல்வியே. கல்வி இல்லாமாந்தர் களர் நிலத்திற்கு ஒப்பாவார். களர் நிலத்தில் இட்ட பயிர் பயன் தராததுபோல இக் கல்லாதாரும் நாட்டிற்குப் பயன்படமாட்டார். அதனால் கற்றவர்களை மக்கள் என்றும், கல்லாதவர்களை விலங்குகள் என்றும் வள்ளுவர் கூறுகின்றார்.

விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர். (410)

இருண்ட வீட்டிற்கு விளக்கொளி தேவைப்படுவதுபோல், மனிதனின் வறுமையகன்று வாழ்வு செழிக்க, அறியாமை அகன்று அறிவுத்திறம் பெறக் கல்வி என்னும் விளக்கொளி தேவை. இன்று முதன் முதலில் இவ்விளக்கொளியை ஏற்றி வைக்க வேண்டிய இடம் சிற்றூர்களே. ஊர்களின் முன்னேற்றத்திற்குச் செய்யவேண்டிய இன்றியமையாப் பணியும் இதுவே. இப்பணியே எப்பணிக்கும் முதற்பணியுமாகும். கல்வி என்னும் கண்களைத் திறக்கச் செய்தால்தான் வாழ்க்கை என்னும் பெருவழிச் சாலையில் மக்கள் நடைபோடத் தொடங்குவார்கள். இல்லா விடின் அவர்கள் வாழ்க்கை கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய், வாயிருந்தும் ஊமையராய் வாழவேண்டிய இழிநிலை ஏற்படும்.

வள்ளுவர் காலத்திலும் கல்வியின் இன்றியமையாமையை எடுத்துச் சொல்லவேண்டிய நிலையே இருந்துள்ளது என்பதைக் குறட்பாககளே நமக்கு அறிவிக்கின்றன. கல்வியால் வரும் நன்மையைப் பத்துக் குறட்பாக்களாலும் கல்லாமையால் வரும் தீமையைப் பத்துக் குறட்பாக்களாலும் விளக்கி உள்ளார். கற்க வாய்ப்பில்லாதவர்கள் கற்றவர்கள் கூறும் கருத்துரைகளைக் கேட் டேனும் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைக் கேள்வி என்னும் அதிகாரத்தால் வலியுறுத்துகின்றார். குடிமகனைப் பற்றிக் கூறும்போதும் குடியாள்வோனைப் பற்றிக் கூறும்போதும் அவர்கட்குக் கல்வி இன்றியமையாதது என்பதை நினைவூட்டுகின்றார்.

கல்வி ஒன்றால்தான் மேற்பிறந்தார் கீழ்ப்பிறந்தார் என்ற வேறு பாட்டை நீக்க இயலும். அன்றியும், அவருள் யாவரே ஆயினும் கற்றவரே சிறப்புடையவராகக் கருதப்படுவர். அதனாலன்றோ,

"அன்ன சாலைகள் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறி வித்தல்"

எனக் கல்வியைப் பரப்பும் அறமே, எல்லா அறங்களிலும் தலை சிறந்த அறம் என்று பாரதியார் பாடியுள்ளார். ஆதலின் ஊர் வளர்ச்சிக்கு, சமுதாய முன்னேற்றத்திற்குக் கல்வியைப் பரப்புவது இன்றியமையாததாகும். அக்கல்வியும் வாழ்க்கைக்குப் பயனுடைய கல்வியாக இருத்தல் வேண்டும். கற்பவர் பிழையறக் கற்று, கற்ற வழி நடக்க முற்படவேண்டும்.

**தன்னம்பிக்கை**

மனிதனின் தன்னம்பிக்கையை வளர்ப்பது கல்வியே. இதனைச் செய்ய முடியும், இதனைச் செய்ய முடியாது, இதனைச் செய்து முடிக்க இத்துணை வலிமை வேண்டும் என்ற பகுத்தறியும் அறிவை நல்குவதும் கல்வியே. காலமும் இடமும் பார்த்துச் செய்யும் சிந்தனையைத் தூண்டி, மனிதனைப் பயனுடைய செயல்களைச் செய்யும்படி ஊக்குவிப்பதும் கல்வியே. செய்யும் திறனை அறிந்திருந்தும் கூடச் சிற்சில சமயங்களில் அது பயன்படாமல் போகின்றதாதலின், உலக இயற்கையை அறிந்து செய்யும் ஆற்றலை வளர்ப்பதும் கல்வியே.

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல். (637)

தன்னம்பிக்கையை ஊக்கம் என்றும் மன வலிமை என்றும் கூறுவார் வள்ளுவர். ஊக்கமே ஒருவனுக்குச் சிறந்த செல்வமாகும். மற்றவை களெல்லாம் சிறந்த செல்வங்கள் ஆகமாட்டா.

உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும். (592)

அச்செல்வத்தை வளர்த்துக் கொள்ளாதவர்கள் மனிதர்களுமல்லர்; மரங்களாகவே கருதப்படுவார்கள். ஊக்கம் என்னும் செல்வத்தைப் பெற்றவர்கள் அவ்வூக்கத்திற்கேற்ற உயர்ச்சியைப் பெறுவார்கள். அவர்கள் எத்தகைய செயலையும் செய்து முடிப்பார்கள். இது, செய்தற் கரிய அருமை உடைய செயல், இதனை நாம் செய்ய இயலாது என்ற மலைப்பு அவர்கட்கு வராது. வரினும், அவர்களது முயற்சியே அச் செயலைச் செய்து முடிக்கக் கூடிய தன்னம்பிக்கையை — மனவலிமை யைத்தரும்.

அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும். (611)

ஆதலின், ஊக்கத்தில் ஊற்றெடுத்த ஆற்றல் மிக்கஎண்ணம் செயலாக மலரும். ஊக்கம் உழைப்பாக மாறும்.

**தளராத ஊக்கம்**

ஊக்கம் உழைக்கத் தூண்டும். உழைப்பு அதற்கேற்ற ஊதியத்தை நல்கும். வள்ளுவர் உழைக்கின்றவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கம் ஊட்டுகின்றார். தெய்வத்தால் ஆகாத அரிய செயலாக இருந்தாலும் முயற்சி செய்வோர் அதற்கேற்ற பயனை அடைந்தே தீருவர். ஆதலின், விதி என்றும் பழையவினை என்றும் உழைக்காமல் இருத்தல் கூடாது. விதியாக இருப்பினும் அதனையும் முறியடித்து விடலாம். அதற்கு இன்றியமையாது வேண்டப்படுவது கடும் உழைப்பே.

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர். (620)

உழைப்பில் முதன்மையானது பொருள்களை உற்பத்தி செய்வதே. பொருள் வரும் வழிகளைப் பெருக்கி வளத்தைச் சேர்க்கும் ஆக்கப் பணிகளில் உழைப்பை ஈடுபடுத்துதல் வேண்டும். அப்பொழுதுதான் மனிதன் தனது அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியும்.

**தொடர்ந்த உழைப்பு**

உழைக்க முற்பட்ட ஒருவன் தான் எடுத்துக்கொண்ட செயலுக்கு எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும், தளர்ந்துவிடாமல் இருப்பதோடு, அச்செயலைத் தொடர்ந்து செய்தல் வேண்டும். பெரும்பான்மையோர் செயலைத் தொடங்குவர். இடையில் சோர்ந்து, தளர்ந்து, அச்செயலை முற்றுவிக்காமலேயே விட்டுவிடுவர். இப்படிப்பட்டவர்கள்தாம் உலகில் அதிகமாக இருக்கின்றார்கள். இவர்களால் எச்செயலையும் சரிவரச் செய்தல் இயலாது. இத்தகையவர்களின் வாழ்வில் வெற்றி என்னும் சொல்லுக்கு இடமில்லை. இவர்கள் எதிலும் தோல்வியும், ஏமாற்றமுமே அடைவார்கள். இதனை நன்கு உணர்ந்த வள்ளுவர், தொடர்ந்த உழைப்பு வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றார். எதனையும் சரிவர முற்றுவிக்காமல், தொடங்கித் தொடங்கி இடையில் நிறுத்தி விடுகின்றவர்களை உலகம் கைவிட்டு விடும் என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்கின்றார்.

விணைக்கண் விணைகெடல் ஓம்பல் விணைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு. (612)

ஆதலின் வாழ்வு வளம்பெற, ஊரும் உலகமும் முன்னேற்றம் பெறத் தொடர்ந்த ஊக்கமும், தொடர்ந்த உழைப்பும் மக்களுக்குத் தேவை.

### பழமையும் புதுமையும்

வள்ளுவர், காலத்திற்கேற்பப் புறக்கோட்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடையவர். சீர்திருத்தத்தை வரவேற்கும் இயல்பினர். பழமையாயினும் புதுமையாயினும் எவற்றில் நன்மையுண்டோ அவற்றை மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ணங் கொண்டவர். பழமையே பெரிதென்று போற்றும் பழமைவாதியும் அல்லர். புதுமையே சிறந்தது என்று கூறும் புரட்சியாளரும் அல்லர். பழமையிலும் புதுமையிலும் நன்மையை நாடும் நல்லறிஞர். முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும் பாலம் அமைத்து நல்லன போற்றும் பொதுமையாளர்.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின். (280)

என்று கூறுவதே பல்வேறு நிலைகளிலும், காலத்திற்கேற்ற மாற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவரது மனப்பான்மையை உணர்த்துவதாக உள்ளது. நல்லறிஞர்கள் பழிக்கின்ற செயலை விட்டுவிட்டால், தலைமயிரைச் சிரைத்தலும் சடையாக வளர்த்தலுமாகிய வேடம் கொள்ளுதல் வேண்டாம் என்பதால் பழையன கழிதலும் புதியன புகுதலையும் ஏற்று வளமாக வாழ வேண்டும் என்று வலியுறுத்துவதை அறியலாம்.

### புது முறைகளைக் கையாளல்

மக்கள் சமுதாயம் பல்துறையிலும் முன்னேற வேண்டும் என்பதே வள்ளுவரின் நோக்கம். அம்முன்னேற்றத்திற்கு வழிவகை கூறுவதே குறளின் பணியாகும். முன்னேற்றங்களில் முதன்மையாகக் கருதப்படுவது பொருளாதார முன்னேற்றமே. உடையார், இல்லார் என்ற பாகுபாட்டையும் இரந்து உயிர் வாழும் இழிநிலையையும் வள்ளுவர் வெறுத்துக் கூறியுள்ளார். ஆதலின், ஒரு நாடு, சமயம், பண்பாடு, கலை முதலிய பிற துறைகளில் கரைகண்டதாக இருந்தாலும், பொருளாதாரத்தின் முன்னேற்றமே சிறந்த முன்னேற்றம் என்று கருதப்படுகின்றது. பொருள்

என்று எல்லாராலும் சிறப்பிக்கப்படும் அணையாத விளக்கு, நினைத்த நாட்டிற்குச் சென்று பகையாகிய இருளை அறுக்கும் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

பொருள்என்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று. (753)

என்னும் குறள் பொருளின் ஆற்றலை எடுத்துரைக்கின்றது. ஆதலின் வேளாண்மைத் துறையிலன்றி அதனைச் சார்ந்த பிறதுறைகளிலும் புது முறைகளைக் கையாண்டு குறைந்த உழைப்பில் நிறைந்த பொருளைப் பெற வேண்டும்.

### பொருள் வளம் பெருக்குதல்

பொருளாதாரக் குறைபாட்டினால் மக்களுக்கு ஏற்பட்ட அவல நிலையை அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள். காந்தியடிகள், “ஏழைக்கு ரொட்டித் துண்டு வடிவில் இறைவன் காட்சியளிக்கின்றான்” என்று குறிப்பிட்டுள்ளார். விவேகானந்தர், “என்னுடைய நாட்டில் ஒரு நாய் உணவின்றி இருக்குமானால், எனது கொள்கை, என் மதம், என் ஆன்மா ஆகியவை அதற்கு உணவு கொடுக்கவேண்டும். இல்லையேல் அவற்றை உயர்ந்த மதம் என்றோ, சிறந்த கொள்கை என்றோ, அன்பான இதயம் என்றோ கருதமாட்டேன்” என்று கூறியுள்ளார். நாட்டில் பொருளாதாரவளம் இல்லை என்றால் கடவுளும் மதமும் மற்றவை களும் ரொட்டித் துண்டினும் சிறியவை ஆகிவிடுகின்றன. ஆதலின் பொருளாதார முன்னேற்றம் ஒன்றே ஒரு நாட்டின் முன்னேற்றம் என்று கூறுவிடினும், பொருளாதார முன்னேற்றம் நாட்டிற்கு இன்றி யமையாதது என்பதைப் புறக்கணித்து விடமுடியாது. “உறுபசியைப்” போக்குவதே முதற்பணியாக இருத்தல் வேண்டும் என்பதை வள்ளுவர் வற்புறுத்துகின்றார். இரந்து உயிர் வாழும் நிலை மக்கட்கு என்றும் வருதல் கூடாது என்றும் அந்நிலை வருமாயின் இவ்வுலகைப் படைத்-தவன் அழிந்து ஒழியட்டும் என்றும் கடுமையாகக் கூறுகின்றார்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகு இயற்றி யான். (*1062*)

ஆதலின், மக்கள் பசியைத் தீர்ப்பதே இன்றியமையாத கடமை யாகும். உயிர் வாழ்க்கைக்குத் தேவையான உணவு உடை உறையுளை அமைத்துப் பின். பண்பாட்டை வளர்க்க வேண்டும். அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள மக்களின் அறியாமை மயக்கத்தை அகற்ற வேண்டும். சோம்பலை ஓட்ட வேண்டும். அம்-மாற்றத்தைக் கல்வி என்ற அருமருந்தினால் மட்டுமே செய்ய இயலும்.

அம்மருந்தால் சோர்வை அகற்றலாம்; சுறுசுறுப்பை உண்டாக்கலாம்; தன்னை உணரச் செய்யலாம்; தன்னம்பிக்கையை வளர்க்கலாம்; உழைக்கத் தூண்டலாம்; உற்பத்தியைப் பெருக்கலாம்.

"எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்த லாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ"

என்ற நிலையை உருவாக்கலாம். ஆதலின், கல்வி மலர்ச்சியே சிற்றூர் முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டுவதாகும்.

**சமநிலை மனப்பான்மை**

சமுதாய முன்னேற்றத்திற்கு அடுத்து வேண்டுவது எல்லாரும் ஓர்நிலை, எல்லாரும் ஓர்நிறை என்ற சமநிலை மனப்பான்மையே ஆகும். அத்தகைய மனப்பான்மையை, "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்","யாதும் ஊரே யாவரும் கேளிர்"என்ற இப்பரந்த நோக்கைத் தமிழர்கள் பொதுவிதியாகக் கொண்டிருந்தார்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. என்றாலும், காலப்போக்கில் இனக்கலப்பாலும் மொழிக் கலப்பாலும் வேற்றுவர் படையெடுப்பாலும் பலவிதமான வேறுபாடுகள் தோன்றலாயின. "மேல் பிறந்தார், கீழ்ப் பிறந்தார்" என்ற சாதிப் பாகுபாடும், "மேலோர் கீழோர்" என்ற உயர்வு தாழ்வும் "உடையார் இல்லார்" என்ற பொருளாதார ஏற்றத்தாழ்வும் மக்களிடையே தலை காட்டத் தொடங்கியது. இந்நிலை வள்ளுவர் காலத்திலும் இருந்து வந்துள்ளது என்பதை அவர் வெளிப்படையாகவும் குறிப்பாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆனால், இத்தகைய சமுதாய மேடுபள்ளங்கள் இயல்பானவை என்று அவர் ஏற்றாரில்லை. மாறாக அத்தகைய வேறு பாடுகள் கொள்ளக் கூடாது என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். பிறப்பால் எவ்வித வேறுபாடும் இல்லை. அவரவர் செய்யும் தொழிலின் நன்மை தீமைகளுக்கு ஏற்பவே வேறுபாடுகள் அமையும். எத் தொழிலிலும் அவரவர் கொள்ளும் கடமை உணர்ச்சிக்கு ஏற்பவும் செயல் திறனுக்கு ஏற்பவும் சிறப்பும் சிறப்பின்மையும் உண்டாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல். (505)

**நல்ல தலைமை**

வள்ளுவர், செயல் முறைக்கு ஏற்ப மனிதர்களை வகைப்படுத்திக் கூறியுள்ளார். உலகில் வாழ வேண்டிய முறைப்படி வாழுகின்றவர்கள்

ஆதலின் இவர்கள் தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவர். இவர்கள் மக்களிடத்தில் நடுநிலேயோடு நடந்து கொள்ளுகிருர்கள் ஆதலின் இவர்கள் தலைவர்களாக இருந்து மக்களைக் காக்கும் மாண்புடையவர்கள் ஆவார்கள். பிற உயிர்களையும் தங்களது உயிர் போல் கருதுகின்ருர்கள் ஆதலின் இவர்கள் மக்கள் எனப்போற்றும் தகுதி பெற்றவர்கள். இவர்கள் உயிரோடு இருப்பினும் மக்களின் மாண்பை உணராதவர்கள். ஆதலின், இவர்கள் நடைப்பிணமாகக் கருதப்பட வேண்டியவர்கள். இவர்கள் நல்லறிஞர் கூறும் உண்மையைப் பொய் என்றும் நன்மையைத் தீமை என்றும் கூறும் தீயவர்கள் ஆதலின் இவர்கள் மக்களே அல்ல, 'பேய்' கள் என்று ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என ஐந்துவகையாகப் பாகுபடுத்திக் கூறியுள்ளார். இவ்வகையில் மனிதப்பண்பும் கடமை உணர்வும் கொண்ட நன்மக்கள் தலைமையேற்று மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டும். தானைத்தலைவன் இல்லாப்படை பயனற்றது போலத் தலைவன் இல்லா ஊரும் நாடும் நல்ல வளர்ச்சியினை அடையாது.

## தொழில் வேறுபாடு கருதாமை

செயல்முறையின் நன்மை தீமைகட்கு ஏற்பப் பாகுபாடுகள் காட்டப்படுமே அன்றி மக்களை ஆளும் தொழில் ஆதலின், இது உயர்ந்தது என்றும், மண்ணை உழும் தொழில் ஆதலின் இது இழிந்தது என்றும் கொண்டார்கள் இல்லை.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (972)

என்பது வள்ளுவர் வாக்கு. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கூறிய இக்கருத்தினை இருபதாம் நூற்ருண்டின் இணையற்ற கவிஞராகிய பாரதியார், சந்திகளில் கிடைக்கும் எச்சில் இலைகளைப் பொருக்கி எடுக்கும் எளிய தொழிலாக இருப்பினும், சந்திர மண்டலத்து இயல்பினை ஆராயும் மிக்கு உயர்ந்த தொழிலாக இருப்பினும், தொழில் என்ற அடிப்படையில் உலகத்துத் தொழில்கள் அனைத்தும் ஒரு தன்மை உடையவனே. ஆதலின், அவற்றை உவகையோடு ஏற்றுச் செயல் படுவோம் எனத் தொழிலில் வேறுபாடு இல்லை என்பதைப் போற்றிப் பாடுகின்ருர்.

"சந்திர மண்டிலத்து இயல்கண்டு தெளிவோம்
சந்தித் தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம்
உலகத் தொழில்அனைத்தும் உவந்து செய்வோம்"

ஆதலால், பிறப்பால் சாதிவேறுபாடுகள் இல்லை என்பதும், தொழிலால் உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது என்பதும் தெளிவாகின்றது.)

**தாழ்விலாச் செல்வர்கள்**

நாட்டில் உடையவர்களும் இல்லாதவர்களும் தனித்தனியே பெருகிக் கொண்டே போனால் அது நாட்டிற்குத் தீமையாகவே முடியும். அதை உணர்ந்த வள்ளுவர் "தாழ்விலாச் செல்வர்கள்" பெருக வேண்டும் என்று கூறுகின்றார். ஆற்றல் மிகுந்தவர்களும் வாய்ப்பு உள்ளவர்களும் மிகுந்த பொருளைச் சேர்த்து விடுவார்களாயின் பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வு தோன்றுதல் இயல்பே. பொருள் சேர்த்தவர்கள் பகுத் துண்டு வாழும் பண்பு மிக்கவர்களாக விளங்க வேண்டும். அவர்கள் செல்வம் நடுவூருள் அமைந்திருக்கும் ஊருணியாக, பயன் மரமாக, மருந்து மரமாகப் பயன்பட வேண்டும். உடையவர்கள், இல்லாதவர் களுக்கு உதவிச் சம நிலையை ஏற்படுத்த வேண்டும் ஆதலின் பொருளா-தாரத்தில் தோன்றும் வேறுபாடுகளைக் களைவதும் சமுதாய முன்னேற் றத்திற்கு வழிவகுக்கும் செயலாகும்.

இவ்வாறு சிற்றூர் வளர்ச்சிக்குக் கல்விப்பணியும், ஊக்கமும் உழைப்பும் புதியன போற்றுவதும் நலம் பயப்பதாகும். சமுதாய முன் னேற்றத்திற்குக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட சாதிமத வேறு பாடற்ற சமுதாயத்தை உருவாக்க முயல வேண்டும்; நல்ல தலைமை வேண்டும்; ஆண்களும் பெண்களும் இளைஞர்களும் பங்கு கொள்ள வேண்டும். அத்தகையதொரு சமுதாயத்தை அமைக்கமுடியாத அளவிற்கு வேறுபாடுகள் ஆணிவேராக ஆழப்பதிந்திருந்தாலும், அவற்றைத் தளரா முயற்சியால் போக்குதல் வேண்டும். அவ்வேறுபாடுகளால் தங்களைத் தாங்களே தாழ்வுறுத்திக் கொள்ளாமல், செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு காட்டாமல், தன்னம்பிக்கையும் தொடர்ந்த உழைப்பும் கொண்டு சமுதாய மேம்பாட்டை வளர்க்கப் பாடுபட வேண்டும் என்பதே வள்ளுவர் நோக்கமாகும்.

# 14. வேளாண்மைத் துணைத்தொழில்கள்

வேளாண்மைத் தொழில் ஒரு பெருந்தொழில். பெருந்தொழிலுக்குத் தேவையான பொருள்கள், கருவிகள் ஆகியவைகளை ஆக்கித் தரும் தொழில்கள் அனைத்தும் துணைத் தொழில்களே. அவ்வகையில் வேளாண்மைக்குத் துணையாகவும், சார்பாகவும் செய்யப்படும் தொழில்கள் அனைத்தும் வேளாண்மைத் துணைத்தொழில்கள் எனப்படும். எல்லாரும் உழவுத் தொழிலே செய்ய முற்படுவார்களாயின் உழவுத் தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள். கருவிகள், உழவர்க்கு வேண்டிய வாழ்க்கைப் பொருள்கள் ஆகியவை கிடைக்காமல் துன்புற நேரிடும். அல்லாமலும், உணவுப் பொருள்களைக் கொண்டே வாழ்ந்து விடுதல் என்பதும் முடியாது. அவ்வாறு வாழ்ந்தாலும் அது, மனிதன் விலங்குகளோடு விலங்காக வாழ்ந்து பசியை மட்டுமே போக்கிக் கொண்ட கற்கால வாழ்வாகவே முடியும். ஆதலின், வேளாண்மை என்னும் புனிதப் பெருந்தொழிலுக்குத் தேவையான பல்வகைப் பொருள்களையும் ஆக்கித் தருவதே துணைத் தொழில்களின் தலையாய நோக்கமாகும்.

தொழில் செய்யாது சோம்பி இருப்பவனைக் காணின் நிலம் என்னும் பெண்ணாள் எள்ளி நகையாடுவாள் என வள்ளுவர் கூறுகின்றார். ஒரு பெண் நகையாடும் அளவிற்கு ஓர் ஆண்மகன் இருப்பானேயானால் அவன் ஆண்மகன் அல்லன். "வினையே ஆடவர்க்கு உயிர்" என்ற கொள்கையின் வழிவந்த தமிழ் மக்கள் அவ்வாறு சோம்பி இரார். ஆதலின், வள்ளுவர், பொருளாதார ஏற்றத்திற்குப் பலவகையான தொழில்களையும் சுட்டிக்கூறியுள்ளார். ஒரே தொழிலில் பலர் போட்டி

யிட்டுப் பூசலும் பொறாமையும் கொள்வதைக் காட்டிலும், பலரும் பல தொழில்களில் நாட்டங்கொண்டு அவைகளைச் செய்யலாம் என்பதே வள்ளுவர் கருத்தாகும்.

**வள்ளுவர் குறிப்பிடும் தொழில்கள்**

வள்ளுவர் பல்வகையான தொழில்களையும் குறிப்பிட்டுள்ளார். அவை, குறிப்பாகவும் வெளிப்படையாகவும் உய்த்துணருமாறும் கூறப் பட்டுள்ளன. தச்சுத் தொழில், கொல்லத் தொழில், கயிறு பின்னுதல், பால் நெய் விற்றல், மீன்பிடித்தல், உப்புக்காய்ச்சுதல், கப்பல் கட்டுதல், தேன் எடுத்தல், வேட்டையாடுதல், வாணிகம் செய்தல், ஆடைநெய்தல், பொன் தொழில், மருத்துவத் தொழில், ஆசிரியர் தொழில், வேள்வி செய்தல், வீடு கட்டுதல், மண்பாண்டம் செய்தல், மணிகள் செய்தல் முதலியன வள்ளுவர் காலத்தில் செய்யப்பட்ட தொழில்களில் சிலவாகும்.

**தச்சுத் தொழில்**

மரத்தை மூலப் பொருளாகக் கொண்டு கருவிகள் செய்யும் தொழில் தச்சுத் தொழில் எனப்படும். உழுவதற்கு மரத் தாலான கருவிகள் வேண்டும். அக்கருவிகள் செய்வதையே சிலர் தொழிலாக மேற்கொண்டு இருந்ததை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். உழுவதற்கு ஏரும், இறைப்பதற்கு ஏற்றமும், பொருள்களை எடுத்துச் செல்ல வண்டியும், ஊர்ந்து செல்லத் தேரும், வீடு கட்ட மரச்சாமான்களும், குழந்தைகள் விளையாட மற்றும் கூத்தாட்ட மரப்பொம்மைகளும் இத்தொழிலாளர்கள் செய்துள்ளனர் என்பதை வள்ளுவம் கூறுகின்றது. மர வேலைகள் செய்வதை விரை வாகவும் அழகாகவும் செய்தார்கள் என்பதையும் அறிகின்றோம். ஒரே நாளில் எட்டுத் தேர்களைச் செய்யும் ஆற்றலும், ஒரு திங்கள் முழு-வதும் தேரின் ஒரு காலை மட்டும் செய்யும் தொழில் நுணுக்கமும் உடையவர்களாக வினைஞர்கள் இருந்துள்ளார்கள் என்பதைப் பிற நூல்கள் கூறுகின்றன. இது தச்சுத் தொழிலின் சிறப்பிற்கு ஒரு சான்றாகும்.

**கொல்லத் தொழில்**

இரும்பைக் கொண்டு செய்யும் தொழில் கொல்லத் தொழில் எனப்படும். வண்டிக்கு இன்றியமையாத அச்சும், அவ்வச்சுக்குத் தேவையான ஆணியும், மீன் பிடிக்கத் தூண்டிலும் செய்துள்ளனர்.

தாள் அரிய அரிவாள், மரம் வெட்டக் கோடரி, கிணறு வெட்டக் கணிச்சி, கதவிற்குத் தாழ்ப்பாள் போன்ற இரும்புக் கருவிகளும் செய்யப்பட்டன. இவைகளைச் செய்யும் இடம் "பட்டடை" என்று போற்றப்பட்டது. இச்சொல் இன்று பட்டறை என்று மருவி வழங்குகிறது. இவைகளே அன்றி, அம்பு, வில், வாள், வேல் முதலிய வேட்டைக் கருவிகளும், படைக்கலக் கருவிகளும் உருவாக்கப்பட்டன என்பதை வள்ளுவம் கூறுகின்றது. இக்கருவிகள் செய்யும் கொல்லர்களைக் "கருங்கை வினைஞர்" என்று கூறுவர்.

**கயிறு பின்னுதல்**

உழவுத் தொழிலுக்குக் கயிறுகள் தேவை. கால்நடைகளைக் கட்டி வைப்பதற்கும், ஏற்றம் இறைப்பதற்கும், உழவுக் கருவிகளை ஒன்றோடு ஒன்றை இணைப்பதற்கும், மாடுகளைத் தாம்பில் பூட்டுவதற்கும், அவைகளை உழவுக் கருவிகளில் பூட்டித் தொழில் செய்வதற்கும் கயிறுகள் பயன்படும். இக்கயிறு பின்னலையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்களும் உண்டு என்பதை வள்ளுவர் "கயிறு" என்ற சொற்கொண்டு குறிப்பால் உணர்த்தியுள்ளார். இக்கயிறுகள் பல புரிகள் சேர்த்துச் செய்யப்படுபவையாகும். முப்புரி, ஐம்புரி எனப் பல புரிகளால் பின்னப்படும் பெருங்கயிறுகளும் உண்டு. எத்தகைய வலிமை வாய்ந்த கயிருக இருந்தாலும் நாளடைவில் அது தேய்ந்து அறுந்து விடும். அவ்வாறு அறுந்துவிடும் நிலையில் உள்ள கயிற்றைத் "தேய்புரி பழங்கயிறு" என்பர். கயிறு பின்னும் தொழில் சிறு தொழிலாகப் போற்றப் படுவதை இன்றும் காணலாம்.

**கால்நடைகள் வளர்த்தல்**

கால்நடைகள் வளர்த்தல் மிகச் சிறந்த வேளாண்மைத் துணைத் தொழிலாகும். வள்ளுவர் ஆடு, பசு, எருது முதலாய கால்நடைகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கால்நடைகளின் கழிவுப் பொருள்கள் மிகச் சிறந்த உரமாகக் கருதப்படுகின்றது. வள்ளுவர், 'ஏரினும் நன்றால் எரு விடுதல்' என்பதன் மூலம் எருவிடுதலின் இன்றியமையாமையை விளக்கிக் கூறியுள்ளார்.

கால்நடைகளை வளர்த்துப் பால், நெய் முதலியவைகளை விற்கும் தொழிலிலும் மக்கள் ஈடுபட்டிருந்ததைக் காண்கின்றோம். 'பால் கலந்தீமையால் திரிந்தற்று' என்னும் தொடரால், பால் நன்கலத்தில் காய்ச்சப்படாவிடின் கெடும் என்பதை வெளிப்படையாகவும், பாலைக் காய்ச்சித் தயிராக்கி வெண்ணெய் எடுத்து நெய்யாக்கியதைக் குறிப்பாகவும் வள்ளுவர் உணர்த்துகின்றார். பால் வளம் பெருக்குவதை

இன்று வெண்மைப் புரட்சி என்று கூறுவர்.) இத்தகைய புரட்சி வள்ளுவர் காலத்திலேயே மலர்ச்சி பெற்றிருந்தது என்பதை நன்கு உணரலாம். பெண்கள் பாலும் நெய்யும் விற்று அதற்கு அணிகலன் வாங்கித் தங்களை அழகுபடுத்திக் கொள்ளாமல், மீண்டும் கால்நடை களையே வாங்கிக் கால்நடைச் செல்வத்தைப் பெருக்கினார்கள் என்பதும் கருதத் தக்கது.

**மீன்பிடித்தல்**

வேளாண்மைக்குத் துணையாய தொழில்களே அன்றி வேளாண் மைச் சார்புடைய தொழில்களைப் பற்றியும் வள்ளுவர் குறிப்பிட் டுள்ளார். அவைகளுள் ஒன்று மீன் வளர்த்தல். நீர் நிலைகளில் மீன் வளர்த்தல், பிடித்தல், விற்றல் ஆகிய செயல்கள் பொருள் வருவாய்க் குரிய ஒன்றே. பிடித்த மீன்கள் அன்றே விற்பனை ஆகவில்லை எனின் அதனை உலரவைத்துப் பின்னர் விற்றனர் என்பதையும் அறிகின்றோம். இத்தொழில் பெரும்பான்மையும் உழைப்பையே முதலாகக் கொண்டு செய்து வந்த தொழிலாகும்.

**உப்புக் காய்ச்சுதல்**

கடலோரப் பகுதியில் வாழும் மக்கள் உப்புக் காய்ச்சுவதை ஒரு தொழிலாகக் கொண்டிருந்தனர் என்பதை வள்ளுவர் குறிப்பாக உணர்த்துகின்றார். உப்பு மூட்டைகளை ஏற்றிக்கொண்டு வெளியூர்கட்குச் சென்று விற்றார்கள் என்பதையும் அறிகின்றோம். உணவுக்கு உப்புப் போல இன்ப வாழ்விற்கு ஊடல் வேண்டும். அளவான உப்பு, உணவுக்குச் சுவை கூட்டுவது போல அளவான ஊடல் இன்பத்தை மிகுவிக்கும். உப்பு மிகுதி உணவைக் கெடுப்பது போல ஊடல் மிகுவது இன்பத்தைக் கெடுக்கும் என்பது வள்ளுவர் வாக்கு.

*உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது*
*மிக்கற்றால் நீள விடல்.* (1302)

உப்பைக் குறிப்பிடுவதன் மூலம் வள்ளுவர் உப்புக் காய்ச்சும் தொழிலையும் நினைவுறுத்துகின்றார்.

**கப்பல் கட்டுதல்**

புணை, தோணி முதலியன கட்டும் தொழிலிலும் மக்கள் ஈடுபட்டு இருந்தமையை வள்ளுவம் தெரிவிக்கின்றது. இச் சிறுதொழில்களே

அன்றிக்கப்பல் கட்டுவதிலும் தமிழர்கள் வல்லவர்கள் என்பதையும் அறிகின்றோம். தமிழர்கள் கடல்கடந்து சென்று வாணிகம் செய்தார்கள் என்பது வரலாற்று உண்மை. ஆதலின் கடல் வாணிகத்தின் உண்மையும் மக்களில் சிலர் கப்பல் கட்டும் தொழிலில் ஈடுபட்டு இருந்ததையும் திருக்குறள் கொண்டு அறிய முடிகின்றது.

### தேன் எடுத்தல்

(குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் தேன் எடுக்கும் தொழிலைச் செய்தார்கள் என்பதை வள்ளுவர் கூறுகின்றார். அதிகச் சுவையை விரும்பிப் பாலில் தேன் கலந்து பருகுதல் வழக்கம் என்பதை "பாலொடு தேன்கலந் தற்றே" என்னும் குறள் தொடரால் அறியலாம்.)

### வேட்டையாடுதல்

மலை சூழ்ந்த பகுதிகளிலும் காடுகள் அடர்ந்த பகுதிகளிலும் வாழும் மக்கள் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். யானை போன்ற பெருவிலங்குகளைப் பிடித்தல், முயல், மான் முதலிய வைகளை அம்பு எய்து கொல்லல், பறவைகளை வலையுள் அகப்படுத்திப் பிடித்தல், மலைப்பகுதிகளிலிருந்து கிடைத்தற்கரிய மரப்பட்டைகள், மருந்துச் செடிகள் முதலியவற்றை மக்கள் வாழும் பகுதிகளில் கொண்டு சென்று விற்றல் ஆகியவைகளைத் தொழிலாகச் செய்து வந்துள்ளனர். முயல் வேட்டைக்குச் சென்று வெற்றி பெறுவதைவிட யானை வேட்டைக்குச் சென்று தோல்வியடைவது சிறப்பு என்பது வள்ளுவர் கருத்து. உயர்ந்த குறிக்கோளுடன் வாழச் சிறிய காரியங்களிலே முயன்று வெற்றி பெறுவதைவிடப் பெரிய காரியங்களிலே முயன்று தோல்வியை ஏற்க நேரினும் அது சிறப்பு உடையது ஆகும்.

### நெய்தல்

உழவுத் தொழிலுக்கே அன்றி மக்கள் இனத்திற்கே தேவையான பொருள்களை ஆக்கும் தொழிலிலும் சிலர் ஈடுபட்டிருந்தனர். அவற்றுள் ஒன்று ஆடை நெய்தல். வள்ளுவர் நெய்தல் தொழில் செய்தவர் என்று கூறுவதும் உண்டு. ஆடையை 'உடுக்கை' என்றும் 'உடை' என்றும் 'மடி' என்றும் கூறியுள்ளார். மகளிர் அணியும் ஆடையைத் 'துகில்' என்று வேறுபடுத்திக் காட்டியுள்ளது ஆராயத்தக்கது. பொருள்களை மூடிவைக்கப் பயன்படுத்தும் துணியைப் 'படாம்' என்பர். பெண்கள் நூல் நூற்ற செய்தியையும் அறிகின்றோம். இன்றும் நூல் நூற்பது சிறு தொழிலாகக் கொள்ளப்பட்டிருப்பதை நாட்டில் பல

பகுதிகளிலும் காணலாம். இதனால் நூற்றல் தொழிலும் நூலிலிருந்து வண்ண வண்ண ஆடைகள், பல்வேறு கரைகளையுடைய ஆடைகள், பாலாவியன்ன ஆடைகள், பல்வேறு அமைப்புக்கொண்ட ஆடைகள் முதலியன நெய்யப்பட்டன என்பதையும் அறியலாம்.

## பொன் தொழில்

பொன்னாலாகிய அழகிய அணிகலன்களைச் செய்யும் தொழிலையும் ஒரு சாரார் மேற்கொண்டு இருந்தனர். பெண்கள் காது-களில் கனமான 'குழையும்', கையில் 'வளையும்' (ஒண்தொடி), தோளில் 'தொடியும்' அணிந்திருந்ததை வள்ளுவர் கூறுகின்றார். பொன்னின் தரம் காண அதனை உரைத்துப் பார்ப்பர். அக்கல்லை உரைகல் என்று கூறுவர். வள்ளுவர் அதனைக் 'கட்டளைக்கல்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். பொன்னும் மணியும் முத்தும் கொண்டு அழகிய வேலைப்பாடு அமைந்த அணிகலன்கள் செய்து அணிந்ததையும் அறிகின்றோம். பெண்களுக்கு மங்கல அணியாக விளங்குகின்ற 'தாலி' பொன்னால் செய்யப்படுவதொன்றாகும். வீரர்கள் 'வீரக் கழல்' அணியும் வழக்கத்தை மேற்கொண்டிருந்ததையும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு பொன் தொழில் பெருமை பெற்று விளங்கியதை நன்கு அறியலாம். மக்கள் பொன் அணிகளை மிகவும் பாதுகாத்து வைத்திருந்தனர் என்பதை வள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

"பொன்போல் பொதிந்து" (*155*)

## வாணிகம்

(வாணிகம் செய்வதற்கு முதலீடு தேவை. முதல் போட்டுச் செய்யாத வாணிகத்தால் அதிக ஊதியம் பெற முடியாது என்பது வள்ளுவர் கருத்து. வணிகர்கள், சிறு ஊதியத்தைக் கருதித் தங்களின் முதற் பொருளை இழந்து விடுகின்ற தொழில்களைச் செய்தல் கூடாது என்றும் எச்சரிக்கை செய்கின்றார். வணிகர்களுக்கு இன்றியமையாத துலாக்கோலைச் "சமன்செய்து சீர்தூக்கும் கோல்" என்று குறிப்பிட்டுள்ளார். பொருள்களை வாங்கிவிற்கும் முறையும் காணப்படுகின்றது. இக்கருத்துக்கள் அனைத்தும் வணிகர்களுக்குரிய இலக்-கணங்களாக ஏற்றுப் போற்றப்படவேண்டிய நன்மணிகளாகும்.)

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (*120*)

**மருத்துவம்**

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். அக்குறைவற்ற செல்வத்தை நிலைபேறு உடையதாகச் செய்ய மருத்துவர்கள் பலர் பணிபுரிந்தார்கள் என்பதை வள்ளுவர் கூறுகின்றார். மருத்துவர்கள் நோயையும், அதன் காரணத்தையும், அதனைப் போக்கும் வகையினையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் என்றும் நோயாளியின் நிலை, நோயின் அளவு, அந்நோயைப் போக்குதற்குரிய காலம் ஆகியவைகளை எண்ணிச் செய்ய வேண்டும் என்றும் விதிமுறைகளை வகுத்துள்ளார் வள்ளுவர்.

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். (948)

உற்றான் அளவும் பிணியளவும் காலமும்
கற்றான் கருதிச் செயல். (949)

இவ்விதிமுறைகள் இன்றைய மருத்துவர்களாலும் போற்றி ஒழுகப்பட வேண்டிய அரிய கருத்துக்களாகும். "மருத்துவன் தாமோதரனார்" என்ற பெயர் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றது. மருத்துவர்கள் கவிபாடும் ஆற்றலும் பெற்றிருந்தனர் என்பதை அவரது அடைமொழி விளக்குகின்றது. ஆதலின் அக்காலத்தில் மருத்துவத்தொழில் சிறப்புற்று விளங்கியது என்பதை அறிய முடிகின்றது.

**கற்பித்தல்**

எல்லா வகையான தொழில்களையும் கற்றுக்கொண்ட பிறகே அதனைச் செம்மையாகச் செய்ய இயலும். கலை மற்றும் தொழில் கல்விக் கூடங்களும், கற்பிக்கும் ஆசிரியர்களும் இருந்தார்கள் என்பதை வள்ளுவர் விளக்கியுள்ளார். செல்வம் உடையவர்கள் முன் செல்வம் இல்லாதவர்கள் பணிந்து நின்று பொருள் பெறுவதைப் போலக் கல்வி கற்பவர்கள் பணிந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்பது வற்புறுத்தப் படுகின்றது.

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். (395)

கல்வியே உயர்ந்த செல்வம் ஆதலின் அதனை ஒவ்வொருவரும் பெற வேண்டும் என்றும் அவ்வாறு பெறாதவர்கள் விலங்காகக் கருதப்படுவர்

என்றும் எடுத்துரைக்கின்றார். வள்ளுவர் காலத்துக் கல்விமுறை குருகுலமுறை ஆதலின், ஆசான் சொன்னவைகளை அமைவுறக் கேட்டும், அவர்க்கு மிகு பொருள் கொடுத்தும், உற்ற உதவிகளைச் செய்தும் வழிபட்டும் கற்றதை அறிகின்றோம். மேலும், மேற்கூறிய தொழில்களே யன்றி வீடு கட்டுதல், மண்பாண்டம் செய்தல், பறை அறைதல் முதலிய தொழில்கள் நடைபெற்றதையும் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு, வேளாண்மைக்குத் துணையான தொழில்களும், சார்பான தொழில்களும், மக்கள் வாழ்விற்கு அடிப்படையானவைகளை ஆக்குதலும் ஆகிய பல்வேறு தொழில்களைச் செய்து பொருள் வளத்தோடு வாழ்ந்ததை வள்ளுவர் கூறுகின்றார்.

# 15. கூட்டுறவு

"எறும்பின் சுறுசுறுப்பும், எருதின் உழைப்பும், நரியின் தந்திரமும், நாயின் விசுவாசமும், கழுதையின் பொறுமையும், காகத்தின் கூட்டுறவும், புறுவின் ஒழுக்கமும், சிங்கத்தின் நடையும். யானையின் அறிவும், மானின் வாழ்வும் மக்களுக்குத் தேவை" — கி. ஆ. பெ. வி.

திருவள்ளுவர் சமுதாய அமைப்புகள் பற்றியும் அவ்வமைப்புகளின் மேம்பாட்டிற்கான அரிய திட்டங்கள் பற்றியும் வகுத்துரைத்துள்ளார். கூட்டுறவு மனப்பான்மை மனித குலத்தைக் காட்டிலும் பறவை இனத்தில் அதிகம் இருப்பதைக் கண்டவர் திருவள்ளுவர். பறவைகளிலும் காக்கை இனத்திற்கே கூடிவாழும் பண்பு சிறப்புடையதாகும். சில பறவைகளைச் சில பகுதிகளில்தான் காணமுடியும். ஆனல் காக்கை இனத்தைப் பெரும்பான்மையான பகுதிகளில் காணலாம். நில வரையறையில்லாத, எந்நிலத்திற்கும் பொதுவான பறவை காக்கை. "போட்டியும் பூசலும் பொறாமை மனப்பான்மையும் கொண்ட மக்களே! எங்களைப் பார்த்தேனும் திருந்தி ஒன்றுபட்டு வாழுங்கள்" என்று அறிவுறுத்துவது போல அவைகள் எங்ஙனும் பறந்து திரிகின்றன.

எங்கேனும் சிறிது உணவு கிடைத்தாலும் கரைந்து கரைந்து தனது இனத்தை அழைக்கும். மனிதர்களைப் போல் கிடைத்ததை மறைத்து வைத்துத் தான்மட்டும் உண்ணும் வழக்கம் அவற்றிற்கு இல்லை. எல்லாம் ஒன்று கூடும். உறவு கொண்டு கிடைத்ததை மகிழ்ச்சியோடு உண்ணும். பகுத்துண்டு வாழும் அப்பறவை இனத்தைப் பார்த்து நமக்கு அப்பண்பு வரவேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார் வள்ளுவர்.

காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. (527)

காக்கையைப் போல் இனந்தழுவி வாழும் மனப்பான்மை உள்ளவர்களே மக்கள் சமுதாயத்தில் அடையக்கூடிய நன்மைகளை அடைய முடியும் என்பது அக்குறளின் கருத்தாகும். தாயுமானவ அடிகளும் "காகம் உறவு கலந்துண்ணக் கண்டீர்" எனக் காக்கையின் கூட்டுறவை நினைவூட்டியமை இங்குக் கருதத்தக்கது. ஆதலின் காக்கையின் வாழ்க்கை கூட்டுறவுக்கு ஒரு விளக்கமாக அமைந்துள்ளதை அறியலாம்.

இன்று கூட்டுறவு என்பதற்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் கூறப்படுகின்றது. "கூட்டுறவு என்பது ஒன்று கூடிச் செயலாற்றுதல் அல்லது ஒன்றுபட்ட முயற்சியில் ஈடுபடுதல் என்று பொருள்படும். இது எளிய மக்களின் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்கமாகும்". இதன் நடைமுறை எவ்வாறு இருப்பினும் இதன் குறிக்கோள் எளிய மக்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதே. இன்றைய நிலையினும் மேம்பட்ட நிலையில் தனிமனிதன் அன்றே இவ்வியக்கத்தினை ஏற்று நடத்தியதை வள்ளுவர் தெளிவுபடுத்துகின்றார்.

அக்காலத்தில் நாணய வழக்குப் பெரும்பாலும் இல்லை. அதற்குப் பதிலாகத் தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்து, அதற்கு ஈடாகத் தனக்கு வேண்டிய பொருளைப் பெறுவதே முறையாக இருந்தது. அதனைப் பண்டமாற்று என்ற சொல்லால் குறிப்பிட்டனர். நாள் செல்லச் செல்ல அவரவர்கட்குத் தேவையான பொருள்களைத்தேடிச் செல்வதிலும், தேவைக்கு மிகுந்த பொருள்களைத் தங்களிடம் வைத்துக் கொண்டிருப்பதிலும் சில சிக்கல்கள் தோன்றலாயின. அதனால் அச்செயலை ஏற்று நடத்த ஒருசிலர் முன்வந்தனர்; செம்மையாக ஏற்று நடத்தினர். நாளடைவில் அவர்கட்கு அதுவே தொழிலாகவும் அமைந்து விட்டது. மக்களிடம் தேவைக்கு மிகுதியாக இருக்கும் பொருள்களை வாங்கி, தேவைப்படுகின்றவர்களுக்கு அப்பொருள்களைக் கொடுத்தனர். பொருள்களை வாங்கும்போதும் விற்கும்போதும் ஒரு சீரான நிலையை ஏற்படுத்திக் கொண்டனர்.

"தமவும் பிறவும் ஒப்ப நாடி
கொள்வதூஉம் மிகைகொளாது
கொடுப்பதூஉம் குறைகொடாது"

- பட்டினப்பாலை : 205—7

செயல்பட வேண்டும் என்பதை வரையறைச் சட்டமாக அமைத்துக் கொண்டனர். இச்செயலை நடத்தியவர்கள் நடுநிலையிலிருந்து தவறாத நல்ல நெஞ்சம் உடையவர்களாக இருந்தனர். நாளடைவில் இதற்கு வாணிகம் என்ற பெயர் அமையலாயிற்று. வள்ளுவர் இதனை வாணிகம் என்றே கூறுகின்றார். பிறருடைய பொருள்களையும் தங்களுடைய பொருள்கள் போல் கருதிக் கொடுப்பதும் வாங்குவதும் செய்ய வேண்டும். அதுவே வாணிகம் செய்வார்க்கு அழகாகும் என்று வாணிகத்திற்கு இலக்கணமும் கூறியுள்ளார்.

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். (120)

அவ்விலக்கணத்தையும் நடுவு நிலைமை என்ற அதிகாரத்துள் கூறியுள்ளது ஒரு சிறப்பாகும். இன்றும் கூட்டுறவில் உள்ளவர்கள் நடுவு நிலைமை உடையவர்களாக இருக்க வேண்டும் என்பது அடிப்படைக்கருத்தாக உள்ளது.

இது கூட்டுறவு அமைப்புக்கும் செயல் முறைகட்கும் வேறுபட்டது போலத் தோன்றினும் அடையக் கூடிய நன்மையில் எவ்வித வேறுபாடும் இல்லை என்பதை அறியலாம். இது கூட்டுறவு வளர்ச்சியில் முதற்படியாகும்.

## தனிமனித வாழ்வில் கூட்டுறவு

இக்கூட்டுறவைத் தனிமனித வாழ்வின் அடிப்படையிலும், சமூக அடிப்படையிலும் சமுதாய அடிப்படையிலும் ஆக முத்திறக் கூறுகளாகப் பிரிவு செய்து பார்க்கின் பண்டைய மக்களிடையே இருந்த கூட்டுறவு மனப்பான்மை தெற்றென விளங்கும். (தனி மனிதன், தன் குடும்ப நிலையைப் பொருளாலும் புகழாலும் உயர்த்த அரிய முயற்சிகளை மேற்கொண்டு இருந்தான் என்பதை வள்ளுவர் தெளிவுபடக் கூறுகின்றார். நல்ல ஆண்மகனுக்கு அழகாவது, தனது குடும்பத்தை உயர்த்தப் பாடுபடுவதாகும்.

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். (1026)

இதற்கு உரை வகுத்த பரிமேலழகர் தான் பிறந்த குடியை உயர்த்த உழவுதான் ஏற்ற தொழில் என்பதைக் குறிப்பிட்டுள்ளார். ஆதலின் தனி மனிதன் தன் குடும்ப நிலையை உயர்த்த உழவு அல்லது உழைப்புக்கு வாய்ப்புள்ள நல்ல தொழிலைச் செய்து பொருள் சேர்க்கின்றான்.)

சேர்க்கும் பொருள்கள் அவனிடம் குவிகின்றன. அப்பொருள்களில் அவன் துய்த்தது போக எஞ்சியவற்றை இரண்டு வகையில் பயன் படுத்துகின்றான். ஒன்று வறியவர்க்கு ஈவது; வேறொன்று மற்ற வர்க்குக் கொடுப்பது. அஃதாவது பிறர்க்கு ஒரு பொருள் இல்லாத பொழுது தன்னிடம் அப்பொருள் இருக்குமானால் அதனைக் கொடுத்து உதவுவது. தனக்கு வேறு ஒரு காலத்தில் அப்பொருள் தேவைப்படு மானாலும் அல்லது வேறு பொருள் தேவைப்படுமானாலும் முன்பு உதவியவர்களிடமிருந்து அப்பொருள்களைத் திரும்பப் பெறுவது. இது தனி மனிதன் தன் அருகில் வாழ்கின்றவர்களோடு கொண்ட கூட்டுறவு முறையாகும். இருக்கின்றவர்கள் இல்லாதவர்களுக்குத் தேவைப்படு கின்ற காலத்தில் கொடுத்துப் பெறுவதுதான் கூட்டுறவின் அடிப்படைக் கருத்தாக உள்ளது என்பதை இன்றைய நிலையோடு ஒப்பிட்டுத் தெளியலாம்.

வறியார்க்குஒன்று ஈவதே ஈகைமற்று எல்லாம்
குறிஎதிர்ப்பை நீரது உடைத்து. (221)

குறி எதிர்ப்பு என்னும் சொல்லுக்கு "அளவு குறித்து வாங்கி அவ்வாங்கியவாறே எதிர் கொடுப்பது" என்பது பொருளாகும். இக்கூட்டுறவு முறையினையே வள்ளுவர் 'குறி எதிர்ப்பு' என்ற சொல்லால் குறிக்கின்றார். ஆதலின் தனிமனித வாழ்வில் இவ்வளவில் கூட்டுறவு இயங்கத் தொடங்கியது எனலாம்.

**சமூக அடிப்படையில் கூட்டுறவு**

பல குடும்பங்கள் சேர்ந்தது ஒரு சமூகம். சமூகத்தை 'இனம்' என்ற சொல்லால் குறிக்கின்றார் வள்ளுவர். பல சமூகங்கள் சேர்ந்த அமைப்பு சமுதாயம் எனப்படும். ஒருவருக்கொருவர் கொடுத்துப் பெறுவதாகிய குடும்ப அளவில் கூட்டுறவு வளர்ந்ததுபோல, சமூக அளவிலும் ஒருவருக்கொருவர் கூட்டுறவு மனப்பான்மையோடு தொடர்பு கொண்டிருந்தனர் என்பதை அறியலாம். இனம் என்பது தொழில் அடிப்படையில் தோன்றிய ஒரு பாகுபாடாகும். உழவுத் தொழில் செய்வார், வாணிகம் செய்வார் என்ற பாகுபாட்டைக் குறிக்க உழ வினம், வணிக இனம் என்ற பெயர்கள் தோன்றலாயின. தொழில் வகையில் ஒருவருக்குஒருவர் உதவ அவ்வினமே பயன்படும். வள்ளுவர் பல இடங்களில் இனம் என்ற சொல்லை ஆளுகின்றார். உழவர் ஒருவர்க்கு உழவுக் கருவிகளோ வித்துக்களோ தேவை எனின் வேறோர் உழவ ரிடமிருந்து பெற முடியும். வணிகர்க்குத் தேவையான ஒரு துலாக்

கோலை வேறோர் வணிகரிடமிருந்து பெற முடியும். இவ்வாறு பல்தொழில் செய்வாரும் ஓர் ஊரில் வாழ்வார்களேயானால் அவ்வூரே ஒரு கூட்டுறவு நிலையமாகச் செயல்படுவதை அறியலாம்.

இன்னாது இனன்இல்ஊர் வாழ்தல் அதனினும்
இன்னாது இனியார்ப் பிரிவு. (1158)

எனும் குறள் இக்கருத்தினை விளக்குவதாக உள்ளது. தனது தொழிலைச் செய்யும் இனம் இல்லாத ஊரில் வாழ்வதும், தம்மோடு நட்புக்கொண்டவரைப் பிரிந்து இருப்பதும் துன்பமாக முடியும் என்று வள்ளுவர் கூறுகின்றார். இனம் உள்ள ஊரில் வாழ்வது நன்மையைத் தரும் என்பதை "இனநலம் எல்லாப் புகழும் தரும்" என்ற குறள் தொடரால் விளக்குகின்றார். இதனால் தேவைப்படுவோர்க்குப் பொருளும், மிகுந்து இருப்போர்க்கு அதனைப் பயன்படுத்தும் வாய்ப்பும், அதனால் மேலும் பொருட்களைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வமும் தோன்றுவதற்கு இடனாகின்றது. எளியவர்கள் பொருள் தட்டுப்பாடு இல்லாது தங்கள் தொழிலைச் செய்து வருவாயைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்பாகவும் உள்ளது. ஒருவருக்கு ஒருவர் கொடுத்துப் பெறும் சிறிய அளவில் அல்லாமல் ஓரினம் அவ்வினத்தில் உள்ள மற்றவர்க்குக் கொடுத்துப் பெறும் இன அடிப்படையில் கூட்டுறவு மனப்பான்மை பெருகி வளர்ந்துள்ளது என்பதை அறியலாம். இத்தகைய சமூகத்தில் இன ஒற்றுமையோடு வாழ அன்பும் பண்பும் இன்றியமையாதவை என்றும் அல்லாத இனம் இனத்தைச் சுட்டுவிடும் என்றும் வள்ளுவர் வற்புறுத்தி இருக்கிறார். இதனால் சமூகக் கூட்டுறவின் சிறப்பு நமக்கு நன்கு விளங்கும்.

மேலும் குழு, கழகம், அவை எனப்பலர் கூடிச் செயல்படும் பொதுச் சொற்களை வள்ளுவர் கையாண்டுள்ளார். சொற்கள் கையாளப்பட்ட இடம் மாறுபட்ட பொருளைத் தருவதாக இருப்பினும் மக்கள் ஒன்றுகூடிச் செயலாற்றும் நிலை இருந்ததென்பதை அச்சொற்கள் அறிவிக்கின்றன. முதலில் நன்மை செய்யத் தோன்றிய குழுவும் கழகமும் பின்னர் தீமைக்கும் இடங்கொடுத்திருக்கக் கூடும். எனினும், கூட்டுமுயற்சிகள் இருந்தன என்பதற்கு இவை சான்றாகின்றன. அன்றியும் மன்று, அரங்கு, அவை போன்ற பொது இடங்களைக் குறிக்கும் சொற்களும் திருக்குறளில் உள்ளன. ஆதலின் தொழில் முறையிலன்றிக் கலை, பண்பாடு முதலிய பலவற்றிலும் கூட்டு அமைப்புகள் இருந்தன என்பதும், அவற்றின் துணை கொண்டு தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ள மக்கள் முயன்றார்கள் என்பதும் வெளிப்படையாகும்.

**சமுதாய அளவில்**

பல சமூகங்கள் சேர்ந்தது சமுதாயம். சமுதாயம் என்பது ஒரு பெரிய அமைப்பாகும். அச்சொல் குறிக்கப்படும் இடத்தைப் பொருத்து அதன் பெருமை விளங்கும். தமிழ்ச் சமுதாயம் என்பது உலகெங்கிலும் தமிழ் பேசுகின்ற 7 கோடி தமிழ் மக்களைக் குறிக்கும். இந்தியச் சமுதாயம் என்பது இந்தியாவிலுள்ள 55 கோடி மக்களைக் குறிக்கும். மக்கள் சமுதாயம் என்பது உலகெங்கிலும் உள்ள 200 கோடிக்கும் மேற்பட்ட உலக மக்களை உணர்த்துவதாகும். இவ்வாறு சமுதாயம் என்பது ஒரு பெரும் அமைப்பாகும். வள்ளுவர் காலத்தில் சமுதாய அளவிலும் கூட்டுறவுக் கொள்கைகள் நடைமுறையில் இருந்து வந்ததை நன்கு உணரலாம். அப்பெருஞ் சமுதாய அமைப்பின் தலைவருக்கு அந்நாளில் மன்னன் என்று பெயர். அத்தலைவர் மக்களின் பொருள் வருவாயைப் பெருக்க வேண்டும் என்பதிலும், எல்லாரும் எல்லா நலன்களையும் அடைந்து இன்புற்று இருக்க வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். நாட்டில் குறைவற்ற விளையுள், பிறபொருள்களின் ஆக்கம் ஆகியவைகளைப் பெருக்குவதிலும், பெருக்கு வதற்குரிய மூலப் பொருள்களைக் கொடுப்பதிலும் அத்தலைவர் முனைந்து இருந்தார் என்பதை வள்ளுவம் தெளிவுபடுத்துகின்றது. விளைந்த பொருள்களில், விளைவித்தவர்க்குப் போக எஞ்சியவற்றைத் தொகுத்து வைப்பதும், அத்தலைவரின் கடமையாக இருந்தது. ஆதலின் அவைகளை ஈட்டுவதிலும் முனைப்பாக இருந்து ஈட்டியுள்ளார் என்பதையும் அறிகின்றோம். எங்கு, எப்பொருள் மிகுந்து இருக் கின்றதோ, அங்கெல்லாம் சென்று அவற்றைத் தொகுத்து ஒன்று சேர்த்தனர். தானிய மணிகளைக் "களஞ்சியத்தில்" குவித்து வைத் தனர். பிற பொருள்களைப் பண்டகசாலையில் இட்டு வைத்தனர்.

இயற்றியதை ஈட்டுவதோடு மட்டும் நின்றுவிடுவதில்லை, அத் தலைவரின் கடமை. அதைப் பாதுகாப்பதும் அவரது பொறுப்பாக இருந்தது. கள்வர்கள் கொண்டு செல்லாமல், கயவர்கள் ஏமாற்றாமல், பொருள்களில் பழுது நேராமல் கண்ணெனக் காத்து வந்தனர். இன்று அரசு கிடங்குகளில் பொருள்களைச் சேர்த்து வைத்திருப்பது போல் அன்று அரண்மனைக் களஞ்சியங்களில் மக்கள் நலனுக்காகப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டன. இவ்வாறு பாதுகாத்து வைக்கப்பட்ட பொருள்கள் மக்களால் உழைத்து உருவாக்கப்பட்ட பொருள்களாதலின் அதனை மக்களுக்கே வழங்கி வந்தனர். மக்கட்குத் தேவை ஏற்பட்ட போதெல்லாம் களஞ்சியத்திலிருந்து நெல் கிடைத்து

வந்தது; மற்ற மற்றப் பொருள்களும் கிடைத்தன. மக்கள் உழைப்பை ஓரிடத்தில் சேர்த்து வைத்துப்பின் அவர்கட்குத் தேவைப்பட்ட போதெல்லாம் உணவுக்கு வேண்டிய தானியங்களையும், உழவுக்கு வேண்டிய பொருள்களையும் வழங்கி வந்தனர். மக்கள் கேட்காமலேயே தலைவர்கள் மக்கள் நலனுக்காகப் பொருள்களைப் பகிர்ந்து கொடுத்தனர். அவரவர்கள் உழைப்பு அவரவர்க்கே அமைந்தது. உழவுத் தொழிலுக்கு வேண்டிய அறிவு, ஆற்றல், அனுபவம் அனைத்தும் அனுபவக் கூட்டுறவு முறையிலே இருந்தன. ஒவ்வொரு சிற்றூரும் ஒரு வேளாண்மைக் கல்லூரியாகத் திகழ்ந்தது. இங்கே சுரண்டல் இல்லை, ஏமாற்று இல்லை, எவ்விதக் குறைபாடும் இல்லை. தேவையான போது பொருளுக்கு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலையில், விலையின்றி அவர்கள் பொருளே அவர்கட்குக் கிடைக்கின்றது. இது மிகப்பெரிய ஊதியமாகும். கூட்டுறவின் கொள்கை, உழைப்பின் பயன் உழைத்தவர்கள் பெறவேண்டும் என்பதே. இக்கொள்கை இங்கு நிறைவேற்றப் படுகின்றது எனின் இதுவும் ஒரு கூட்டுறவு இயக்கமே ஆகும். மன்னன் என்றும் மக்கள் என்றும் இருந்த பெயர் மாறித் தலைவர் என்றும் உறுப்பினர் என்றும் புதுப் பெயர்களால் அழைக்கப்படுகின்றார்களே அன்றி, கொள்கை அளவில் இரண்டும் ஒன்றே. இதை வள்ளுவர் ஒரு அரசின் கடமையாக வற்புறுத்துகின்றார். ஒவ்வொரு கூட்டுறவு இயக்கமும் ஒருவகையில் தனியரசாகத் திகழ்கின்றது என்பதை இன்றுங் காணலாம்.

> இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
> வகுத்தலும் வல்லது அரசு. (385)

என்று வள்ளுவர் கூட்டுறவுக் கொள்கைகளை வகுத்துரைக்கும் பாங்கு கூட்டுறவு இயக்கங்களும் பின்பற்றக் கூடிய கொள்கைகளாக இருக்கின்றன.

**சிக்கனம்**

மக்கள் வாழ்வில் வெற்றி பெறப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண வேண்டும். பொருள்களைப் பெருக்குவதாலும் ஒன்று சேர்ப்பதாலும் பகிர்ந்து கொள்வதாலும் மட்டுமே பொருளாதாரத்தில் முன்னேற்றம் கண்டுவிட முடியாது. பொருள்களைச் சிக்கனமாகக் கையாள்வதிலும், சேமித்து வைப்பதாலுமே முன்னேற்றம் காண முடியும் என்பதை வள்ளுவர் தெளிவு படுத்துகின்றார். பொருள்கள் வருகின்ற

வழி சிறியதாக இருப்பினும் தவறில்லை; ஆனால், பொருள்கள் போகின்ற வழி பெரியதாக இருக்கக் கூடாது என்பது வள்ளுவர் கருத்தாகும்.

*ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை*
*போகுஆறு அகலாக் கடை.* (478)

இதிலிருந்து வருவாய் குறைந்த போது நாம் கவலைப்படாதிருக்கச் செலவை குறைத்துக் கொள்வதே ஒரு சிறந்த வழி என்று அறிய முடிகிறது. தம்முடைய பொருள்களின் அளவறிந்து வாழாதவன் வாழ்வு சிறந்த வாழ்வாக அமைய முடியாது. அதனாலேயே இல்லறம் நடாத்தும் கணவன் மனைவிக்கு அறிவுரை கூறுவதுபோல "வருவாய்க்குத் தகுந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்" என்னும் பொருளில் "வளத்தக்க வாழ்க்கை" என்று குறிப்பிட்டுள்ளார். செய்ய வேண்டிய செயல்களுக்கு செலவு செய்து, வேண்டாத செயல்களுக்குச் செலவு செய்யாதும் இருப்பதே சிக்கனமாகும். செய்ய வேண்டிய செலவினங் களுக்குச் செலவு செய்யாமல் இருப்பது சிக்கனமாகாது; அது இவறல் தன்மை (கஞ்சத்தனம்) ஆகும். ஆதலின் பொருள்களை நிலையறிந்து, நரமறிந்து செலவு செய்ய வேண்டும்; வீணாக்கக் கூடாது என்பதே வள்ளுவர் கொள்கையாகும். செல்வச் செழிப்பின் உச்சியில் இருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் கூட, "நாங்கள் பணத்தைச் செலவு செய்வோம்; ஆனால் வீணாக்கமாட்டோம்" என்று மக்கள் கூறுவதை எண்ணிப் பார்க்க வேண்டும். சிக்கனமாக இருந்து சேமித்து வைப்பது கூட்டுறவுக் கொள்கைகளில் ஒன்றாக உள்ளது என்பதையும், இதனை வள்ளுவர் அன்றே வலியுறுத்துகின்றார் என்பதையும் அறியலாம்.

## சேமிப்பு

சிக்கனமாக இருந்தால் மட்டும் போதாது; வாழ்வில் சேமிப்பும் வேண்டும். வாழ்க்கைக்குப் பொருள் மிகவும் இன்றியமையாதது; பொருள் வாழ்வின் உயிர்நிலையாகவும் உள்ளது என்பதை வள்ளுவர் உணர்ந்து கூறியுள்ளார். பொருளால் எண்ணிய செயல்களைச் செய்து முடிக்க முடியும். கையில் பொருளை வைத்திருப்பவன் ஒரு செயலைத் துணிந்தும் செய்யமுடியும்.

பொருள் நம்மிடம் இருக்குமானால் நம்மைத் தாக்க வரும் துன்பங்கள் தானாகவே அடங்கிவிடும். பகைவரும் பகைமை கொள்ள அஞ்சுவர். ஆதலின் நல்வழியில் பொருள் சேர்த்து, அறஞ்செய்து இன்பத்தோடு வாழுங்கள் என வள்ளுவர் கூறுகின்றார்.

*செய்க பொருளைச் செறுநர் செருக்குஅறுக்கும்*
*எஃகுஅதனின் கூரியது இல். (759)*

இவ்வாறு கூட்டுறவு மனப்பான்மை காகத்தில் முளைத்து, தனி மனித வாழ்வில் தளிர்த்து, இனத்தில் செழித்துச் சமுதாய அளவில் ஆலமரமாகப் படர்ந்து விளங்குவதை வள்ளுவர் கூறுகின்றார். கூட்டுறவில் ஒன்றுகூடிச் செயலாற்றுதல், பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணுதல், சிக்கனமாக இருந்து சேமித்தல் ஆகிய கொள்கைகளை வள்ளுவர் ஆங்காங்கே வலியுறுத்துவதையும், கூட்டுறவுக் கொள்கைகள் அவர் காலத்தில் நடைமுறையில் இருந்து வந்துள்ளன என்பதனையும் அறிகின்றோம். இம்முறையில் உணவுப் பொருள்களைப் பெருக்குவதும் விற்பனை செய்வதும் நிகழுமாயின் "நாடென்ப நாடா வளத்தன" என்று கூறும் குறிக்கோளான நாட்டை உருவாக்க இயலும் என்பது திண்ணம்.

## 16. மனையியல்

பெண்ணினம் போற்றுதற்குரிய பெருமை வாய்ந்த இனம். 'பெண்ணின் பெருந்தக்கது இல்' என்றும், 'பெண்ணே பெருமை யுடைத்து' என்றும் வள்ளுவர் பெண்ணினத்திற்கு உயர்வு கூறுகின்றார். பெண்ணினத்தின் கடமைகளை, அவர்கள் வீட்டிற்கும் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய தொண்டினை, குழந்தை வளர்ப்பிலும் கல்வி வளர்ச்சியிலும் செலுத்த வேண்டிய கவனத்தை, உணவிலும் உடையிலும் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய முறையினை ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார். இன்று மனையியல் கல்வியில் வீட்டு நிருவாகம், குழந்தை வளர்ப்பு, உணவு முறைகள், உடை வகைகள், சமூக இயல், ஆக்கப்பணிகள் ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. இக்கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகள் அனைத்தும் திருக்குறள் முழுமையும் மணம் பரப்புவதைக் காணலாம். உழவுக்கு மாடும் மனிதனும் துணையாவது போல மனையியலுக்கு ஆணும் பெண்ணும் துணை செய்தாக வேண்டும். ஆணாகப் பிறந்ததெல்லாம் ஆணல்ல. ஆண்மை உடையவனே ஆண். பெண்ணாகப் பிறந்ததெல்லாம் பெண்ணல்ல. பெண்மை உடையவளே பெண். இத்தகைய ஆணும் பெண்ணும் கூடி நடத்துவதே மனையியல் ஆகும். வேளாண்மைக்கு மனையியல் பெரும் துணையாதலின் இப்பகுதியில் வள்ளுவரின் மனையியல் கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

### இல்லற மாண்பு

இல்லறம் மாண்புடையது; அன்புக்கும் அறத்திற்கும் நிலைக்களமானது; கண்களிரண்டும் ஒரே பொருளைக் காண்பது போல், கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து, ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து வாழ்வது; இன்ப காலத்திலே அன்றித் துன்ப காலத்திலும்

துணையாக இருப்பது; ஒரே ஆடையைக் கூறுக்கி இருவரும் உடுக்கும் வறியநிலை வந்தபோதும் கருத்து வேறுபாடு கொள்ளாமல் வாழ்வது. இல்லறத்தில் கணவனுக்கும் மனைவிக்கும் சரிபங்கு உண்டேனும் "மனைக்கு விளக்கம் மடவார்" ஆவர். இல்லத்திலிருந்து செய்யும் அறம் இல்லறம் எனப்படுவது போல இல்லத்தை ஆள்பவர்கள் ஆதலின் அவர்கள் இல்லாள் எனப்பட்டனர். இல்லாள் எனும் சொல் சிறப்புடையது. அதற்கு எதிர்மறைச் சொல் இல்லை. இல்லான் என்னும் சொல், வழக்குஇல்லாதவன் என்னும் பொருளைத் தருமே யன்றி இல்லத்துக்குரியவன் என்ற பொருளைத் தராது. ஆதலின் எதிர் மறைச் சொல் இல்லாத ஒரு சொல்லுக்கு உரிமை உடையவர்கள் பெண்கள். அவர்கட்கு எனச் சில கடமைகள் உண்டு. ஒரு பெண் கற்பு நெறியால் தன்னையும், நற்செயல்களால் கணவனையும், நற்பண்புகளால் குடும்பப் பெருமையையும் காப்பதோடு கடமையைச் செய்வதில் தவரு தவளாகவும் இருத்தல் வேண்டும்.

> தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண். (56)

இத்தகைய மங்கை நல்லாளே பெண். அவளே இல்லாள். அவள் நடாத்தும் அறமே இல்லறம். அதுவே மாண்புடையது.

## இல்ல அமைப்பு

மாண்புடைய இல்லறத்தை நடாத்துதற்கு ஓர் இருப்பிடம் வேண்டும். அவ்விருப்பிடமே இல்லம் எனப்படுவது. அவ்வில்லமும் நல்லில்லமாக இருத்தல் வேண்டும். அக்காலத்தில் இல்லங்கள் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்தன என்பது பற்றித் திருவள்ளுவர் விளக்கி யுள்ளார். வீட்டை 'இல்' என்றும் 'மனை' என்றும் வழங்கினர்கள் என்பதைத் 'தம்மில் இருந்து', 'மனைத்தக்க' என்ற சொற்களால் அறிய முடிகின்றது. அவ்வில்லங்கள் சிறியவையாகவும் தூண்கள் அமைத்துக் கட்டப்பட்டுப் பெரியவையாகவும் இருந்தன. சால்பு என்னும் மிகப் பெரிய கட்டடத்தை அன்பு, பழிபாவங்கட்கு அஞ்சும் பண்பாகிய நாணம், பிறர்க்கு உதவும் ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மை ஆகிய ஐந்து தூண்களும் தாங்கிக்கொண்டிருப்பதாகக் கூறியிருப்பதால் தூண் களைக்கொண்டு அக்காலக் கட்டடக் கலையை உய்த்து உணரலாம்.

> அன்புநாண் ஒப்புரவு கண்ணேட்டம் வாய்மையொடு
> ஐந்துசால்பு ஊன்றிய தூண். (983)

இல்லங்கள் பல அறைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தன. அவ்வறைகள் வெளிச்சமும் காற்றோட்டமும் உடையவை. இருட்டான அறைகளும் இருந்தன என்பதை வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். உறங்குவதற்கெனப் படுக்கையறை தனியாக அமைக்கப்பட்டிருந்தது. சிறப்பான படுக்கைகள் அமைத்துக்கொண்டு உறங்கினார்கள். அப்படுக்கைகளைத் தூய்மையாக வைத்துக்கொண்டதையும் வள்ளுவர் கூறுகின்றார். இக் கருத்துக்களை "கழாக்கால் பள்ளியுள் வைத்தற்றால்" என்ற தொடர் வழி அறியலாம். இல்லங்களுக்கும் அறைகளுக்கும் கதவும் தாழ்ப்பாளும் பொருத்தி இருந்தார்கள். இல்லங்களின் கழிவுநீர் வெளியில் செல்லச் சாக்கடைகள் அமைக்கப்பட்டிருந்தன. அதனை 'அங்கணம்' என்ற சொல்லால் குறிக்கின்றார். மேற்கூறிய கருத்துக்களைக் கொண்டு அக்கால வாழ்க்கை முறைகளுக்கேற்ப இல்லங்களை வசதியாக அமைத்துக்கொண்டு வாழ்ந்ததையும் அவைகளைத் தூய்மையாக வைத்துக் கொண்டதையும் அறிகின்றோம்.

### வீட்டு நிருவாகம்

*மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.* **(51)**

குடும்பத்தை நடாத்திச் செல்லும் பொறுப்பில் பெண்ணிற்கே பெரும் பங்கு உண்டு. கணவனுடைய வருவாய்க்குத்தக வாழ்வதே பெண்ணின் கடமை என்பதை வள்ளுவர் வற்புறுத்திக் கூறியுள்ளார். வாழ்வதற்கு வேண்டிய இன்றியமையாத பொருட்களுக்கு மட்டுமே செலவிடுதல் வேண்டும். பொருளைக் கொடுத்துப் பொருளை வாங்கும் பண்டமாற்றுப் பழக்கமே அன்று இருந்து வந்தது. ஆதலின் இன்றியமையாத பொருள்களை மட்டுமே தேடி வாங்கும் நிலை ஏற்பட்டது. தேவையில்லாத பொருள்களைச் சேர்த்து வீட்டைக் கிடங்காக மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதை நன்கு உணர்ந்திருந்தனர். இல்லாத பொருளுக்காக ஏங்கும் நிலை என்றும் இருத்தல் கூடாது. அவ்வாறு ஏங்குவதே வறுமையாகும். ஆதலின், இதனை அறிந்து நடப்பவளே வளத்தக்க வாழ்க்கைத் துணை என்று வள்ளுவர் கூறுகின்றார்.

வளமான ஒரு குடும்பம் எதிர்பாராத வகையில் வளமிழந்து விட்டது. அந்தக் குடும்பத்தலைவி, வளமான வாழ்வு போய்விட்டதே என ஏங்கி அழவில்லை. தன் மகளின் வறுமை நிலையைக் கண்ட தந்தை, அவளுக்குத் தேவையான பொருள்களை அனுப்புகின்றார். அவள் அதை

ஏற்றுக் கொள்ளவில்லை. அதனை ஏற்றுக் கொண்டால் தன் கணவனின் ஆற்றலுக்கு இழுக்கு நேரிடுமே எனக் கருதி மறுத்து விடுகின்றாள். தங்கள் இல்லத்தில் இருப்பது ஒரு பொழுது உணவாயினும் அதனைக் கணவனும் மனைவியும் மகிழ்வோடு உண்டு வாழ்கின்றனர். வீட்டு நிருவாகத்தில் இத்தகைய மனத்திண்மை வேண்டும். இதனை,

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. (53)

என்ற குறளால் விளக்குகின்றார். இத்தகைய பெண்ணை மனைவியாகப் பெற்ற ஆண்மகனே ஏறுபோல் பீடு நடை போடும் சிறப்பினைப் பெற்றவனாவான்.

வருவாய்க்குத்தக வாழ்வதுபோல், முன்பே தனக்கு அமைந்த பொருளின் அளவை அறிந்தும் வாழ்தல் வேண்டும். இப்பண்பு இரு பாலார்க்கும் இன்றியமையாததாகும். கணவன் அளவைக் கடந்து வாழும் மனநிலை உடையவனாயின் மனைவி அவனை அன்பால் கட்டுப் படுத்துதல் வேண்டும். இல்லாவிடின் அவ்வாழ்வு கெட்டழிந்து போய் விடும் என்பதை,

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். (479)

என்ற குறளால் வற்புறுத்துகின்றார்.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் பண்பில் தமிழர்கள் தலைசிறந்தவர்கள். சாவா மருந்தே எனினும் விருந்திருக்கத் தனித்து உண்ணாத பண்புடையவர்கள். அவ்வழிவந்த தமிழர்கள் குடும்பத்தின் வருவாய்க்குத்தக வாழ்வதோ டன்றி விருந்தினர் பேணல், சுற்றம் தழுவி வாழல் ஆகிய பழம்பெரும் பண்புகளையும் போற்ற வேண்டும். இன்சொல் பேசியும் இன்முகம் காட்டியும் அனைவரையும் பேணவேண்டும். கோவலன் பிரிந்திருந்ததால், விருந்தினர்களுக்கு உணவிட முடியாமல் போய் விட்டதே என்று கண்ணகி வருந்தியதை "விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்ற இளங்கோவின் உணர்வு மிக்க தொடரால் உணரலாம். வறுமையுள் பெரிய வறுமையாவது விருந்தினர்கள் இல்லாமல் வாழ்தலே. ஆதலின், அமிழ்தாயினும் கூழாயினும் பிறரோடு சேர்ந்து உண்பதே பெரு மகிழ்ச்சியைக் கொடுப்பதாகும்.

மேலும் விருந்து போல் பேணப்பட வேண்டியது சுற்றம். சுற்றம் தழுவி வாழாத வாழ்வு சிறந்த வாழ்வாகாது. அத்தகையவர் பெற்ற செல்வம் நன்றியில்லாத செல்வமாகக் கருதப்படும். ஆதலின், இவை இரண்டும் இல்வாழ்வார்க்கு இன்றியமையாத கடமைகளாகும். இவைகளையே வள்ளுவர் "மனைத்தக்க மாண்பு" ஆகக் கொள்ளுகின்றார்.

**குழந்தை வளர்ப்பு**

குழந்தைகளை வளர்ப்பதிலும் அவர்களுக்குக் கல்வி அளிப்பதிலும் மிகுந்த கருத்தைச் செலுத்த வேண்டும். பெற்றுவிடுவதோடு மட்டும் பெண்ணின் கடமை முடிந்து விடுவதில்லை; குழந்தைகளைப் பேணி வளர்த்திடவும் வேண்டும். அவர்களைக் கல்வி கேள்விகளில் வல்லவர்களாக ஆக்குதல் வேண்டும். அதுவே தாய் தந்தையரது தலையாய கடமை என்பதை 'அறிவறிந்த மக்கள்', 'தம்மின் தம் மக்கள் அறிவுடைமை' என்னும் தொடர்களால் வள்ளுவர் உணர்த்துகின்றார்.

குழந்தைகளை அன்பால் வளர்ப்பதே சிறந்தது என்பதை வள்ளுவர் குறிப்பால் உணர்த்துகின்றார். குழந்தைகள் அளாவிய உணவை உண்பதும், அவர்கள் மழலை மொழியைக் கேட்பதும், அவர்கள் உடலைத் தழுவுவதும் பெற்றோர்க்கு இன்பம் பயப்பதாகும். இவ்வாறு நெருங்கிப் பழகி அன்புகாட்டி வளர்க்கப்பட்ட குழந்தைகள் வளர்ந்தபோது, தாம் பெற்ற அன்பை எல்லாரிடத்தும் சொரிந்து நாட்டிற்கு நலம் விளைக்கும் நன்மக்களாக விளங்குகின்றார்கள். ஆனால் குழந்தைகளிடத்தில் அன்பு செலுத்தவும் நேரமில்லாமல் தாயும் தந்தையும் பொருள் ஈட்டுவதில் முனைந்துள்ள இக்காலத்தில், அன்புக்கு இடமில்லை. குழந்தைகள் அன்பை அறியாமல் வளர்கின்றன. வளர்ந்தபின் அன்பற்ற செயல்களைச் செய்கின்றன; அதனால் தீமைகள் விளைகின்றன. ஆதலின் பெற்றோர்கள் குழந்தைகளிடம் அன்பு செலுத்தி வளர்ப்பதில் கருத்துச் செலுத்த வேண்டுமென்பதை வள்ளுவம் வலியுறுத்துகின்றது.

குழந்தைகளை அன்போடு வளர்ப்பதைப் போல அறிவோடும் வளர்த்தல் வேண்டும். அறிவற்றவர்களை உலகம் போற்றுவதில்லை. அவர்கள் உலகத்திற்குப் பயன்படுவதும் இல்லை. ஆனால் அதற்கு மாறாக அறிவுடையவர்களை எல்லாம் உடையவர்கள் என்று போற்றுகின்றார் வள்ளுவர். அவ்வறிவும் வெறும் ஏட்டறிவாக இருந்திடாமல் உலகுக்குப் பயன்படும் அடிப்படை அறிவாக விளங்குதல் வேண்டும். கற்பவர்கள் தாம்கற்ற கல்வியின் துணைகொண்டு வாழ்க்கையில்

தாமாகத் தனித்து நின்று வாழும் ஆற்றல் பெற வேண்டும். அத்தகைய கல்வியே வள்ளுவர் வலியுறுத்தும் கல்வியாகும். இக்கருத்தினைக் "கற்க", கற்றதையே துணையாகக் கொண்டு வாழ்க்கையில் "நிற்க" என்ற இரு சொற்களால் விளக்கியுள்ளார். இதனை உணர்ந்து குழந்தைகட்குக் கல்வி புகட்ட வேண்டுவது பெற்றோர்களின் கடமையாகும்.

**உணவு**

பெண்கள் உணவை ஆக்கிப்படைப்பதில் வல்லவர்களாக இருத்தல் வேண்டும். வள்ளுவர் சுவையைச் செவிச்சுவை என்றும் வாய்ச்சுவை என்றும் இரண்டாகப் பகுத்துக் கூறுவதால் சுவையான உணவைச் செய்து கொண்டார்கள் என்பதை அறியலாம். ஒருதலைவி, தன் கணவனுக்குச் சுவையான மோர்க்குழம்பு வைத்து உணவு இட்டதும் அதனை உண்டு அவன் பெரிதும் மகிழ்ந்து பாராட்டியதும் இலக்கியத்தில் குறிப்பிடப்படுகின்றது. சுவையாக அன்றிச் சூடாகவும் உண்ணும் பழக்கம் இருந்தது என்பதை "வெய்து உண்டல்" என்ற சொல்லால் குறிக்கின்றார் வள்ளுவர். இன்று சத்துணவுகள் என்று கண்டு போற்றப்படும் பால், நெய், மீன், இறைச்சி, காய்கனி ஆகிய அனைத்தும் மக்கள் அன்றே உண்டு வாழ்ந்தனர் என்பதையும் அறிகின்றோம்.

உணவு உண்ணுவதில் சிறந்த கோட்பாடுகளைக் கொண்டு இருந்ததையும் வள்ளுவர் தெளிவு படுத்துகின்றார். உண்டது செரித்த பிறகே மீண்டும் உண்ணும் வழக்கம் இருந்தது. அவ்வாறு உண்ணுகின்றவர்களுக்கு உடல் நலமும் கெடுவதில்லை; மருந்துண்ண வேண்டிய நிலையும் ஏற்படுவதில்லை என்பதை,

> மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
> அற்றது போற்றி உணின். (942)

> அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல
> துய்க்க துவரப் பசித்து. (944)

என்ற குறட்பாக்களால் விளக்குகின்றார்.

இல்லத்தை ஆளும் மங்கை, "குழந்தைகள் எதை உண்ணும், கொண்டவர்க்கு எது பிடிக்கும், தண்டு ஊன்றி நடக்கும் மாமன், மாமிக்குத் தக்கது என்ன" என்று ஆராய்ந்து, அவரவர்க்கு ஏற்ற உணவைத்

தேர்ந்து கொடுத்தாள் என்பதைக் "கடைப்பிடித்து" என்ற சொல்லால் விளக்குகின்றார். பெருநிலை உணவுகளே அன்றி, மிகவும் எளிமையான கூழ் குடித்தும் வாழ்ந்தவர்கள் உண்டு என்பதையும் வள்ளுவர் கூறியுள்ளார்.

**உடை**

"உண்பது நாழி உடுப்பவை இரண்டே" என்பது பண்டைய கொள்கை. நாழி அளவு உணவும் இரண்டு உடுப்புகளுமே உயிர் வாழ்வதற்கும் மானம் காத்தற்கும் அடிப்படையானவை. நாகரிகம் வளர வளர, வாழ்வு வளம் பெறப்பெற மானம் காத்தல் என்ற நிலைமாறி அழகுபட அணிதல் என்ற நிலை ஏற்பட்டது. ஆண்கட்கென்றும் பெண்கட்கென்றும் தனித் தனி உடைகள் தோன்றலாயின. அவைகளை 'உடுக்கை' என்றும் 'துகில்' என்றும் வேறுபடுத்திக் காட்டுகின்றார் வள்ளுவர். சிறப்பாக உடுத்துக்கொள்பவர்களைக் கண்டு கயவர்கள் பொறாமைப் படுவர் என்பதையும் வள்ளுவர் கூறியுள்ளார். ஆதலின், தூய்மையும் எளிமையும் சிறப்பும் தோன்ற உடுக்கும் பழக்கம் இருந்தது என்பதை அறிய முடிகின்றது.

**மக்கள் தொண்டு**

ஔவையார், மணிமேகலை போன்ற பெண்மணிகள் மக்கட்குத் தொண்டு செய்தனர் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. இத்தகைய தொண்டினைத் திருக்குறளில் வெளிப்படையாகக் கூறாவிடினும் குறிப்பாக வள்ளுவர் அறிவுறுத்துகின்றார் என்பதை நன்கு அறியலாம், துறவிகளைப் பேணுவதும் ஏழைகளைக் காப்பதும் ஆதரவு அற்றவர் கட்கு ஆதரவாக இருப்பதும் இல்லறத்தார்க்குரிய கடமைகளாகக் கூறுகின்றார் வள்ளுவர்.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. (42)

இத்தகைய கடமைகளை நிறைவேற்றுவதில் தலைவனுக்குப் பெரிதும் துணை நிற்பது, இல்லாளின் கடமையாகும். ஏழைகள் வாழும் பகுதிகட்குச் சென்று அவர்கள் வாழிடங்களைத் தூய்மை செய்தல், மருத்துவ உதவி செய்தல், சாலையைச் செப்பனிடுதல், கல்வி கற்பித்தல் முதலியவற்றை இன்று மக்கள் தொண்டாகக் கொள்கின்றோம். இவற்றையே வள்ளுவர் இல்லறத்தாரின் கடமைகளாகக் கூறியுள்ளார்.

மேலும், கற்க வாய்ப்பில்லாதவர்கள் கற்றவர்கள் கூறும் கருத்துக்களைக் கேட்க வேண்டும் என்பதை வற்புறுத்தவே கேள்விச் செல்வத்தின் சிறப்பை விளக்கிக் கூறியுள்ளார். கல்வியின் பெருமையையும் கல்லாமையின் இழிவையும் எடுத்து விளக்கிக் கற்கத் தூண்டுவதே பெருந் தொண்டாகும். "கற்றிலன் ஆயினும் கேட்க" என்பது வள்ளுவரின் வேண்டுகோள். கல்லாதவர்கள் கேட்க வேண்டும் என்று கூறுவதால் கற்றவர்கள் அவர்கட்குக் கற்பிக்க வேண்டும் என்பது குறிப்பாகும். இக்கல்விப் பணியைக் கற்றோர் யாவரும் செய்யலாம். ஆதலின், ஒல்லும் வகையான் மக்கட்கு உதவுவதே தொண்டாகும் என்பதும், இத்தகைய அறப்பணிகளை, முடிந்தபோது முடிந்த அளவு செய்ய வேண்டும் என்பதும் வள்ளுவர் கருத்தாகும்.

இவ்வாறு வள்ளுவர், இல்லறத்தின் பெருமையையும், ஆணும் பெண்ணும் இணைந்து நின்று வீட்டிற்கும் நாட்டிற்கும் ஆற்ற வேண்டிய தொண்டினையும் கூறி மனையியல் கோட்பாடுகளை விளக்கியுள்ளார்.

# பயன்படுத்தப் பெற்ற நூல்கள்


1. தொல்காப்பியம் — எழுத்து — இளம்பூரணர் உரை
2. தொல்காப்பியம் — எழுத்து — நச்சினார்க்கினியர் உரை
3. தொல்காப்பியம் — பொருள் — இளம்பூரணர் உரை
4. தொல்காப்பியம் — பொருள் — நச்சினார்க்கினியர் உரை
5. தொல்காப்பியம் — பொருள் — பேராசிரியர் உரை
6. பிங்கலம், திவாகரம், சூடாமணி — நிகண்டுகள்
7. பத்துப்பாட்டு — கழக வெளியீடு
8. எட்டுத் தொகை — கழக வெளியீடு
9. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் — கழக வெளியீடு
10. திருக்குறள் — பரிமேலழகர் உரைவிளக்கம் — வை. மு. கோபால கிருட்டிணமாச்சாரியார்
11. திருக்குறள் — பரிமேலழகர் உரைவிளக்கம் — கோ. வடிவேலு செட்டியார்
12. திருக்குறள் — உரைவளம் — ச. தண்டபாணி தேசிகர்
13. திருக்குறள் — உரைக்கொத்து — சி. பட்டுச்சாமி ஓதுவார்
14. திருக்குறள் — ஆராய்ச்சிப்பதிப்பு — கி. வா. சகநாதன்
15. திருக்குறள் — உரைவேற்றுமை — கோ. சாரங்கபாணி
16. திருக்குறள் — தெளிவுரை — டாக்டர் மு. வரதராசன்
17. சிலப்பதிகாரம் — அடியார்க்கு நல்லார் உரை
18. மணிமேகலை — ந. மு. வே. நாட்டார் உரை
19. கம்பராமாயணம் — பாலகாண்டம், அயோத்தியாகாண்டம்
20. தாயுமானவர் பாடல்கள் — தாயுமானவர்
21. மனோன்மணீயம் — பேராசிரியர் சுந்தரம்பிள்ளை
22. பாரதியார் கவிதைகள் — சுப்பிரமணிய பாரதி
23. குடும்ப விளக்கு — புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்
24. அகமும் புறமும் (அகம்) — அ. ச. ஞானசம்பந்தம்
25. எண்ணக்குவியல் — கி. ஆ. பெ. விசுவநாதம்
26. கலைக்களஞ்சியம் — தொகுதி ஐந்து

27. சங்க இலக்கியத்தில் இயற்கை (ஆங்கிலம்) — டாக்டர் மு. வரதராசன்
28. சங்க இலக்கியத்தில் செடி கொடி விளக்கம் — பி. எல். சாமி
29. சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம் — பி. எல். சாமி
30. தமிழக வரலாறு அறுவர் சொற்பொழிவு — கழக வெளியீடு
31. தமிழின் சிறப்பு — கி. ஆ. பெ. விசுவநாதம்
32. திருவள்ளுவர் (அ) வாழ்க்கை விளக்கம் — டாக்டர் மு. வரதராசன்
33. திருவள்ளுவர் கண்ட நாடும் காமமும் — டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம்
34. திருக்குறள் அமைப்பும் அழகும் — ச. தண்டபாணி தேசிகர்
35. திருவள்ளுவர் — நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்
36. திருவள்ளுவர் — டாக்டர் தனிநாயக அடிகள்
37. திருக்குறள் கனிகள் கட்டுரைத் தொகுப்பு — தமிழுறவு வெளியீடு
38. திருக்குறள் சொற்பொழிவுகள் (ஆங்கிலம்) — சென்னைப் பல்கலைக்கழகம்
39. தொல்காப்பிய ஆராய்ச்சி — டாக்டர் சி. இலக்குவனார்
40. பெண்ணின் பெருமை — திரு. வி. கலியாணசுந்தரனார்
41. வேளாளர் நாகரிகம் — மறைமலையடிகள்